# உதயன்

விலை ரூபா 7.00

சுடர்18 வள்ளுவர் ஆண்டு 2033 மார்கழி 15 திங்கட்கிழமை (30-12-2002) UTHAYAN - A Lively National Tamil Daily கதிர்:34


## ஆலயங்களில் இனி பூஜை முடிய தமிழில் ஆசீர்வாதம் கிடைக்கும்

### சிவாச்சாரியார்கள் ஒன்றுகூடி முடிவு

யாழ்ப்பாணம்,டிசெ.30

குடாநாட்டில் உள்ள இந்து ஆலயங்களில் தினமும் இடம்பெறும் பூஜை வழிபாடுகள் நிறைவுபெற்றதும் அங்கு பூஜைகளை நடத்துகின்ற சிவாச்சாரியார்கள் அடியார்களுக்கு தமிழில் ஆசீர்வாதம் வழங்குவர்.

சிவாச்சாரியார்கள் ஒன்றுகூடி நேற்று நடத்திய கலந்துரையாடலில் இந்த தீர்மானம் எடுக்கப்பட்டது.

சர்வதேச இந்து குருமார் ஒன்றியத்தின் ஏற்பாட்டில் நல்லூர் நாவலர் மணிமண்டபத்தில் நடைபெற்ற கலந்துரையாடலில் இந்து கலாசார அமைச்சர் தி.மகேஸ்வரனும் கலந்துகொண்டார். (14ஆம் பக்கம் பார்க்க)

## நோய்த்தடுப்பு நடவடிக்கைகளில் பொது மக்கள் அக்கறையில்லை

### இதனாலேயே காய்ச்சல் பரவுகிறது என்கிறார் ஆஸ்பத்திரி பணிப்பாளர்

யாழ்ப்பாணம்,டிசெ.30

குடாநாட்டில் தற்பொழுது வேகமாகப் பரவிவரும் காய்ச்சலைக் கட்டுப்படுத்துவதற்குரிய தடுப்பு நடவடிக்கைகளில் பொதுமக்கள் போதிய அக்கறை செலுத்தாமல் இருக்கிறார்கள். அத்துடன்,இதுகுறித்து பொது மக்கள் மத்தியில் விழிப்புணர்வை ஏற்படுத்தும் நடவடிக்கைகளில் ஆரம்ப சுகாதார வைத்தியத் தொண்டர்கள் மற்றும் சுகாதார வைத்திய அதிகாரிகள் ஆர்வத்துடன் செயற்படவில்லை.

இவற்றினாலேயே குடாநாட்டில் காய்ச்சலினால் பீடிக்கப்படுவோரின் எண்ணிக்கை முன்னெப்போதும் இல்லாதவாறு அதிகரித்திருக்கிறது.

இவ்வாறு தெரிவித்திருக்கின்றார் யாழ்.போதனாவைத்தியசாலைப் பணிப்பாளர் எஸ்.சதுர்முகம்.

தற்பொழுது குடாநாட்டில் டெங்கு (2ஆம் பக்கம் பார்க்க)

# மீள் குடியமர்வு பற்றியே அடுத்த சுற்றுப் பேச்சு!

## மக்களின் வாழ்வுப் பிரச்சினைக்கே முதலிடம் லண்டனில் அன்ரன் பாலசிங்கம் அறிவிப்பு



லண்டன்,டிசெம்பர்30

**இன்னும் ஐந்து நாள்களில் தாய்லாந்தில் நடைபெறவிருக்கும் நான்காவது சுற்றுப் பேச்சுக்களின் போது, குடாநாட்டில் உயர் பாதுகாப்பு வலயங்களாக ஆக்கிரமிக்கப்பட்டிருக்கும் வாழ்விடங்களில் மக்களை மீளக்குடியமர்த்தி இயல்பு நிலையை ஏற்படுத்துவது பற்றியே முக்கியமாகப் பேசுவோம்.**

**விடுதலைப் புலிகள் தரப்புக் குழுவின் தலைவரும் அரசியல் ஆலோசகருமான அன்ரன் பாலசிங்கம் இவ்வாறு தெரிவித்திருக்கிறார்.**

மக்களின் வாழ்க்கைப் பிரச்சினை தான் முக்கியமானது. அதற்கே முதலிடம் அளிப்போம். மக்கள் பெரும் கஷ்ரங்களை அனுபவித்துக் கொண்டிருக்கும் வேளையில் அரசியல் கோட்பாடுகள் பற்றி பேசிக் கொண்டிருப்பதில் அர்த்தமில்லை. இது பொருத்தமற்றதும் கூட. முதலில் மக்களின் (14ஆம் பக்கம் பார்க்க)

## பாலா மறுப்பு

லண்டன்,டிசெ.30

இராணுவத்தின் நிலைப்பாட்டை நியாயப்படுத்தியும் அதற்கு ஆதரவு தெரிவித்தும் கண்காணிப்புக்குழுத் தலைவர் மேஜர் ஜெனரல் ரொண்ட் புருகோவிட் கடந்த வாரம் அறிக்கை வெளியிட்டபோது அதை நிராகரித்து அவருக்கு கடிதம் எழுதினேன். அவ்வளவுதான். மற்றப்படி அவருடன் நான் தொலைபேசியில் பேசியது கிடையாது.

இப்படி அன்ரன் பாலசிங்கம் நேற்று கொழும்பு ஆங்கில வாரப் பத்திரிகை ஒன்று வெளியிட்ட முன் பக்க செய்தியை மறுத்திருக்கிறார். அந்தச் செய்தியை உண்மையற்றது; ஆதாரம் எதும் இல்லாதது என்றும் அவர் வர்ணித்தார்.

அன்ரன் பாலசிங்கம் கண்காணிப் (14ஆம் பக்கம் பார்க்க)

## நோர்வே பிரதமருக்கு ஜனாதிபதி கடிதம்

கொழும்பு,டிசெ.30

கொழும்பிலுள்ள நோர்வே தூதரகம் விடுதலைப் புலிகளுக்கு வானொலி ஒலிபரப்புக் கருவியைப் பெற்றுக் கொடுக்க உதவியிருப்பது தொடர்பாக ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க நோர்வே பிரதமர் பொன்டேவிக்கு ஒரு கடிதம் அனுப்ப இருக்கிறார் எனக்கூறப்படுகிறது.

நடந்த சம்பவங்களை நோர்வே பிரதமருக்கு அறிவிப்பதே இக்கடிதத்தின் முக்கிய நோக்கம் எனவும் குறிப்பிட்ட விடயத்தில் தலையிடவோ அல்லது உடனடி நடவடிக்கை எடுக்கவோ கோரிக்கை விடுப்பது அல்ல என்றும் அறியப்படுகிறது.

(ஐ)

### உயர் பாதுகாப்பு வலயங்கள் பற்றிய பிரச்சினை

## ஜனாதிபதி, பிரதமர் தனித்தனியே உயர் அதிகாரிகளுடன் ஆலோசனை

கொழும்பு,டிசெ.30

அரசுக்கும் விடுதலைப்புலிகளுக்கும் இடையில் நான்காவது சமாதானப் பேச்சுக்கள் எதிர்வரும் ஜனவரி 6ஆம் திகதி தாய்லாந்தில் ஆரம்பமாக இருக்கும் அதேவேளை, வடக்கில் உள்ள உயர் பாதுகாப்பு வலயங்கள் தொடர்பாக இருதரப்பினருக்குமிடையே எழுந்துள்ள கருத்து முரண்பாடுகள் தொடர்ந்து நீடித்துவருகின்றன.

இக்கருத்து முரண்பாடுகள் குறித்து ஜனாதிபதி சந்திரிகாவும் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவும் ஏற்கனவே தனித்தனியாக உயர் பாதுகாப்பு அதிகாரிகளுடனும் அமைச்சர்களுடனும் ஆலோசனைகள் நடத்தியிருக்கின்றனர்.

(14ஆம் பக்கம் பார்க்க)

## அட்டாளைச்சேனையில் பதற்றம்; பாதுகாப்புக்கு பொலீஸார் குவிப்பு!

### இரு கோஷ்டிகள் மோதல்; பொலீஸ் எச்சரிக்கை வேட்டு

அட்டாளைச்சேனை,டிசெ.30

அட்டாளைச்சேனையில் நேற்று பதற்றம் நிலவியது. மக்கள் நடமாட்டமின்றி அப்பிரதேசம் முற்பகலில் வெறிச்சோடியது. அக்கரைப்பற்று - அட்டாளைச்சேனை பிரதான வீதியில் பொலீஸார் பாதுகாப்புக்காக குவிக்கப்பட்டிருந்தனர். மதுரயடி, குவாற்கந்தோரடி, ஆகிய இடங்களில் பொலிஸார் வீதித் தடைகளை ஏற்படுத்தியிருந்தனர்.

அட்டாளைச்சேனையில் அமைச்சர் ரவூப் ஹக்கீம் கூட்டம் நடத்தவிருந்த வேளையிலேயே இப்பதற்றம் நிலவியது.

நேற்றுமுன்தினம் அட்டாளைச் (14ஆம் பக்கம் பார்க்க)

## உரும்பிராயில் நேற்று மறியல் போராட்டம்!

யாழ்ப்பாணம்,டிசெ.30

உரும்பிராய் சந்திரோதய வித்தியாசாலை மாணவியான சிறுமியின் மர்ம மரணத்திற்கான காரணங்களை கண்டறிவதற்கான விசாரணைகளைத் துரிதப்படுத்தி, குற்றவாளிகளை கடுமையாகத் தண்டிக்க வேண்டுமெனக் கோரி உரும்பிராயில் நேற்று மறியற் போராட்டம் ஒன்று நடத்தப்பட்டது.

வித்தியாசாலையின் முன்பாக - வீதியில் - நேற்றுக்காலை ஒன்று (14ஆம் பக்கம் பார்க்க)

### மர்ம மரணத்தில் சந்தேகம் வலுக்கிறது

## மேலதிக பரிசோதனைகளுக்காக சிறுமியின் உடற்கூறு கொழும்புக்கு

### கழுத்துப்பகுதியில் நெரிக்கப்பட்ட அடையாளம்!!

யாழ்ப்பாணம்,டிசெ.30

கடந்த வெள்ளிக்கிழமை பாடசாலைக் கிணற்றுக்குள்ளிருந்து சடலமாக மீட்கப்பட்ட உரும்பிராய் சந்திரோதய வித்தியாசாலை மாணவி கொலை செய்யப்பட்டாரா என்பதை பரிசோதிப்பதற்காக அவரது சில உடற்கூறுகள் நேற்று கொழும்புக்கு அனுப்பிவைக்கப்படவிருந்தன.

செல்வராசா துவாரகா (வயது -10) என்ற இந்த மாணவியின் பிரேத பரிசோதனையை யாழ்.போதனா வைத்தியசாலை சட்ட வைத்திய அதிகாரி நேற்று நடத்தினார்.

சடலத்தின் கழுத்துப்பகுதியில் அடையாளம் ஒன்று காணப்பட்டதாகக் கூறப்படுகிறது. இதனால் சிறுமி கழுத்து நெரிக்கப்பட்டுக் கொலை செய்யப்பட்டிருக்கலாம் என்ற சந்தேகம் வலுவடைந்திருக்கிறது.

இதனையடுத்து, சிறுமியின் கழுத்துப் பகுதி 'எக்ஸ் - றே' எடுத்துப் பார்க்கப்பட்டது. முன்தொண்டையின் உட் பகுதி நெரிக்கப்பட்டதற்கான அடையாளங்கள் 'எக்ஸ்-றே' நிழற்படத்தில் தென்பட்டதாகவும் கூறப்படுகிறது.

இதனைத் தொடர்ந்து சிறுமியின் சடலத்திலிருந்து சுவாசப்பை, ஈரல், மூளை, கழுத்தின் உட்பகுதி மற்றும் இரைப்பை ஆகிய உறுப்புகள் எடுக்கப்பட்டு மேலதிக பரிசோதனைக்காக (14ஆம் பக்கம் பார்க்க)

## யாழ். நகரில் மீண்டும் முஸ்லிம் அங்காடி வியாபாரிகள் சங்கம்

யாழ்ப்பாணம்,டிசெ.30

யாழ்நகரில் வியாபார நடவடிக்கைகளை ஆரம்பித்திருக்கும் முஸ்லிம் அங்காடி வியாபாரிகள் ஒன்றுகூடி சங்கம் ஒன்றை ஸ்தாபித்திருக்கின்றனர்.

1990ஆம் ஆண்டுக்கு முன்னர் யாழ்.மாநகர பகுதியில் செயற்பட்டு வந்த 'சைனா-பஸார்' - முஸ்லிம் அங்காடி வியாபாரிகள் சங்கமே இப்போது மீளப்புதுப்பிக்கப்பட்டிருப்பதாக சங்கத் (2ஆம் பக்கம் பார்க்க)

இளைய தலைமுறையின் இதயம் கவரும் இன்றைய நாளிதழ்

# பொன்னாலை மக்கள் இன்று முதல் மறியல்!

வட்டுக்கோட்டை,டிசெ.30

பொன்னாலைப் பகுதியிலிருந்து கடற்படையினரை வெளியேற்றி அங்கு தங்களை மீளக்குடியமர அனுமதிக்குமாறு கேட்டு அப்பிரதேச மக்கள் இன்று முதல் தொடர் மறியற் போராட்டத்தை ஆரம்பிக்கின்றனர்.

பொன்னாலை, காட்டுப்புலம் ஆகிய பகுதிகளைச் சேர்ந்த மக்கள் இன்று காலை முதல் வலிகாமம் மேற்கு சங்கானை பிரதேச செயலகம் முன்பாக மறியற் போராட்டத்தை ஆரம்பிப்பர்.

இப்பிரதேச மக்கள் ஒன்றியம் ஏழு அம்சக் கோரிக்கைகள் அடங்கிய மகஜர் ஒன்றை கடந்த 17ஆம் திகதி அரச அதிபரிடம் கையளித்திருந்தது என்றும் -

அந்தக் கோரிக்கைகளுக்கு சாதகமான பதில் கிடைக்காததை அடுத்தே தொடர்ச்சியான மறியற் போராட்டத்தை தாங்கள் இன்று முதல் ஆரம்பிப்பதாகவும் - மக்கள் ஒன்றியத்தின் தலைவர் ந.பொன்ராசா தெரிவித்தார்.

பொன்னாலை மக்கள் ஒன்றியம் நடத்தவுள்ள மறியற் போராட்டத்துக்கு எம்.ஜி.ஆர். மறுமலர்ச்சிக் கழகம் முழு ஆதரவு தெரிவித்து அறிக்கை விடுத்திருக்கின்றது. (ஐ-ரி-ரி)





**நேற்று நல்லூர் நாவலர் மணிமண்டபத்தில் இடம்பெற்ற சர்வதேச இந்து குருமார் ஒன்றியத்தின் கலந்துரையாடலின்போது எடுக்கப்பட்ட படங்கள்.**

**இணுவில் தர்மசாஸ்தா குருகுல அதிபர் தா.மகாதேவக் குருக்கள், சர்வதேச இந்துமத குரு பீடாதிபதி ஐ.மகேஸ்வரக் குருக்கள், இந்து கலாசார அமைச்சர் தி.மகேஸ்வரன் ஆகியோரை முதற்படத்திலும் கலந்துரையாடலில் கலந்துகொண்ட சிவாச்சாரியார்களில் ஒரு பகுதியினரை அடுத்துள்ள படத்திலும் காணலாம்.** ***(படங்கள்:வசந்தன்)***

# நல்லதொரு சர்வாதிகாரியாக செயலாற்ற ஹக்கீம் விருப்பம்!

## சாய்ந்தமருது மயானத்தடிக் கூட்டத்தில் நள்ளிரவு அறிவிப்பு

சாய்ந்தமருது,டிசெ.30

ஸ்ரீ லங்கா முஸ்லிம் காங்கிரஸை வழி நடத்திச் செல்வதற்கு தாம் நல்லதொரு சர்வாதிகாரியாகச் செயற்பட விரும்புவதாக அமைச்சர் ரவூப் ஹக்கீம் நேற்றுமுன்தினம் நள்ளிரவு சாய்ந்தமருது மயானத்தடியில் நடைபெற்ற கூட்டத்தில் அறிவித்தார். அதற்கு அனைவரும் ஆதரவும், அங்கீகாரமும் அளிக்கவேண்டும் என்று அவர் வேண்டுகோளும் விடுத்திருக்கிறார்.

மாலை 5 மணிக்கு ஆரம்பமாகும் என்று அறிவிக்கப்பட்டிருந்த கூட்டம் இரவு 9 மணிக்கே தொடங்கியது.

புனர்வாழ்வு அதிகார சபையின் உப தலைவரும் கட்சியின் உயர்பீட உறுப்பினரும் சாய்ந்தமருது அமைப்பாளருமான சட்டத்தரணி நிஜாமுத்தீன் கூட்டத்துக்கு தலைமை தாங்கினார்.

கட்சியின், புதிதாக தெரிவுசெய்யப்பட்ட மூத்த துணைத் தலைவரும் 'முஸ்லிம் முழக்கம்' என்று அழைக்கப்படுபவருமான ஏ.எல்.அப்துல மஜீத் பேச எழுந்த போது, நீண்ட நேரமாகக் காத்திருந்து அலுத்துச் சலித்துப்போன மக்களிடமிருந்து எதிர்ப்பு அலை எழுந்தது.

"உங்கள் பேச்சைக் கேட்க நாங்கள் இங்கே காத்திருக்கவில்லை. நீங்கள் பேசத்தேவையில்லை. நாங்கள் தெரிவுசெய்த எம்.பிக்களை பேச விடுங்கள்" என்று குரல் எழுப்பினர்.

அப்போது அங்கு அமைச்சர் ரவூப் ஹக்கீமுடன் பிரதி அமைச்சர் பஷீர் சேகுதாவூத், திகாமடுல்ல மாவட்ட எம்.பிக்களான எச்.எம்.எம். ஹரீஸ், சட்டத்தரணி அன்வர் இஸ்மா யில் ஆகியோரும் திருகோணமலை மாவட்ட எம்.பி கே.எம். தௌபீக்கும் இருந்தனர்.

மக்களின் எதிர்ப்பு குரலுக்கு செவி மடுக்காமல் 'முஸ்லிம் முழக்கம்' முழங்கத் தொடங்கினார்.பிரச்சினை எழுந்தது; அமைதி குலைந்தது; விறு விறுப்பு ஏற்பட்டது.

தலைவர்களின் பணிப்பின் பேரில அவர் பேச்சை நிறுத்த வேண்டியதாயிற்று.

ஹரீஸ் எம்.பி.பேசி, மக்களை சாந்தப்படுத்தி, அமைதியை நிலைநாட்ட உதவினார். அன்வர் இஸ்மாயில் எம்.பியும் பேசினார்.

இரவு 11 மணியளவில் அமைச்சர் ரவூப் ஹக்கீம் பேசயெழுந்தார்.

"பிஸ்மில்லாஹி ரஹ்மானிர் ரஹீம்" (அளவற்ற அருளாளனும் நிகரற்ற அன்புடையோனுமாகிய எல்லாம் வல்ல அல்லாஹ்வின் திருநாமத்தால் ஆரம்பிக்கிறேன்) என்று கூறிப் பேச்சைத் தொடங்க முயற்சி செய்தார். சொற்கள் சரியாக வராமல் சிரமப்பட்டார். தொண்டை கரகரத்தது. சற்று நேரம் அமைதியாக நின்று தொண்டையைச் சரிப்படுத்த முயன்றார். முடியவில்லை. கதிரையில் அமர்ந்தார். தண்ணீர் அருந்தினார். அதன் பின்னர் எழுந்து சரளமாகப் பேசினார். ஒன்றரை மணிநேரம் பேசினார்.

தம்மீது சுமத்தப்படும் குற்றச் சாட்டுக்களில் முக்கியமானவை மூன்று என்று கூறி, அவற்றிற்குப் பதிலளித்தார். கட்சித் தலைமையில் சிலருக்கு வெறுப்பு ஏற்பட்டிருப்பதற்கு முக்கிய காரணம் அவர்களுக்கு வேண்டியதெல்லாம் நாடாளுமன்ற உறுப்பினர் பதவிகளும் அமைச்சர் பதவிகளும் தான் என்றார். (ஐ)

# சாவகச்சேரி ஆஸ்பத்திரியில் இரு வார்டுகள் இயங்கும்

தென்மராட்சி,டிசெ.30

சாவகச்சேரி ஆஸ்பத்திரியில் இரண்டு வார்டுகள் நாளைமறுதினம் முதலாம் திகதி தொடக்கம் ஆரம்பிக்கப்படவுள்ளன.

வார்டுகளைத் ஆரம்பிப்பதற்கான சகல ஆயத்தங்களும் மேற்கொள்ளப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது.

ஆஸ்பத்திரியில் சேதமடைந்த கட்டடங்கள் திருத்தி அமைக்கப்பட்டு அம்புலன்ஸ் வசதி, குடிதண்ணீர் வசதி போன்ற வசதிகள் ஏற்படுத்தப்பட்டுள்ளன. ஆஸ்பத்திரியில் இரண்டு டாக்டர்கள் கடமையாற்றுகின்றனர். எனவே ஆஸ்பத்திரி வாடுகளை திறக்குமாறு இப்பகுதி பொது அமைப்புகள் சுகாதார அமைச்சர், மாகாண, சுகாதார அமைச்சு, யாழ்.பிராந்திய சுகாதார சேவைகள் பிரதி மாகாணப் பணிப்பாளர் அலுவலகம் ஆகிய தரப்புகளிடம் கோரியிருந்தன. (ஐ-117)

## கோப்பாய் ஆலயத்தில் அன்னதானம்

கோப்பாய்,டிசெ.30

இந்து கலாசார அமைச்சின் ஏற்பாட்டில் இந்துக் கோவில்களில் அன்னதானம வழங்கும் திட்டத்தின் கீழ் இன்று திங்கட்கிழமை நண்பகல் கோப்பாய் பலானை கண்ணகை அம்மன் ஆலயத்தில் அன்னதான வைபவம் இடம்பெறும் அமைச்சர் தி.மகேஸ்வரன் வைபவத்தை ஆரம்பித்து வைப்பார். (ஐ-72)





**குடாநாட்டில் மேற்கொள்ளப்படவேண்டிய புனரமைப்பு பணிகள் குறித்து வரைவுத் திட்டங்களைத் தயாரிக்கும் நோக்கில் ஜப்பானின் 'கோப் சிற்றி' பல்கலைக்கழக இணைப் பேராசிரியர் தகாஷி ஓஷ், ஆராய்ச்சியாளர் மிஸா ஓஷ் ஆகியோர் யாழ்ப்பாணம் வந்தனர்.**

**அவர்கள் நேற்று 'உதயன்' பணிமனைக்கு வருகை தந்தனர். அப்போது எடுக்கப்பட்ட படம். (ஒ)**

# இந்து குருமார்களின் குறைகளை இந்து கலாசார அமைச்சு நீக்கும்!

## கலந்துரையாடலில் அமைச்சர் மகேஸ்வரன் உறுதிமொழி

யாழ்ப்பாணம்,டிசெ.30

நாட்டில் உள்ள ஏனைய மதங்களைச் சேர்ந்த குருமார்களுக்கும், மதத் தலைவர்களுக்கும் இருக்கின்ற அரச அங்கீகாரமும், கௌரவமும் இந்துமத குருமார்களுக்கும் கிடைக்க வேண்டும். அதற்கான சகல நடவடிக்கைகளையும் இந்து கலாசார அமைச்சு எடுக்கும்.

- இவ்வாறு தெரிவித்தார் இந்து கலாசார அமைச்சர் தி.மகேஸ்வரன்.

சர்வதேச இந்து குருமார் ஒன்றியத்தின் ஏற்பாட்டில் நல்லூர் நாவலர் மணிமண்டபத்தில் நேற்று நடைபெற்ற விசேட கலந்துரையாடலில் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்டு உரையாற்றும்போதே அமைச்சர் இவ்வாறு தெரிவித்தார்.

சர்வதேச இந்துமத குருமார் ஒன்றியத் தலைவர் ப.மனோகரக் குருக்கள் தலைமையில் கலந்துரையாடல் நடைபெற்றது.

அமைச்சர் அங்கு மேலும் தெரிவித்ததாவது:-

இந்து சமயத்தை வளர்த்தெடுக்கும் பாரிய பொறுப்பு இந்து குருமார்களுக்கு உண்டு.

அதேவேளை, எமது இந்து குருமார்களின் பணிகளுக்கு குறுக்கே பல குறைபாடுகள் உள்ளன என்பதையும் நான் உணர்ந்துள்ளேன். அவற்றை இந்து கலாசார அமைச்சின் ஊடாக படிப்படியாக நிவர்த்திசெய்வதற்கு வேண்டிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இந்து குருமார் ஒன்றியத்திற்கென தனியான கட்டடம் எதுவும் இல்லை. குருமார்களுக்கும் அவர்களுடைய பிள்ளைகளுக்கும் வேண்டிய வேதாகமப் பயிற்சிகளை வழங்கக்கூடிய எந்த வாய்ப்பு வசதிகளும் இங்கில்லை. இக்குறைபாடுகளைப் போக்குவதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன.

யாழ்.ஆனைப்பந்தியில் சுமார் 35 லட்சம் ரூபா செலவில் இந்து குருமார்களுக்கான குருகுலக் கல்வி நிலையம் ஒன்று அமைக்கப்பட்டு வருகிறது. அது எதிர்வரும் 20ஆம் திகதி திறந்து வைக்கப்படவுள்ளது. இதன் மூலம் இந்து சிவாச்சாரியார்களின் பிள்ளைகள் வேதாகமங்களைக் கற்று தமக்கேற்ற தகைமைகளைப் பெற்றுக் கொள்ளமுடியும்.

அது மட்டுமல்லாது இக்கல்வி நிலையத்தை பரிபாலிக்கும் செயற்பாடுகளை இந்து கலாசார அமைச்சும் அதன் நிர்வாகம் மற்றும் கலை கலாசாரத்தை வளர்க்கும் பொறுப்பை இந்து குருமார் ஒன்றியமும் மேற்கொள்ளும் - என்றார் அமைச்சர்.

இணுவில் தர்மசாஸ்தா குருகுல அதிபர் தா.மகாதேவக்குருக்கள் தமது உரையில் கூறியதாவது:-

முன்னர் வேதத்தைக் கற்பிக்கக்கூடிய பல குருகுலங்கள் அமைந்திருந்தன. சிவாச்சாரியார்களுக்கு வேத, ஆகம அறிவோடு சமஸ்கிருத பாஷை, சோதிடம், சித்தாந்தம், புராணம் போன்றவற்றிலும் நிறைய அறிவு தேவை. இவற்றை வர சுத்தமாகக் கற்பிக்கக்கூடிய வேதஞானி - குரு - ஒருவரை இந்தியாவில் இருந்து வரவழைக்க வேண்டும். அவர் பிராமணர்களின் அபரக் கிரியைகளையும் நிறைவேற்றக்கூடியவராக இருக்க வேண்டும் - என்றார்.

சுன்னாகம் கதிரமலை சிவன் தேவஸ்தான பிரதம சிவாச்சாரியார் சிவஸ்ரீ ந.சர்வேஸ்வரக் குருக்கள் உரையாற்றுகையில்:-

சம்பள அடிப்படையில் குருத்துவம் நிதானிக்கப்படவேண்டும். அடிப்படை சம்பளத் திட்டமொன்று அமுல்படுத்தப்பட்டாலே குரு குலத்தில் படித்துப் பயன்பெறும் பிராமண சிறுவர்கள் திருப்தி அடைவார்கள் - என்றார்.

குரு பீடாதிபதி சிவஸ்ரீ ஐ.மகேஸ்வரக்குருக்கள், நல்லை ஆதீன முதல்வர், யாழ்.பல்கலைக்கழக கலைப் பீடாதிபதி ப.கோபாலகிருஸ்ணஐயர், பிரம்மஸ்ரீ ந.சதாசிவஐயர் உட்பட பலர் உரையாற்றினர்.

கூட்டத்தில் பல தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன. (ஐ-5-152)

# நோய்த் தடுப்பு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மற்றும் வைரஸ் காய்ச்சலினால் பீடிக்கப்படுவோரின் எண்ணிக்கை கிடுகிடுவென அதிகரித்திருப்பதற்கு என்ன காரணம் என்று பணிப்பாளரிடம் 'உதயன்' அலுவலகச் செய்தியாளர் கேட்டார்.

காய்ச்சல் நிலைமை குறித்து பணிப்பாளர் உதயனுக்கு தெரிவித்ததாவது:-

இந்த மாதம் மட்டும் காய்ச்சலால் பீடிக்கப்பட்ட நிலையில் ஆயிரத்து 47 பேர் போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டனர். பல்லாயிரக்கணக்கானோர் வெளிநோயாளர் பிரிவில் சிகிச்சைபெற்றுச் சென்றுள்ளனர்.

இந்த எண்ணிக்கை கடந்த வருடங்களை விடவும் மிகவும் அதிகமானதாகும். ஒவ்வொரு வருடமும் மழைகாலம் ஓய்ந்தபின்னர் காய்ச்சல்நோய் பரவுவது வழக்கமாகும். எனவே, இக்காலப்பகுதியில் சுகாதார வைத்திய அதிகாரிகள் மற்றும் ஆரம்ப சுகாதாரத் தொண்டர்கள் ஒலிபெருக்கி வாகனங்கள் மூலமாகவும், நேரடியாகவும் கிராமங்களுக்குச் சென்று பொதுமக்கள் மத்தியில் சுகாதாரப் பழக்கவழக்கங்கள் தொடர்பான விழிப்புணர்வு நடவடிக்கையில் ஈடுபடவேண்டும் ஆனால் இந்தமுறை அவ்வாறான தடுப்பு நடவடிக்கைகள் குடாநாட்டில் இடம்பெற்றதாகத் தெரியவில்லை.

டெங்கு மற்றும் வைரஸ் போன்ற காய்ச்சல்கள் உணவு மற்றும் குடிதண்ணீர் பாவனைகளில் சுகாதாரம பேணப்படாமையினாலேயே ஏற்படுகின்றன. அத்துடன்,மழைநீர் தேங்கிநிற்கும் சிறு குட்டைகள், நீர்நிலைகள் என்பவற்றை இல்லாமற்செய்து நுளம்பு பரவ ஏதுவான ஏனைய காரணிகளை கண்டறிந்து அவற்றுக்கான நடவடிக்கைகள் எடுக்கப்படவேண்டும். கிணறுகளுக்கு குளோரின் இட்டு சுகாதார நடைமுறைகளை உரிய முறையில் பின்பற்றி வந்தால் காய்ச்சல் பரவுவதைத் தடுக்கமுடியும். காலதாமதமாகவேனும் இந்தத் தடுப்பு நடவடிக்கைகள் முடுக்கிவிடப்படவேண்டும் - என்றார் பணிப்பாளர் சதுர்முகம். (ஐ-4)

## யாழ்நகரில்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தின் தலைவர் மஜீத் றொய்ஸ் அறிவித்திருக்கிறார்.

'மீளக்குடியமர்ந்த முஸ்லிம் அங்காடி வியாபாரிகள் சங்கம்' என்று பெயரிடப்பட்டிருக்கும் புதிய சங்கம் நேற்றுக்காலை யாழ்.மொஹதீன் ஜும்ஆ பள்ளிவாசலில் நடந்த கூட்டத்தில் அங்குரார்ப்பணம் செய்துவைக்கப்பட்டது.

யாழ்ப்பாணத்தில் மீளக்குடியமர்ந்து தமது வியாபார நடவடிக்கைகளை ஆரம்பித்திருக்கும் முஸ்லிம் அங்காடி வியாபாரிகளின் நலன்களுக்காக இச் சங்கம் பாடுபடும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஐ)

# 31 ஆண்டுகள் காதலித்து திருமணம் செய்த ஜோடி

தைபே,டிசெ.30

நீண்டகாலம் காத்திருந்து காதலில் வெற்றிபெற்ற ஒரு ஜோடி பற்றி தகவல் கிடைத்துள்ளது.

வியட்நாம் நாட்டைச் சேர்ந்தவர் பான்-ஆ-காங, மேற்படிப்புக்காக 1971 ஆம் ஆண்டு வடகொரியா சென்றார். அப்போது அவருக்கு வயது 22. கொரியாவைச் சேர்ந்த லீ யோங்ஹு என்ற 23 வயதுப் பெண்ணுக்கும் அவருக்கும் காதல் மலர்ந்தது.

வடகொரியாப் பெண்கள் வேறு நாட்டுக் காரரை திருமணம் செய்ய தடை இருப்பதால் காதலர்கள் ரகசியமாகச் சந்தித்து காதலை வளர்த்துக் கொண்டார்கள். நண்பர்கள் எவ்வளவோ தடுத்தும் அவர்களைப் பிரிக்க முடியவில்லை.

1972 ஆம் ஆண்டு படிப்பு முடித்து பான் நாடு திரும்பினார். 4 ஆண்டுகள் கழித்து தொழில் விஷயமாக வடகொரியா சென்றபோது பான் மீண்டும் காதலியைச் சந்தித்தார்.

காதலியைத் திருமணம் செய்ய அவர் தொடர்ந்து செய்த முயற்சிக்கு 31 ஆண்டுகளுக்குப் பிறகு வெற்றி கிடைத்து இருக்கிறது.

வியட்நாம் அதிபர் டிராங் டக்லுங்கிடம் பாங், தமது காதல் குறித்துத் தெரிவித்தார். காதலர்களின் உறுதியைக் கண்டு மனம் நெகிழ்ந்த அவர், திருமணத்திற்கு அனுமதியளித்தார்.

அறிவிப்புக் கிடைத்தவுடன் காதலி, வியட்நாம் தலைநகர் ஹனோயுக்கு பறந்து வந்தார். அங்குள்ள ஜிம்னாஸிய அரங்கில் அவர்கள் திருமணம் சிறப்பாக நடந்தது. திருமணம் செய்து கொண்டபோது காதலிக்கு வயது 54, காதலனுக்கு வயது 53.

இவர்கள் திருமணத்தில் ஆயிரத்து 200 பேர் கலந்துகொண்டு மணமக்களை வாழ்த்தினார்கள். (ஒ)

# அமெரிக்காவின் மிரட்டலை நிராகரித்தது வடகொரியா!

லண்டன்,டிசெ.30


அமெரிக்காவின் மிரட்டலை முற்றாக நிராகரிப்பதாக வடகொரியா அறிவித்துள்ளது. வடகொரியா அணு ஆயுதத் திட்டத்தை நிறுத்திக் கொள்ளவேண்டும். இல்லாவிட்டால் அந்த நாடுமீது கடும் பொருளாதாரத் தடைகள் நடைமுறைப்படுத்தப்படும் என்று அமெரிக்கா எச்சரித்திருந்தது. இந்த எச்சரிக்கையையே வடகொரியா நிராகரித்துள்ளது.

1994ஆம் ஆண்டு அமெரிக்காவுடன் செய்து கொண்ட ஓர் ஒப்பந்தத்தின் பிரகாரம், வடகொரியா தனது அணு ஆராய்ச்சிகளை முற்றாக நிறுத்தவேண்டி நேரிட்டது. இதற்கு பிரதி உபகாரமாக வடகொரியாவுக்கு பெற்றோலியம் உட்பட பல உதவிகளை அமெரிக்கா வழங்கி வந்தது. வடகொரியா அணு ஆராய்ச்சி செய்யாது இருப்பதை ஐ.நா.கண்காணிப்பாளர்கள் கண்காணித்து வந்தனர்.

இந்தநிலையில், யோவ்பியோன் அணு உலையை மீண்டும் செயற்பட வைக்கும் நடவடிக்கையில் கடந்த 22ஆம் திகதி வடகொரியா ஈடுபட்டு வருகிறது. ஐ.நா.கண்காணிப்பாளர்களை நாட்டைவிட்டு வெளியேறும் படியும் வடகொரியா கேட்டுள்ளது.

இந்தநிலையில், வடகொரியாவின் அயல் நாடுகளை ஓரணிக்குள் திரட்டி, வடகொரியா மீது கடும் பொருளாதாரத் தடைகளை கொண்டுவரப்போவதாக அமெரிக்கா எச்சரித்தது. இந்த எச்சரிக்கையையே வடகொரியா நிராகரித்துள்ளது.

தனது மின்சாரத் தேவைக்காக அணு உலைகளை இயக்கும் அவசியமும், உரிமையும் தனக்கிருப்பதாக வடகொரியா மேலும் தெரிவித்துள்ளது. ஈராக்கில் பேரழிவு ஆயுதங்களைத் தேடும் பணி அமெரிக்காவுக்கு சவாலாக இருந்து வரும் வேளையில், வடகொரியாவின் அணு ஆராய்ச்சி அதற்கு இன்னொரு தலைவலியாக மாறிவருவதாக ஆய்வாளர்கள் கருதுகின்றனர். (ஒ)


வடகொரிய அணு உலை

# நீதிமன்றத்தில் வைகோ ஆஜர்; கதவை மூடியதால் மக்கள் அவதி

நாகபட்டினம்,டிசெ.30

தேர்தல் தகராறு வழக்குத் தொடர்பாக நாகை கூடுதல் அமர்வு நீதிமன்றத்தில் வைகோ கடந்த வியாழக்கிழமை ஆஜர்படுத்தப்பட்டார். பாதுகாப்பு என்ற பெயரில் காலை 10 மணி முதல் நீதிமன்ற வளாகத்தின் கதவுகளைப் பொலீஸார் மூடிவிட்டனர். நீதிமன்ற வளாகத்தில் நாகை பிரதேச செயலகம், அனைத்து மகளிர் பொலீஸ் நிலையம், வணிகவரி அலுவலகம், பொதுப்பணித்துறை அலுவலகம், பிரதேச திறைசேரி, அஞ்சல் அலுவலகம் ஆகியன உள்ளன.

பொலீஸாரின் இத்தகைய நடவடிக்கையால், இந்த அலுவலகங்களுக்குச் செல்லவேண்டிய பொதுமக்கள் பெரும் இடையூறுக்கு உள்ளாகினர்.

நாகை குற்றவியல் நீதிமன்றத்தில கடந்த வியாழக்கிழமை விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்ட அனைத்து வழக்குகளிலும் ஆஜராக வேண்டிய பலரை உள்ளே பொலீஸார் அனுமதிக்காததால், கோபமடைந்த நீதிவான், இருக்கையை விட்டு எழுந்து தனது அறைக்கு சென்றுவிட்டார்.

பின்னர் பொலீஸ் அதிகாரிகளை அழைத்து, ஒரு வழக்குக்காக (வைகோ வழக்கு) அனைத்து நீதிமன்ற பணிகளும் பாதிக்கப்பட வேண்டுமா? உடனடியாக இதற்குத் தீர்வு காணவேண்டும் எனக் கடிந்து கொண்டார்.

அதன் பிறகு வளாகத்தின் மூன்று வாயில்களிலும் பல்வேறு வழக்குகள் தொடர்பாகக் காத்திருந்தவர்களை பொலீஸார் மதியம் ஒரு மணியளவில் அனுமதித்தனர். (ஒ)

# தெற்காசிய நாடுகளைச் சேர்ந்தோர் தங்கியிருந்த ஆஸ்திரேலிய தடுப்பு முகாமில் பெரும் கலவரம்; 11பேர் காயம்!

சிட்னி,டிசெ.30

ஆஸ்திரேலியாவில் தடுப்பு முகாமொன்றில் உள்ள சட்டவிரோத குடியேறிகள் நேற்று முகாமுக்கு தீ வைத்து கலவரத்தில் ஈடுபட்டனர். இதில் இரு காவலர்கள் உட்பட 11 பேர் காயமடைந்தனர்.

சட்டவிரோத குடியேறிகள் தொடர்பான சட்டங்களை ஆஸ்திரேலியா கடுமையாக்கியதைத் தொடர்ந்து அங்குள்ள அகதிமுகாம்களிலும் தடுப்பு முகாம்களிலும் தங்க வைக்கப்பட்டுள்ளோர் கலவரங்களில் ஈடுபட்டுவருகின்றனர்.

சில மாதங்களின் முன்னர் வூமேரா தடுப்பு முகாமில் தடுத்து வைக்கப்பட்டிருந்த சட்டவிரோதக் குடியேறிகள் தொடர்ந்து கலவரத்தில் ஈடுபட்டனர். இதனால் அந்த முகாம் மூடப்பட்டது.


தடுப்பு முகாமில் ஆர்ப்பாட்டம்

தெற்கு ஆஸ்திரேலியாவில் ஒகஸ்டா துறைமுகத்தருகே உள்ள பக்ஸ்டர் தடுப்பு முகாமில் உள்ளவர்கள் நேற்றுக்காலை கலவரத்தில் இறங்கினர். அகதி விண்ணப்பங்கள் பரிசீலிக்கப்படவிருக்கும் தெற்காசிய நாடுகளைச் சேர்ந்த 215பேர் இந்தத் தடுப்பு முகாமில் வைக்கப்பட்டிருந்தனர்.

இவர்கள் படுக்கைகள், திரைச்சீலைகள், மரத்தளபாடங்கள் போன்றவற்றின்மீது எரிபொருள் ஊற்றி தீயிட்டனர்.

கடந்த மூன்று நாள்களாகவே இந்த முகாமில் இருந்தவர்கள் தமது அகதி விண்ணப்பங்கள் விரைவாக பரிசீலிக்கப்படவேண்டும் என்று கோரி கலவரங்களில் ஈடுபட்டுவந்தனர்.

நேற்றுக்காலை கலவரம் உச்சக் கட்டத்தை அடைந்தது.

ஆஸ்திரேலியாவில் தடுப்பு முகாம்களில் நீண்டகாலமாகத் தடுத்து வைக்கப்பட்டுள்ளோர் முடிவு தெரியாது விரக்தியடைவதாலேயே இத்தகைய கலவரங்களில் ஈடுபடுவதாக அகதிகளுக்கான சுதந்திர அமைப்புத் தெரிவித்துள்ளது. (ஒ)

# நாஜி தொடர்பு பற்றிய குறிப்புகளை வெளியிட வத்திகான் இணங்கியது

வத்திகான்,டிசெ.30

சர்வாதிகாரி ஹிட்லரின் நாஜிப் படைகளுக்கும் கத்தோலிக்க திருச்சபைக்கும் இடையிலான தொடர்புகள் குறித்த குறிப்புகள் உள்ள ஆவணங்களை வெளியிட வத்திக்கானில் உள்ள பாப்பரசரின் அலுவலகம் இணங்கியுள்ளது. இரண்டாம் உலகமகா யுத்த காலத்தில் இடம்பெற்ற பேரழிவுகளில் திருச்சபையின் பங்கு குறித்து யூத அமைப்புகள் கேள்வி எழுப்பின.

இதனையடுத்தே இந்த ஆவணங்களை வெளியிட கத்தோலிக்கத் திருச்சபை இணங்கியுள்ளது. திருச்சபையின் சர்ச்சைக்குரிய வரலாற்றில் மர்மமான சகாப்தம் என்று கருதப்படும் காலத்தைச் சேர்ந்த ஆவணங்களே வெளியிடப்பட உள்ளன. இரண்டாம் உலகமகா யுத்த காலத்தில் ஜேர்மனிக்கான வத்திக்கானின் தூதராக இருந்தவரே பின்னர் பாப்பரசராகப் பொறுப்பேற்றார். பாப்பரசர் பன்னிரண்டாம் பயஸ் என்றழைக்கப்பட்ட அவர், நாஜிக்கள் யூதர்களை இனப் படுகொலைக்கு உள்ளாக்கிய போது, அது குறித்து மௌனம் சாதித்ததாகவும் - அந்த அநியாயத்தைத் தட்டிக் கேட்கத் தவறிவிட்டதாகவும் - யூத அமைப்புகள் குற்றஞ்சாட்டி வந்தன. இக்குற்றச்சாட்டு சர்ச்சைக்குரிய ஆதாரங்கள் ஊடாக நிரூபணமாகின.

இந்த நிலையில்தான் அடுத்த ஆண்டு பெப்ரவரி மாதம் 15 ஆம் திகதி நாஜிகள் தொடர்பான திருச்சபையின் ஆவணங்களை வெளியிடுவதாக பாப்பரசர் அலுவலகம் அறிவித்துள்ளது.


நாஜிகள் முகாமில் யூதர்கள் (ஆவணப் படம்)

ஆயினும் 1931 - 34 ஆம் ஆண்டு காலப்பகுதியிலான ஆவணங்கள் முற்றாக அழிந்து விட்டதாகவும் வத்திக்கான் திருச்சபை தெரிவித்துள்ளது. இதேவேளை -

யூத கல்வியாளர்கள் ஆவணங்களை ஆராய அனுமதிக்கப்படுவார்களே தவிர அவற்றைப் பகிரங்கமாக வெளியிட முடியாது என்றும் திருச்சபை அறிவித்துள்ளது.

இரண்டாம் உலகமகா யுத்தக் காலத்தில் 60 லட்சம் யூதர்களும், பல்லாயிரக்கணக்கான சிறுபான்மை இனத்தவர்களும் நாஜி படையினரால் படுகொலை செய்யப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

O/L பரீட்சைகள் முடிவடைந்து விட்டன! அடுத்தது என்ன?
COMPUTER கல்வி
ASIAN COMPUTERS
ஏன்? எதற்கு? எப்படி? எங்கு? என
ஒரு விநாடி கூட சிந்திக்காதீர்கள்!
சர்வதேச தரத்துடன்
ஏசியன்
ASIAN COMPUTERS
மிகவிரைவில் (ஜனவரி முதல் வாரத்தில்)
யாழ்.நகரில்
NO:2G, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.
0777 - 941119
HEAD OFFICE:
250, GEORGE R.DE. SILVA MV,
KOTAHENA COLOMBO - 13, 075 - 338724
ICM ENGLAND ACP England IMIS UNITED KINGDOM LONDON ACADEMY OF COMPUTING & ELECTRONICS

# அ.தி.மு.கவுடன் கூட்டணியா? பா.ஜ.க. தலைவர் மழுப்பல்

சென்னை,டிசெ.30

இந்திய நாடாளுமன்றத் தேர்தலில அ.தி.மு.கவுடன் பா.ஜ. கூட்டணி சேருமா என்ற கேள்விக்கு மழுப்பலாக பதிலளித்தார் அக்கட்சியின் அகில இந்தியத் தலைவர் எம்.வெங்கையா நாயுடு.

கடந்த சனிக்கிழமை சென்னை வந்த அவர், விமான நிலையத்தில் செய்தியாளர்களுக்கு பேட்டியளித்தார்.

பா.ஜ.க. கூட்டணியில் சேருவதற்கு அ.தி.மு.க. முயற்சிக்கிறதா என்ற கேள்விக்கு, இதை அ.தி.மு.கவிடமே கேட்டுக் கொள்ளுங்கள் என்று பதிலளித்தார் அவர்.

தமிழக பா.ஜ.க. தலைவர்கள் அ.தி.மு.கவுக்கு ஆதரவாக இருக்கிறார்களே? என்ற கேள்விக்கு, அப்படி யாரும் இல்லை என்று கூறிய நாயுடு, அதிமுகவுடன் கூட்டுச் சேர்வதற்கான வாய்ப்பு இல்லை என்கிறீர்களா? என்ற கேள்விக்கு, நேரடியாக பதிலளிப்பதைத் தவிர்த்தார். அடுத்த தேர்தலுக்கு இன்னும் நிறைய அவகாசம் இருக்கிறது. அதற்குள் நிறையமுறை சென்னை வரப்போகிறேன்; உங்களைச் சந்திக்கப்போகிறேன். அப்போது பேசிக்கொள்ளலாம் என்றார் வெங்கையா நாயுடு.

குஜராத்தின் பா.ஜ.க. முதல்வர் நரேந்திர மோடியின் பதவியேற்பு விழாவில் பங்கேற்க தி.மு.க. தலைவர் கருணாநிதிக்கு அழைப்பு அனுப்பப்படவில்லை. ஆனால் ஜெயலலிதாவுக்கு அழைப்பு அனுப்பப்பட்டது. இது குறித்த கேள்விக்கு, மோடி பதவியேற்பு நிகழ்ச்சிக்கு பா.ஜ.க. சார்பில் எந்தக் கட்சிக்கும் அழைப்பிதழ் அனுப்பப்படவில்லை. முதல்வராக தேர்ந்தெடுக்கப்பட்ட நரேந்திர மோடிக்கு ஜெயலலிதா வாழ்த்துக் கூறினார். அதற்கு மறுமொழியாக விழாவுக்கு வருமாறு அவர் ஜெயலலிதாவை அழைத்திருக்கலாம் என்று சமாளித்தார் நாயுடு. (ஒ)

## CHURCH OF CEYLON - CENTRE FOR LEARNING AND CULTURE

யாழ்.மாணவர்களின் கல்வி மேம்பாட்டை முன்னெடுக்கும் வகையில் இலங்கைத் திருச்சபையின் கல்வி முன்னேற்றத் திட்டத்தின்கீழ் -

கடந்த ஆண்டுபோல் இம்முறையும் ஆங்கிலம், மனையியற் கலை, அழகியற் பாடங்கள் - (நடனம், வயலின், சங்கீதம், மிருதங்கம்) .

இலவசமாக கற்பிக்கப்படவுள்ளன.

இடம்: சுண்டுக்குளி மகளிர் கல்லூரி,
தில்லையம்பலம் நினைவுக் கட்டடம்,
பழைய பூங்கா வீதி,
சுண்டுக்குளி.

02.01.2003 வியாழக்கிழமை பி.ப. 4.00 தொடக்கம் 6.00வரை பதிவுகள் மேற்கொள்ளப்படும்.

விவரங்கள் நேரில்

D.R.அருமைநாயகம்
*Director*

வண. S.P.நேசகுமார்
*Archdeacon of Jaffna.*

(12437)

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

மண்ணின் மடியில்
14
-
05
-
1937



இறைவன் அடியில்
09
-
01
-
2002

### அமரர் கனகசபை சண்முகநாதன்

*(ஓய்வு பெற்ற இலங்கை நிர்வாகசேவை அதிகாரி S.L.A.S.)*

திதி: 30.12.2002 ஏகாதசி

*நாள்கள் ஓடி வருடமாகி விட்டதே அப்பா!*
*எங்களை விட்டுப் பிரிந்தது உங்கள் உடல்தான்*
*உங்கள் ஆத்மா எப்போதுமே*
*வழிகாட்டியாய் எங்களுடன்.*

*செட்டித்தெரு, நல்லூர்.* (12385) - குடும்பத்தினர்.

## மீனவருக்கு அறிவுறுத்தல்

குருநகர்,டிசெ.30

குடாக் கடற்பகுதியில் ட்றோலர் மூலம் மீன்பிடிக்கக்கூடாதென அப்பகுதி மீனவர் சங்கங்களால் தடை செய்யப்பட்டுள்ள குடாக் கடற்பகுதியில் இத்தொழிலைச் செய்யவேண்டாம் எனவும் -

தடைசெய்யப்படாத கடற்பகுதியில் ட்றோலர்மூலம் மீன்பிடிக்குமாறும் -

குருநகர் கடற்றொழிலாளர் அபிவிருத்திச் சங்கம், குருநகர் ட்றோலர் தொழிலாளருக்கு அறிவுறுத்தியுள்ளது.

பள்ளிக்குடா கடற்பகுதியிலுள்ள சில இடங்களில் இத்தொழிலை மேற்கொண்ட குருநகர் ட்றோலர் படகுகள் பள்ளிக்குடா கடற்றொழில் சங்கத்தால் அண்மையில் தடுத்து வைக்கப்பட்டு பின்னர் விடுவிக்கப்பட்டன.

அதன் பின்னரே இந்த அறிவித்தல் விடுக்கப்பட்டுள்ளதாகக் குருநகர் கடற்றொழில் அபிவிருத்திச் சங்கத் தலைவர் அ.டெனிஸ்ராஜா தெரிவித்தார்.

(ஓ-51)

## NIRU TUITION CENTRE
**KONDAVIL**
**2003 A/L**

**இலத்திரனியல்**
MON, WED - 6.15 - 7.15 (Mor)
ஆரம்பம்: 01.01.2003

**சடப்பொருளியல்**
THU - 4.00 - 5.00 (Evo)
FRI - 6.15 - 7.15 (Mor)
ஆரம்பம் : 02.01.2003

By: M.Karunanithy

(12443)

## St.John's Parish Nursery School
**Chundikuli**

~ 2003ஆம் ஆண்டின் புதிய தவணை 08.01.2003 ஆரம்பமாகும்.
~ ஆரம்பிக்கப்படும் பிரிவுகள் 3&4 (வயதுகள்)
~ குறிப்பிட்ட சில வெற்றிடங்களே உள்ளன.
~ விண்ணப்ப முடிவுதிகதி 04.01.2003
~ விண்ணப்பப் படிவங்களை
பரி.யோவான் ஆலயம்,
பிரதான வீதி, சுண்டுக்குளியில் பெற்றுக்கொள்ளலாம்.

Manager
*St.John's Nursery School, Chundikuli*

(12438)

## 2ஆம் ஆண்டு நினைவஞ்சலி

மலர்வு
12
-
05
-
1920



உதிர்வு
22
-
12
-
2000

### அமரர் சிதம்பரப்பிள்ளை பொன்னையா

திதி: 30.12.2002

*ஆண்டுகள் இரண்டு மறைந்தாலும்*
*உங்கள் நினைவுகள் மட்டும் மறையவே மறையாது*
*அன்போடு பேசி பண்போடு வாழ்ந்து உங்களது*
*பாசமுகம் எப்போதும் எங்கள் முன்னே தெரிகிறது*
*உங்கள் நினைவுகள் எங்கள் நெஞ்சங்களில்*
*என்றும் நிலைத்திருக்கும்.*

ஓம் சாந்தி! சாந்தி! சாந்தி!

நிரந்தர முகவரி:
*சிவன்கோயில் வீதி,*
*எழுதுமட்டுவாழ் தெற்கு.*
தற்காலிக முகவரி:
*கல்லடி லேன்,*
*தும்பளை வீதி, பருத்தித்துறை.*

மனைவி, பிள்ளைகள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்,
பூட்டப்பிள்ளைகள்.

(12296)

# பஜாஜ்

பெருநாள் தினங்களில்

# விசேட கொடுப்பனவுகள்



நீடிக்கப்பட்டுள்ளது

2002 டிசெம்பர் 31 வரை
கொள்வனவுக் கட்டளை சமர்ப்பிக்கப்படும்
ஒவ்வொரு
பஜாஜ் முச்சக்கர வண்டியுடன்

ஒரு சோடி பக்கத் திரைகளும்
சிபில் வெத்தசிங்ஹ என்பவரால் ஓவியம் தீட்டப்பட்டு,
மோரின் விக்கிரமசிங்ஹ என்பவரால் எழுதப்பட்ட
சிறார்களுக்கான புத்தகத் தொகுதியொன்றும்




# இலவசம்!

**டேவிட் பீரிஸ் மோட்டார் கம்பனி லிமிட்டட்**

த. பெ. 1909, 75, ஹைட்பார்க் கோணர், கொழும்பு 02. தொ. பே: 074-700600, பக்ஸ்: 074-700677, 687175
பிரதேச கிளை அலுவலகங்கள்: 174B, கட்டுகஸ்த்தோட்டை வீதி, கண்டி. தொ. பே: 08-226146 பக்ஸ்: 08-238134
27 E, வியாபார ஸ்தானம், தெகியத்தகண்டிய. தொ. பே: 027 50037 பக்ஸ்: 027-50222
382, அனகாரிக்க தர்மபால மாவத்தை, மாத்தறை. தொ. பே: 041-28488 பக்ஸ்: 041-27488
றீகல் மாவத்தை, அம்பாறை. தொ. பே: 063-22997 பக்ஸ்: 063-23662
31பீ, மைத்திரிபால சேனாநாயக்க மாவத்தை, அநுராதபுரம். தொ. பே. 025-25048/9 பக்ஸ்: 025-25050
தனசிரி கட்டிடம், இல. 195, பிரதான வீதி, இரத்தினபுரி. தொ. பே/பக்ஸ்: 045-22389
இல. 116, குருணாக்கல் வீதி, புத்தளம். தொ. பே/பக்ஸ்: 032-65527

Tradlanka

உதயன்

## விடுதலைப் புலிகளின் புதிய ஒலிபரப்புச் சேவை

தமிழீழ விடுதலைப் புலிகள் நீண்டகாலமாகவே ஒலிபரப்புச் சேவை நடத்திவருகிறார்கள். அவர்களுடைய இயக்கம் அரசினால் தடை செய்யப்பட்டிருந்த போதும் ஒலிபரப்புச் சேவை நடந்தது.

இப்போது தடை நீக்கப்பட்டுவிட்டது. புலிகள் இன்று அரசுடன் சமத்துவமாக இருந்து தமிழ் மக்களின் ஏகபிரதிநிதிகள் என்ற உரிமையுடன் சமாதானமான முறையில் அரசியல் பிரச்சினைக்குத் தீர்வு காண்பதற்குப் பேச்சு நடத்திவருகிறார்கள்.

அதற்கு சர்வதேச சமூகம் ஆதரவும் உதவியும் அளித்துவருகிறது.

இந்தநிலையில், புலிகள் தமது ஒலிபரப்புச் சேவையை அபிவிருத்தி செய்து மக்களுக்கு சிறப்பான தொண்டாற்றுவதற்கு விரும்புவதில் என்ன தவறு?

புலிகள் வெளிநாட்டில் இருந்து அதிசக்திவாய்ந்த நவீன ஒலிபரப்புச் சாதனங்களை இறக்குமதி செய்திருக்கிறார்கள்; அதற்கு இலங்கை அரசும் இலங்கையிலுள்ள நோர்வேத் தூதரகமும் உதவி விட்டன; இதனால் ஏற்படப்போகும் விளைவுகளுக்கு யார் பொறுப்பு என்றெல்லாம் பெரும் சர்ச்சை எழுப்பப்பட்டது.

அதுமட்டுமல்ல புலிகள் சட்டவிரோதமான முறையிலேயே நவீன வானொலி நிலையம் ஒன்றை அமைக்கிறார்கள் என்றும், அதற்கு அரசும் துணைபோய் இருக்கிறது என்றும் அரசின் மீது இந்த நாட்டின் பேரினவாத சக்திகளின் தொட்டிலாக விளங்கும் சிஹல உறுமய, ஜே.வி.பி., பொதுஜன ஐக்கிய முன்னணி முதலான கட்சிகளின் 'பீரங்கிகள்' முழங்கின.

குற்றச்சாட்டுக்கள் எல்லாவற்றுக்கும் அரசுத் தகவல் திணைக்களம் அறிக்கை ஒன்றின் மூலம் பதிலளித்து நிலைமையைத் தெளிவுபடுத்திவிட்டது.

வன்னியில் எவ்.எம். ஒலிபரப்பு நிலையம் ஒன்றை அமைப்பதற்கு அனுமதி கோரி புலிகளின் சமாதான விடுதலைச் செயலகம் விண்ணப்பித்திருந்தது. அந்த விண்ணப்பத்தை ஏற்று கடந்த நவம்பர் மாதம் 11 ஆம் திகதி அரச சமாதானச் செயலகம், இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபன சட்ட ஏற்பாடுகளுக்கு அமைவாக அனுமதி வழங்கியது.

அரச அனுமதி பெற்று எந்தத் தனிநபரோ, நிறுவனமோ, அமைப்போ ஒலிபரப்பு நிலையத்தை நடத்தும்போது சில நிபந்தனைகளுக்குக் கட்டுப்பட்டு ஆகவேண்டும்.

அந்த நிபந்தனைகளுக்கு மாறாக எவராவது நடந்தால் அனுமதி ரத்துச் செய்யப்படலாம்.

புலிகளின் ஒலிபரப்பு நிலையம் எங்கே அமையும்? அதன் வீச்சு எல்லைகள் எவை? இவையெல்லாம் வரையறுக்கப்பட்டுள்ளன. சமாதான நடவடிக்கைகளை மேலும் பலப்படுத்தும் முகமாகவும் வடக்கு - கிழக்கு மக்களின் கலை, கலாசாரம், கல்வி, விளையாட்டு ஆகிய துறைகளில் ஒலிபரப்புச் செய்வதற்கு ஒலிபரப்பு நிலையம் ஒன்றை ஆரம்பிப்பதற்கு அனுமதிவேண்டும் என்று புலிகள் அரசைக் கேட்டிருந்தனர்.

அதற்கு இணங்கவே அனுமதி வழங்கப்பட்டது.

இந்த ஒலிபரப்பு நிலையத்தை அமைப்பதற்கு வேண்டிய சாதனங்களை இறக்குமதி செய்வதற்கு இலங்கையில் உள்ள நோர்வேத் தூதரகம் தன்னாலான உதவிகளை வழங்கியது.

இந்த ஒலிபரப்புச் சாதனங்கள் நாட்டின் பாதுகாப்புக்கு எத்தகைய அச்சுறுத்தலையும் ஏற்படுத்த மாட்டா என்று சம்பந்தப்பட்ட அரச அதிகாரிகள் ஊர்ஜிதம் செய்த பின்னரே ஒலிபரப்புச் சாதனங்கள் வன்னிக்கு அனுப்பி வைக்கப்பட்டன.

இவ்வாறாக அரசின் தகவல் திணைக்களம் விளக்கம் அளித்திருக்கிறது.

புலிகள் எதைச் செய்தாலும் அதில் குற்றம் காண்பதும் அதுபற்றி சந்தேகம் கொள்வதும் அச்சத்தை ஏற்படுத்தும் விதத்தில் பிரசாரம் மேற்கொள்வதும் இங்கே வழக்கமாகிவிட்டது.

புலிகளின் வானொலி ஒலிபரப்புச் சாதனங்கள் தொடர்பாக நடந்ததும் அதுதான்.

இதில் ஒரு முக்கிய விடயம் என்னவென்றால் எமது அண்டை நாடான இந்தியாவும் சன்னதம் கொண்டு ஆடியதுதான்.

தனது பிராந்திய ஆதிபத்திய நிலைக்கும் பிரதேச நலன்களுக்கும் புலிகளின் சக்திவாய்ந்த புதிய ஒலிபரப்பு குந்தகம் ஏற்படுத்தும் என்று இந்தியா கூக்குரலிட்டது.

எந்த ஓர் ஒலிபரப்பையும் குறிப்பிட்ட பகுதிகளில் கேட்க முடியாமல் செய்வதற்கு இந்த நவீன யுகத்தில் வசதிகள் இருக்கின்றன. அப்படியிருக்க, புலிகள் சட்டரீதியாக ஒலிபரப்புப் பணியில் ஈடுபடும்போது அதற்குக் குறுக்கே நிற்பது மனித உரிமை மீறல் என்பதைச் சுட்டிக்காட்ட வேண்டியது அவசியமாகும்.

---

பிரதேச செயலகம் முன்பாக

# இயக்கச்சிப் பிரதேச மக்கள் இன்று மறியல் போராட்டம்!

யாழ்ப்பாணம்,டிசெ.30

கோயில்வேலி, இயக்கச்சி, சங்கத்தரவை ஆகிய பகுதிகளில் குடியமர்ந்துள்ள தமக்கு எதுவித உதவிப்பணிகளும் சீராக மேற்கொள்ளப்படவில்லை என்றும் -

ஆகவே, இதனைக் கண்டித்து இன்று காலை முதல் மதியம் வரை பளைப் பிரதேச செயலகம் முன் மறியல் போராட்டத்தில் ஈடுபடப்போவதாகவும் - அப்பகுதியில் மீளக்குடியமர்ந்துள்ள மக்கள் அறிவித்துள்ளனர்.

மறியற் போராட்டத்தின் முடிவில் பிரதேச செயலரிடம் தமது முறைப்பாடு அடங்கிய மகஜர் ஒன்றும் கையளிக்கப்படவுள்ளதாக அவர்கள் தெரிவித்தனர்.

இது தொடர்பாக மக்கள் பிரதிநிதிகள் தெரிவித்ததாவது:-

கடந்த 12 வருடங்களின் பின்னர் இப்பகுதிகளில் குடியமர்ந்துள்ள மக்களுக்கு இதுவரையிலும் எதுவித அடிப்படை வசதிகளும் செய்து கொடுக்கப்படவில்லை. அத்தோடு மீளக்குடியமரும் குடும்பங்களுக்கென அரசினால் வழங்கப்படும் எந்தவித உதவியும் அவர்களுக்கு வழங்கப்படவில்லை.

அரசசார்பற்ற நிறுவனங்கள்கூட எந்தவித அடிப்படை வசதிகளையும் செய்துகொடுக்க முன்வரவில்லை. இப்பகுதியில் எந்தக் கட்டடங்களும் முழுமையாக இல்லாத நிலையில் பாடசாலை, தபாலகம், சனசமூக நிலையம் போன்றவை செயற்படமுடியாத நிலை ஏற்பட்டுள்ளது.

இப்பகுதியில் சுமார் 250இற்கும் மேற்பட்ட குடும்பங்கள் மீளக் குடியமர்ந்துள்ளன. இந்நிலையில் சாதாரண ஓலைக்குடிசை போடுவதற்குக் கூட எதுவித வசதியும் அற்றநிலையில் மக்கள் உள்ளனர்.

இப்பிரதேச வீதிகளும் ஒழுங்கைகளும் மிகவும் மோசமாகப் பாதிக்கப்பட்ட நிலையில் உள்ளன. இவற்றிற்கு உடனடியாகத் தகுந்த நடவடிக்கை எடுக்குமாறு கோரி இந்த மறியல் போராட்டம் மேற்கொள்ளப்படுகிறது.

இன்றுகாலை 9 மணி தொடக்கம் நண்பகல் வரை பளைப் பிரதேச செயலகம் முன்பாக இந்த மறியல் போராட்டம் இடம்பெறும். தொடர்ந்து மக்களின் குறைகள் அடங்கிய மகஜர் ஒன்றும் பிரதேச செயலரிடம் கையளிக்கப்படவுள்ளது என்று அவர்கள் தெரிவித்தனர்.

(ஒ-12)

---

'லைசன்ஸ்' சோதனையைத் தாமதிக்க

# பொலீஸ்மா அதிபரிடம் கோரிக்கை விடப்படுமா?

## குடாநாட்டு வாகன சாரதிகள் எதிர்பார்ப்பு

யாழ்ப்பாணம்,டிசெ.30

குடாநாட்டில் பொலீஸார் 'லைசென்ஸ்' சோதனையை மேற்கொள்வதை மேலும் சில மாதங்களுக்குத் தாமதப்படுத்துமாறு யாழ்.மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர்கள் உட்பட சம்பந்தப்பட்டவர்கள் பொலீஸ்மா அதிபரிடம் கோரிக்கை விடுக்கவேண்டும் என்று குடாநாட்டு மோட்டார் வாகன சாரதிகள் எதிர்பார்க்கின்றனர்.

யாழ்.குடாநாட்டில் சாரதி அனுமதிப் பத்திரம் சோதனையிடும் நடவடிக்கை ஏற்கனவே தீர்மானிக்கப்பட்டபடி நாளைமறுதினம் திங்கட்கிழமை முதல் நடைமுறைப்படுத்தப்படும் என்று யாழ். பொலீஸ் நிலைய போக்குவரத்துப் பொலீஸார் அறிவித்திருந்தனர்.

இதனையடுத்து குடாநாட்டில் சாரதி அனுமதிப்பத்திரம் வழங்கும் பணி விரைவுபடுத்தப்பட்டு அவை முற்றாகப் பூர்த்தியடையும் வரை வீதிச் சோதனையை இடைநிறுத்துமாறு அண்மையில் விடுதலைப் புலிகளின் யாழ்.மாவட்ட அரசியல் துறைப் பொறுப்பாளர் சி.இளம்பரிதி, யாழ்.பொலீஸ் அதிகாரிகளிடம் கேட்டிருந்தார்.

இந்த விடயம் குறித்து யாழ்.மாவட்ட பொலீஸ் அத்தியட்சகர், பொலீஸ்மா அதிபருக்கு அறிவித்துள்ளதாகத் தெரியவருகிறது. ஆயினும், பொலீஸ்மா அதிபரிடமிருந்து இதுவரை எந்தப் பதிலும் கிடைக்கவில்லை என்று பொலீஸ் வட்டாரங்கள் தெரிவித்தன. ஆகவே, ஏற்கனவே தாங்கள் தீர்மானித்தபடி 2003ஆம் ஆண்டு ஜனவரி மாதம் முதலாம் திகதி (நாளை மறுதினம்) தொடக்கம் 'லைசென்ஸ்' சோதனை இடம்பெறும் எனவும் அந்த வட்டாரங்கள் தெரிவித்தன.

வீதிச் சோதனையை மேலும் சில மாதங்களுக்கு இடைநிறுத்துமாறு பொலீஸ்மா அதிபர் தம்மிடம் அறிவித்தால் அது இடைநிறுத்தப்படும் எனவும் பொலீஸார் தெரிவித்துள்ளனர்.

எனவே, இந்த விடயத்தில் யாழ்.மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர்கள் மற்றும் சம்பந்தப்பட்ட தரப்புக்கள், பொலீஸ்மா அதிபருக்கு அழுத்தம் கொடுத்து குடாநாட்டு மோட்டார் உரிமையாளர்களின் 'லைசென்ஸ்' பிரச்சினைக்கு பரிகாரம் பெற்றுக் கொடுக்கவேண்டும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. (ஒ-4)

---

எதிர்வரும் ஆண்டில்

# 40 ஆயிரம் பேரைக் கொண்ட இளைஞர் படையணி அமைப்பு

கொழும்பு,டிசெ.30

அடுத்த ஆண்டில் இளைஞர் படையணிக்கென 40 ஆயிரம் பேர் சேர்த்துக்கொள்ளப்பட இருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது.

பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவின் ஆலோசனையின் பேரில் இந்த நடவடிக்கை ஆரம்பிக்கப்படவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

முதற்கட்டமாக அடுத்த மாதம் தொடக்கம் ஒவ்வொரு மாவட்டத்திலும் உள்ள தேர்தல் தொகுதிகளில் இருந்து 250 பேர் இந்த இளைஞர் படையணிக்குச் சேர்த்துக்கொள்ளப்படுவார்கள். இவர்களுக்கு மாதம் 2 ஆயிரம் ரூபா கொடுப்பனவு வழங்கப்படும்.

இதில் 250 ரூபா கட்டாய வைப்புப் பணமாக இருக்கும். இதற்கென மாதம் ஒன்றிற்கு 80 கோடி ரூபா செலவு செய்யப்படவுள்ளது.

நாடளாவிய ரீதியில் 8 பிரிவுகள் உருவாக்கப்பட்டு ஒவ்வொரு பிரிவிலும் பணிப்பாளர் ஒருவர் நியமிக்கப்படுவார்.

ஒவ்வொரு தேர்தல் தொகுதியிலும் இது தொடர்பான தொடர்பு அலுவலகமொன்று நிறுவப்படவுள்ளது.

பிரதமரால் நியமிக்கப்படும் சபை ஒன்றினால் இந்தத்திட்டம் முன்னெடுக்கப்படும். பாதுகாப்பு அமைச்சின் செயலாளர், நிதி அமைச்சின் செயலாளர், தேசிய இளைஞர் சேவைகள் சபையின் பணிப்பாளர் நாயகம் ஆகியோர் இச்சபையில் நிரந்தர அங்கத்துவம் வகிப்பர்.

இளைப்பாறிய சிரேஷ்ட பாதுகாப்புப் படை அதிகாரி ஒருவரும், தனியார் துறையைச் சேர்ந்த பிரபல வர்த்தகப் பிரமுகர் ஒருவரும் இச்சபையில் அங்கத்துவம் வகிக்கவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இந்த இளைஞர்களுக்கு ஆங்கிலம் மற்றும் கணனிப் பயிற்சிகளும் வழங்கப்படும்.

(ஒ-12)

### நாளை

மார்கழி 16
செவ்வாய்க்கிழமை
(31.12.2002)
திதி : துவாதசி
காலை 7.07 வரை.
திரயோதசி வைகறை
5.11 வரை
நட்சத்திரம் : அனுசம்
முன்னிரவு 7.15 வரை
பிரதோஷ விரதம்
சுபநேரம் : 10.30 - 11.20
ராகுகாலம் : 3.29 - 4.51
(பழைய நேரப்படி)

### உதய வாக்கு

உதவி செய்யவேண்டும் என்ற உறுதியில்லாதவருக்கு இரக்கம் இருந்தும் பயனில்லை.

---

# சமுர்த்தி வங்கிச் சேவைகளை விரிவுபடுத்த நடவடிக்கை

வலி.வடக்கு,டிச.30

யாழ் மாவட்டத்தில் இயங்கவுள்ள சமுர்த்தி அபிவிருத்தி வங்கிகளின் சேவையை விரிவுபடுத்துவதற்கான முன்முயற்சி நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு யாழ்.செயலக புனர்வாழ்வுப் பகுதியினர் ஈடுபட்டுள்ளனர்.

வடக்குக் கிழக்கில் தற்போது இடம்பெற்றுவரும் புனர்வாழ்வு, புனரமைப்பு நடவடிக்கைகளுக்கான கொடுப்பனவுகளை இவ்வங்கிகள் மூலம் வழங்குவது தொடர்பான செயற்றிட்டம் ஒன்றும் தற்போது ஆராயப்பட்டு வருகிறது.

இது சம்பந்தமான அறிவுறுத்தல், திட்டப் பணிப்பாளரினால் யாழ்.மாவட்டப் பிரதேச செயலகங்களுக்கு அனுப்பிவைக்கப்படவுள்ளன.

யாழ்.மாவட்டத்தில் உள்ள பிரதேச செயலர் பிரிவு மட்டத்தில் சமுர்த்தி வங்கிகளை இயங்கச் செய்வதற்கான ஆரம்ப நடவடிக்கைகள் தற்போதே எடுக்கப்பட்டு வருகின்றன என்பது குறிப்பிடத்தக்கதாகும்.

(ஒ-86)

---

நிரந்தர நியமனம் வழங்கக்கோரி

# தொண்டர் ஆசிரியர்கள் பகிஷ்கரிப்புக்கு முஸ்தீபு!

ஏழாலை,டிசெ.30

வடக்கு - கிழக்கு மாகாணத்தில் உள்ள பாடசாலைகளில் பணியாற்றும் தொண்டர் ஆசிரியர்களுக்கு ஜனவரி மாதம் முதலாம் திகதிக்கு முன்னர் நிரந்தர நியமனம் வழங்காதுவிட்டால் தொடர் பகிஷ்கரிப்புப் போராட்டத்தில் ஈடுபட யாழ். மாவட்ட தொண்டர் ஆசிரியர் சங்கம் நடவடிக்கை மேற்கொண்டுள்ளது.

தமக்கு நிரந்தர நியமனம் வழங்குமாறு கோரி, தாம் பல தரப்பினரைச் சந்தித்துப் பேசியதுடன் முன்னரும் பகிஷ்கரிப்புப் போராட்டத்தில் ஈடுபட்டதாகவும் -

அந்தச் சந்தர்ப்பங்களில் எல்லாம் உரிய அதிகாரிகள் வழங்கிய வாக்குறுதிகளை நம்பி போராட்டங்களை கைவிட்டதாகவும் -

தொண்டர் ஆசிரியர் சங்கம் சுட்டிக்காட்டியுள்ளது. இனியும் வாக்குறுதிகளை நம்பமுடியாது. எதிர்வரும் முதலாம் திகதிக்கு முன்னர் நியமனம் வழங்கப்படாவிட்டால் தாம் போராட்டத்தை ஆரம்பிக்கப்போவதாகவும் அச்சங்கத்தினர் தெரிவித்துள்ளனர். நிரந்தர நியமனம் கோரி வன்னிப் பகுதியைச் சேர்ந்த தொண்டர் ஆசிரியர்கள் மேற்கொள்ளவுள்ள பகிஷ்கரிப்புப் போராட்டத்துடன் இணைந்து இங்கும் போராட்டம் நடத்தவுள்ளதாக யாழ். மாவட்ட தொண்டர் ஆசிரியர் சங்கத்தினர் அறிவித்துள்ளனர். இதேவேளை, தொண்டர் ஆசிரியர்களுக்கு நிரந்தர நியமனம் பெறுவது தொடர்பான எதிர்கால நடவடிக்கைகளுக்கு வசதியாக இலக்கம்16, 3ஆம் ஒழுங்கை, பருத்தித்துறை வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் தொண்டர் ஆசிரியர்களை தொடர்புகொள்ளுமாறு சங்கத் தலைவர் கேட்டுள்ளார்.(ஒ-10-ரி)

## வாழ்த்துகிறோம்



கரவெட்டிப் பிரதேச சோலராக நியமனம் பெற்றுள்ள.
பெருமைமிக்க எமது பாடசாலையின் பழைய மாணவரும்
நுண்மதியாளருமாகிய

**உயர்திரு. கந்தையா கனகரத்தினம்**

அவர்களை எமது பாடசாலைச் சமூகம் அக மகிழ்வுடன் வரவேற்று, இப்பிரதேசத்தில் அவர் தம் பணிமேன்மேலும் சிறப்புற வாழ்த்துகின்றோம்.

பழைய மாணவர் சங்கம்,
யா/நெல்லியடி மத்திய மகா வித்தியாலயம்,
கரவெட்டி.

(சி-25747)

## 31ஆம் நாள் நினைவஞ்சலி

### அந்தியேட்டி அழைப்பு

தோற்றம்
09 - 03 - 1925



மறைவு
01 - 12 - 2002

**திருமதி முருகுப்பிள்ளை செல்லமாணிக்கம் (ஆச்சி)**

"பாசத்தின் ஒளியாய் ஒளிர்ந்த எம் அன்புத் தெய்வம் எம்மை விட்டுப் பிரிந்தாலும் உங்கள் நினைவு எம் நெஞ்சங்களை விட்டு என்றும் அகலா!"

31. 12. 2002 செவ்வாய்க்கிழமை திருநாவலூர் தெணி அம்மன் அந்தியேட்டி மண்டபத்தில் நடைபெறும் கிரியைகளிலும் வீட்டு மதியபோசனத்திலும் கலந்துகொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

*75/8, நா.மு.வீதி,*
*பருத்தித்துறை.* (சி-25741)

கா.மு.சிவகுருநாதன்
(மகன்).

## இரண்டாம் ஆண்டு நினைவஞ்சலி

மண்ணில்
19 - 07 - 1929



விண்ணில்
22 - 12 - 2000

**அமரர் செல்லையா இளையதம்பி (சாமியார்)**

திதி: 30.12.2002

அன்பின் இருப்பிடமே பாசத்தின் ஒளிவிளக்கே!
என்றும் எமக்காக உம் வாழ்வைத் தந்தவரே!
இன்றுடன் இரண்டாண்டு எமைவிட்டுச் சென்றாலும்
என்றும் உம் நினைவு எம் நெஞ்சில் நிலைத்திருக்கும்.

*துவாளி வீதி,*
*உடுப்பிட்டி.* (12421)

மனைவி, மக்கள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள், பூட்டப்பிள்ளைகள்.

## 5ஆம் ஆண்டு நினைவலைகள்

மலர்வு
26 - 11 - 1926



உதிர்வு
06 - 01 - 1997

**அமரர் பொன்னம்பலம் சண்முகலிங்கம்**

(கார் சாரதி - திருநெல்வேலி)

திதி: 30-12.2002

எங்கள் அன்பின் அப்பாவே!
ஐந்து ஆண்டுகள் சென்றாலும் நாங்கள் எப்படி மறப்பது?
அன்போடு பேசி ஆதரவாய் பழகி
பண்போடு வாழ்ந்து மறைந்த அப்பாவே!
உங்களோடு வாழ்ந்த நாள்கள் எங்கள்
உள்ளத்தில் நீங்காது நிலைத்திருக்கும்.
*உங்கள் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.*

(12343)

*முத்துமாரி அம்மன் வீதி,*
*திருநெல்வேலி தெற்கு,*
*யாழ்ப்பாணம்.*

தங்கள் பிரிவால் வாடும்:
மனைவி, பிள்ளைகள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்.




நத்தார், புதுவருட தினத்தை முன்னிட்டு
சிறப்புத்தள்ளுபடி விலையில்!
நவநாகரிக சேட், T.சேட், கோட்சூட், சூட் வகைகள், டெனிம், சோக்கோ ரவுசர் வகைகள், ரவுசர் துணிவகைகள், ஜம்பர் வகைகள், பட்டுச்சாறிவகைகள், பேபிகவுண் வகைகள், ஸ்கேட் & பிளவுஸ் வகைகள், சல்வார்கமீஸ் வகைகள், கவுண் வகைகள், நவீன டிசைன்களில் பலரக சாறி வகைகள்
அனைத்தையும்
கிறிஸ்மஸ், புதுவருட அதிரடித் தள்ளுபடியில் பெற்றிட



**மிலேனியம் பெஷன்**

(பொம்பே பஜார்) *(மலாயன் கபே முன்பாக)*
(C/25527) 10, மின்சார நிலைய வீதி, பெரியகடை, யாழ்ப்பாணம்.


## நெஞ்சகலா நினைவஞ்சலிகள்

| முதலாம் ஆண்டு | இரண்டாம் ஆண்டு | ஐந்தாம் ஆண்டு |
|---|---|---|
|  |  |  |
| திருமதி மகாலிங்கம் பரமரத்தினம் | அமரர் மகாலிங்கம் அருள்பிரகாசம் | செல்வன் அருள்பிரகாசம் அஜந்தன் |
| 06.02.1926 மண்ணில் | 22.03.1953 மண்ணில் | 12.09.1980 |
| 10.01.2002 விண்ணில் | 20.09.2000 விண்ணில் | 02.02.1997 |

ஆண்டுகள் பல சென்றாலும் ஆறாது எம் துயரம்!
காலத்தின் கோலத்தால் நீங்கள் கரைந்த போது....
உம் நினைவில் எம் இதயம் என்றும் துடிக்கிறது
எப் பிறப்பில் நாம் காண்போம் உம் இனிய முகம்?
*உங்கள் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.*
*ஓம் சாந்தி!*

*தபாற் கந்தோர் வீதி, கற்குழி,*
*சாவகச்சேரி.* (12422)

*உங்கள் பிரிவால் துயருறும்:*
குடும்பத்தினர்.


ஆஹா ! புதுவருடத்தில் புத்தம் புது சைக்கிளில்
பாடசாலைக்கு செல்லுங்கள்



**இலவசம்**

ஹீரோ சைக்கிள் வாங்குபவர்களுக்கு ரூபா. 100,000 பெறுமதியான காப்புறுதி



ஸ்டான்ட், லொக், பெல், உதிரிப்பாகங்கள், பேக், கண்ணாடி, சேறுபடாது காக்கும் FLAP இலவசம்



**வாங்கிவிட்டீர்களா?**
**HERO CYCLE**
மக்கள் மனதை வென்ற சைக்கிள்
**ஹீரோ**

சர்வதேச ரீதியில் ISO சான்றிதழ் பெற்றதும் இலங்கையில் அதிகமாக விற்பனையாகின்ற பைசிக்கிளும் இதுவே

Sole Agent

HERO CYCLES

**National / Panasonic**

**FAIZAL HARDWARE STORES**
74, Dam Street, Colombo 12. Phone : 433727, 423273, 384250-3

# சமஷ்டி அரசமைப்பு - ஒரு பார்வை

**இனப்பிரச்சினைக்குத் தீர்வாக சமஷ்டி அரசமைப்பு முறை குறித்து ஆராய அரசும் விடுதலைப் புலிகளும் இணங்கியுள்ளனர். எனவே, சமஷ்டி அமைப்பு முறை குறித்து தெரிந்துகொள்வது முக்கியமானது. அந்நோக்கில் சி.ஜே.அமரதுங்க என்பவர் எழுதி 'லங்காதீப' நாளிதழில் வெளியாகிய கட்டுரையின் தமிழாக்கத்தை இங்கு தருகிறோம்.**

## மாற்றார் தோட்டத்திலிருந்து...

**தமிழில்:வீயெஸ்ரீ**

சமஷ்டி அல்லது இணைப்பாட்சி முறை அரசமைப்பே ஸ்ரீலங்காவுக்குப் பொருத்தமானது என்ற கருத்து இன்றோ நேற்றோ ஏற்பட்டதொன்றல்ல. ஸ்ரீலங்கா, அந்நியர் ஆட்சியினின்றும் சுதந்திரம் அடைவதற்கு முன்பிருந்தே அவ்வாறானதொரு கருத்து நிலவி வந்தது. இது தொடர்பாக முதன் முதலில் கருத்து வெளியிட்டவர் எஸ். டபிள்யூ. ஆர். டி. பண்டாரநாயக்க ஆவார். 1926ஆம் ஆண்டு ஜூலை மாதம் 26ஆம் திகதி வெளிவந்த "சிலோன் மோர்ணிங் லீடர்" பத்திரிகையில் வெளிவந்த 'சமஷ்டி முறைத் தீர்வு' என்ற தலைப்பிலான கட்டுரையில் பண்டாரநாயக்காவின் இக்கருத்து குறிப்பிடப்பட்டுள்ளது.

சமஷ்டி ஆட்சி முறையில் அவ்வப் பிரிவுகளில் இணைப்பாட்சி அமுல் படுத்தப்படும். ஆனால், நாட்டின் பொதுவான பிரச்சினைகள் குறித்து ஆராயவென அவர்களுக்காக சபையொன்று ஏற்படுத்தப்படும். அமெரிக்காவில் அவ்வகையான நிர்வாக முறையே நடைமுறையில் உள்ளது. அவுஸ்திரேலியா, தென்னாபிரிக்கா மற்றும் கனடா போன்ற பல்லின மக்கள் வாழும் நாடுகளில் இவ்வாறான இணைப்பாட்சி முறையே நடைமுறையில் உள்ளது. சுவிற்ஸர்லாந்து நாட்டின் சமஷ்டி அமைப்பு முறையே ஸ்ரீ லங்காவுக்கு மிகவும் பொருத்தமுடையதாகும்.

ஸ்ரீலங்காவின் சகல மாவட்டங்களிலும் இணைப்பாட்சி முறை பேணப்படவேண்டும். நாட்டின் தேசியத் தேவைகள் தொடர்பாக ஆராய்ந்து நடவடிக்கை மேற்கொள்ள ஒன்று அல்லது இரண்டு சபைகள் அமைக்கப்படல்வேண்டும்.

இந்த யோசனைக்கெதிராகப் பல்வேறு எதிர்ப்புக்கள் கிளம்பியுள்ளன. இந்த எதிர்ப்புக்கள் ஓய்ந்த பின்னர் ஏதோ ஒரு விதத்தில் அமைந்த அமைப்பு முறையே பொருத்தமானதெனத் தெரியவரும்.

இற்றைக்கு எழுபத்தைந்து ஆண்டுகளுக்கு முன்னர் பண்டாரநாயக்காவால் தெரிவிக்கப்பட்ட இந்த யோசனை நடைமுறைப்படுத்தப்படாவிட்டாலும் அது தொடர்பான கருத்துக்கள் தொடர்ந்து வெளியிடப்பட்டன. 1920களில் ஸ்ரீலங்காவுக்கு புதிய அரசமைப்பு ஒன்றை உருவாக்குவது தொடர்பாக டொனமூர் ஆணைக்குழு அபிப்பிராயங்கள் திரட்டிய வேளையில் சமஷ்டி முறை அறிமுகப்படுத்தப்பட வேண்டுமென மேல் மாகாண மக்கள் அபிப்பிராயம் தெரிவித்தனர். தாம் தனியானதொரு கலாசாரப் பின்னணி கொண்டவர்கள் என அவர்கள் எண்ணியதன் காரணமாகவே அவ்வாறு கோரினர்.

சுதந்திரத்தின் பின்னரான காலப் பகுதியில் இச்சமஷ்டி அமைப்பு கோரிக்கை தமிழ்மக்கள் மத்தியில் தலையெடுத்தது. இந்நாட்டின் பெரும்பான்மை இன மக்களின் எதிர்ப்புக்கு இக்கோரிக்கை உள்ளானது. அது ஒரே இராச்சியத்தை பாதுகாத்தல் என்ற கருத்துவரை விரிவடைந்து சென்றது. கடந்த இருபது வருடங்கள் ஏரியான உள்நாட்டுப் போர்க் காலத்தில் இக்கருத்து இறுக்கமான விதத்தில் வெளிப்படுத்தப்பட்டது.

ஆனால், தற்போது சமாதானப் பேச்சுக்களில் ஈடுபட்டுள்ள அரசும், விடுதலைப் புலிகள் அமைப்பும் சமஷ்டி முறையிலான அரசமைப்பொன்றினை உருவாக்க இணங்கியுள்ளமையால் மீண்டும் இக்கருத்து முக்கியத்துவம் பெறுகிறது. தற்போதும் சமஷ்டி ஆட்சிமுறை தொடர்பான பலவித கருத்து வெளிப்பாடுகளும், விரோதமும் வெளிப்படத் தொடங்கியுள்ளன. இச்சமஷ்டி ஆட்சி முறை [illegible] தெளிவான விளக்க[illegible] காரணமா[illegible] பான விரி[illegible] இன்று அவசியமாகி[illegible].

சமஷ்டி அல்லது இணைப்பாட்சி முறைக்கு பல நூற்றாண்டு வரலாறுண்டு. பரவலாக்கப்பட்ட ஆட்சி முறையிலான அரசமைப்பு உருவாக்கப்படும்போதும் நாடுகள் ஒன்றிணையும்போதும் இந்தச் சமஷ்டி முறை உருவாக்கப்படுகிறது.

தற்போதைய அமெரிக்கா, 52 தனித்தனியான இறைமை கொண்ட குடியரசுகளை உள்ளடக்கிய ஓர் இராச்சியமாகும். இரண்டாவது உலக யுத்தத்தின்போது பிரிந்து செல்வதற்கு முன்னர், 19ஆம் நூற்றாண்டில் இன்றைய ஜேர்மனி கூட ஒன்றிணைந்த அரசாகவே விளங்கியது. அங்கு ஒரு காலத்தில் வெவ்வேறாக நிர்வகிக்கப்பட்ட பிரிவுகள், சமஷ்டி



ஆட்சிமுறையின் கீழ் ஒன்றிணைக்கப்பட்டன. இவ்வகையில் ஒன்றிணைக்கப்பட்ட இராச்சியமொன்றுக்கு தெளிவான உதாரணமாக சுவிற்ஸர்லாந்தை எடுத்துக்கொள்ளலாம். சுயாதீனமாக நிர்வகிக்கப்பட்டுவந்த வெவ்வேறு பகுதிகள், மத்திய அரசொன்றுடன் இணைக்கப்பட்டதன் மூலம் ஒன்றிணைந்த அரசானது இம்முறையின் மூலம் முழு நாட்டையும் நிர்வகிக்கும் பொருட்டான குறிக்கப்பட்ட முக்கிய பிரதான அதிகாரங்கள் மத்திய அரசுக்கு வழங்கப்பட்டதுடன், பிரதேசங்களை நிர்வகிக்க தேவைப்பட்ட அதிகாரங்கள், பிராந்திய அரசுகளுக்கோ அன்றேல் குடியரசுகளுக்கோ குறித்தொதுக்கப்பட்டன.

இருபதாம் நூற்றாண்டில் ஏகாதிபத்தியவாதிகளிடமிருந்து பல நாடுகள் சுதந்திரமடைந்ததை அடுத்து சமஷ்டி நிர்வாக முறை உலகம் பூராவும் பிரபல்யமடைந்தமையைக் காண முடிந்தது. நீண்டகாலமாக அடிமைப்பட்டிருந்து சுதந்திரமடைந்த நாடுகள், சுதந்திரத்தின் பின்னர் சமஷ்டி அமைப்பிலான அரசமைப்பின் மூலம் தமது நிர்வாகத்தை மேற்கொண்டன. இந்த வகையில் ஒரு சில நாடுகளில் ஆரம்பத்தில் ஒற்றையாட்சி முறையிலான அரசமைப்பு அறிமுகப்படுத்தப்பட்டபோதும், பின்னர் சிற்சில பிரிவுகள் சேர்க்கப்பட்டு அரசமைப்பு மாற்றத்துக்கு உட்படுத்தப்பட்டது. இதன்படி இன்று உலகில் எழுபதுக்கும் மேற்பட்ட நாடுகளில் சமஷ்டி முறையில் அல்லது இணைப்பாட்சி முறையில் அமைந்த அரசமைப்பு பேணப்படுகிறது. அதாவது உலகின் சனத்தொகையின் கணிசமான எண்ணிக்கையினர் இவ்வகையான அரசமைப்பின் மூலமே நிர்வகிக்கப்படுகின்றனர்.

சமஷ்டி அல்லது இணைப்பாட்சி முறை என்ற வரையறைக்கு மாறான அரசியல், அரசமைப்பின் வரையறையாக அமைவது - ஒன்றுபட்ட, அன்றேல் பிரிவுபடாத - என்ற சொற்பதமாகும். விரிவாக இதனை ஆராய்ந்து பார்ப்பதானால், ஒன்றுபட்ட என்பதன் மூலம் அரச அதிகாரத்தை ஒரு மத்திய [illegible]பத்திலிருந்து மட்டுமே நடைமுறைப்படுத்தல் எனக் கருதமுடியும். அதாவது நாட்டின் தலைநகரில் ஏற்படுத்தப்பட்டுள்ள அரசினூடாக சட்ட திட்டங்களை நிறைவேற்றி முழு நாட்டையும் நிர்வகித்தலாகும். இந்நடைமுறையின் கீழ் மாகாண மட்டங்களுக்கு அதிகாரங்களைப் பங்கீடு செய்ய முடியும். அதேவேளை, தேவையான சந்தர்ப்பத்தில் பங்கீடு செய்த அந்த அதிகாரங்களை மத்திய அரசு திரும்பப் பெற்றுக்கொள்ளவும் இயலும். இதன்மூலம், அதிகாரங்களைக் கட்டுப்படுத்தல் என்ற வகையான நடவடிக்கை மேற்கொள்ள முடியும்.

அரசமைப்புப் போன்றே, அதிகாரங்கள் பகிர்ந்தளிக்கப்பட்ட இணைப்பாட்சி நிர்வாக முறையில் மத்திய அரசுக்கு உள்ளவை போன்றே பிராந்திய இணைப்பாட்சி நிர்வாகத்துக்கும் பகிர்ந்தளிக்கப்படும் அதிகாரங்கள் உறுதிப்படுத்தப்படும்.

அவையாவன:-

☆ பிராந்தியத்துக்கு ஒதுக்கப்படும் அதிகாரங்கள் வரையறுக்கப்பட்டு, மற்றெல்லா அதிகாரங்களும் மத்திய அரசுக்கே ஒதுக்கப்படுதல்.

☆ மத்திய அரசுக்கான அதிகாரங்கள் வரையறுக்கப்பட்டு, மற்றெல்லா அதிகாரங்களையும் பிராந்தியங்களுக்கு ஒதுக்கீடு செய்தல்.

☆ மத்திய அரசுக்கான அதிகாரங்களையும், பிராந்தியங்களுக்கான அதிகாரங்களையும் அரசமைப்பில் தனித்தனியாகக் குறிப்பிடுதல். ஆகியவையே அவையாகும்.

உலகம் பூராகவும் சமஷ்டி ஆட்சி முறை ஒரேவிதத்தில் அமைந்திருக்கவில்லை. ஒவ்வொரு நாட்டிலும் மத்திய அரசுக்கும், பிராந்தியங்களுக்கும் வித்தியாசமான வகைகளில் அதிகாரங்கள் பகிர்ந்தளிக்கப்பட்டுள்ளன. அவற்றுக்கான அரசியற் செயற்பாடுகளும் வித்தியாசமானவை. அபரிமிதமான அதிகாரங்களைக் கொண்ட மத்திய அரசும், குறைந்த அதிகாரங்களைக் கொண்ட பிராந்திய அரசுகளும் உள்ளன. அதைப்போன்றே அபரிமிதமான அதிகாரங்களை உடைய பிராந்திய அரசுகளும் குறைந்த அதிகாரங்கள் உடைய மத்திய அரசும் உள்ளதை, சமஷ்டி முறை அனுசரிக்கப்படும் பல நாடுகளில் அவதானிக்க இயலும்.

இந்திய நாட்டிலுள்ள சமஷ்டியாட்சி முறையின் கீழ் மத்திய அரசுக்கு அதிக அளவிலான அதிகாரங்கள் ஒதுக்கப்பட்டுள்ளன. இதனை அதிகாரங்கள் குறைந்த இணைப்பாட்சி முறை என அரசமைப்பு வல்லுநர்கள் குறிப்பிடுகின்றனர்.

முன்னைய சோவியத் யூனியனில் நடைமுறையிலிருந்த அரசமைப்பில் மத்திய அரசுக்கு மிகக் குறைந்த அளவான அதிகாரங்களே ஒதுக்கப்பட்டிருந்தன. இது கூட்டரசுச் சங்கம் என்ற விதத்தில் குறிப்பிடப்பட்டது. இக்கூட்டரசு, 15 தனித்தனி நாடுகள் சேர்ந்த கூட்டாக அமைந்தது. இப்பதினைந்து நாடுகளையும் உள்ளடக்கியே சோவியத் தேசம் உருவாக்கப்பட்டிருந்தது.

நிலப்பரப்பிலும், சனத்தொகையிலும் ஸ்ரீலங்காவை ஒத்ததும், சமஷ்டி முறையில் ஆட்சி செய்யப்படுவதுமான நாடு சுவிற்ஸர்லாந்து ஆகும். இதனது விஸ்தீரணம் 15 ஆயிரத்து 941 சதுர மைல்களாகும். இங்கு வசிக்கும் மக்களில் 70 சதவீதமானோர் ஜேர்மன் மொழியும், 20 சதவீதமானோர் பிரெஞ்சு மொழியும், 6 சதவீதமானோர் இத்தாலிய மொழியும் மற்றும் 4 சதவீதமானோர் உரோமானிய மொழியுமாக நான்கு மொழி பேசும் இனத்தவர்கள் இங்கு வாழ்கின்றனர். அவர்களில் 60 சதவீதமானோர் புரொட்டஸ்தாந்து மதத்தையும், மற்றையோர் றோமன் கத்தோலிக்க மதத்தையும் பின்பற்றுவோராவர்.

இச்சிறுநாடு 'கன்ரன் 22' என அழைக்கப்படும் இணைப்பாட்சி அரசமைப்பின் கீழ் நிர்வகிக்கப்படுகிறது. இக்கன்ரன் எனப்படும் பிராந்திய அரசுகளுக்கு அதிக அதிகாரங்கள் ஒதுக்கப்பட்டுள்ளன. தத்தமது விடயங்களில் வெவ்வேறான சட்ட விதிகளைத் தயாரித்து நடைமுறைப்படுத்தும் அதிகாரமும் அவற்றுக்கு வழங்கப்பட்டுள்ளன. தேசிய நலன் தொடர்பான அதிகாரங்களே மத்திய அரசின் வசம் உள்ளன.

சாதாரணமாக சமஷ்டி ஆட்சி முறையில் நாட்டின் தேசிய பாதுகாப்பு, நிதி, வெளிவிவகாரம் மற்றும் தேசிய கொள்கைத் திட்டமிடல் ஆகியவையே மத்திய அரசின் அதிகாரத்தில் இருக்கும். இவ்வகையான அதிகாரங்கள் இதுவரை பிராந்திய அரசொன்றுக்கு வழங்கப்பட்டதில்லை.

மத்திய அரசொன்றுக்கென தனியான அரசமைப்பு விதிகளும் நிறைவேற்று அதிகாரமும் உருவாக்கப்படுவது போன்றே பிராந்திய அல்லது மாகாண அரசுகளுக்கும் தனியான அரசமைப்பு விதிகளும், நிறைவேற்று அதிகாரமும் உருவாக்கப்படுவது இச்சமஷ்டி முறை அரசியலில் காணப்படும் விஷேட அம்சமாகும். பிராந்திய அரசோ அல்லது மாகாண அரசோ, முதலமைச்சரே அரச தலைவர் என்ற விதத்தில் தத்தமது அரசுகளை நிர்வாகம் செய்தல்வேண்டும்.

முழு அரசுக்கும் பொருத்தமான அடிப்படைச் சட்டங்கள் கைக்கொள்ளப்படவேண்டிய அதேசமயம், சில பிராந்தியங்களுக்கு ஏற்றவகையான சட்டதிட்டங்கள் சமஷ்டி ஆட்சிமுறையினூடாகக் கடைப்பிடிக்கப்படமுடியும். உதாரணமாக அமெரிக்காவில் சில பிராந்தியங்களில் மரணதண்டனை நிறைவேற்றும் நடைமுறை கடைப்பிடிக்கப்படும் அதேவேளை, வேறு சில பிராந்தியங்களில் மரண தண்டனை நடைமுறை கடைப்பிடிக்கப்படுவதில்லை. அதேபோன்று சுவிற்ஸர்லாந்தில் சில 'கன்ரன்'களில் பெண்களுக்குக் குறிப்பிட்டதொரு வயதுவரை வாக்களிப்பு உரிமை கடந்த பத்து ஆண்டுகளாக வழங்கப்படவில்லை. ஆனால், சுவிற்ஸர்லாந்தின் மத்திய அரசில் பெண்களுக்கு வாக்குரிமை வழங்கப்பட்டிருக்கிறது. இதன் காரணமாக குறிப்பிட்ட 'கன்ரன்'களைச் சேர்ந்த பெண்கள், மத்திய அரசுக்கான தேர்தல்களில் மட்டுமே வாக்களிக்க முடியுமேயன்றி, தாம் வசிக்கும் 'கன்ரன்'களுக்கான தேர்தலில் வாக்களிக்கும் உரிமையை இழக்கின்றனர்.

அதுமட்டுமன்றி, சமஷ்டி அல்லது இணைப்பாட்சி அரசமைப்பு என்ற வகையில், காலனித்துவ ஆட்சியின் போதும், அதற்கு முற்பட்ட காலத்திலும் இவ்வகையான நடைமுறைகள் பின்பற்றப்பட்டதாக வரலாற்றில் குறிப்பிடப்பட்டுள்ளது. முற்காலத்தில் ஸ்ரீலங்கா, றுகுணு மற்றும் மாயா எனப் பிரிவுகளாக நிர்வகிக்கப்பட்டு வந்துள்ளது. நாடு ஒன்றுபட்டிருந்த சந்தர்ப்பங்களில் அப்பிரதேசங்களுக்குக் குறுநில மன்னர்கள் நியமிக்கப்பட்டுப் பரிபாலிக்கப்பட்டது. நாட்டின் முக்கிய மன்னனுக்கு வருடாந்தம் திறை செலுத்துவதன்மூலம், மாகாணங்களைக் குறுநில மன்னர்களோ, பிரதேச அதிபதிகளோ நிர்வகித்து வந்தனர். அதுகூட ஒரு வகையான சமஷ்டி ஆட்சி முறையே ஆகும்.

சமஷ்டி மற்றும் ஒன்றிணைந்ததான அரசமைப்பு முறைகள் கடந்த காலங்களில் பல்வேறு மாற்றங்களுக்கு உட்படுத்தப்பட்டன. ஒன்றி[illegible] அரசமைப்பு எனக் குறிப்பிடப்பட்ட முறைமையின்கீழ் அதிக அளவில் அதிகாரங்களைப் பகிர்ந்தளித்து, அதேவேளை அவற்றை ஒன்றிணைத்து வைத்திருந்தமையே இதற்கானதொரு காரணமாகும். சீன நாட்டில் இவ்வகையான அரசமைப்பு நடைமுறையில் உள்ளது. இணைப்பாட்சி உரிமை கொண்ட 80 பிராந்தியங்களும் 116 பிரதேசங்களும் சீன நாட்டில் இந்த விதமாக நிர்வகிக்கப்படுகின்றன. ஒன்றிணைந்த அரசமைப்பு உடைய நாடு எனக் கருதப்படும் பிரிட்டனில் ஸ்கொட்லாந்து மற்றும் வேல்ஸ் பிராந்தியங்களுக்கு அதிகாரத்தைப் பகிர்ந்தளிக்கத் தற்போது நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றன. எனவே, பிரிக்கப்படாத - மற்றும் இணைப்பாட்சியுள்ள - ஆகிய பதங்களையிட்டு வேறுபட்ட அர்த்தம் கொள்வது இன்றைய நிலையில் தவறான கருத்துக்களாகும்.

சமஷ்டி முறை கடைப்பிடிக்கப்படும் வேளை கருத்து வேறுபாடுகள் ஏற்படுவதற்கான மற்றொரு காரணம், சமனற்ற விதத்திலான அதிகாரப் பகிர்வு நடவடிக்கையாகும். அதாவது குறிப்பிட்ட சில பிராந்தியங்களுக்கு மற்றையவற்றைவிட அதிக அதிகாரங்களைப் பகிர்ந்தளித்தலாகும். தற்போது இந்திய நாட்டில் இவ்வகையான நடவடிக்கைகள் இடம்பெறுகின்றன.

இனப்பிரச்சினைகள் இடம்பெறும் நாடுகளில இவ்வகையான சமஷ்டி அரசியல் முறையை அறிமுகப்படுத்தியன்மூலம் பிரச்சினைகளுக்குத் தீர்வு காணப்பட்டுள்ளது. நைஜீரியாவையும் இந்தியாவையும் இதற்கு உதாரணமாகக் கொள்ளமுடியும்.

நைஜீரியாவின் 'பியாப்றா' பிராந்தியத்தில் பிரிவினைவாத அமைப்பு உருவான வேளையில், அந்த இனப் பிரச்சினைக்குத் தீர்வாக, நைஜீரிய அரசு சுதந்திரத்தின்பின் தான் பின்பற்றி வந்த ஒற்றையாட்சி நடைமுறை அரசமைப்பு முறையை சமஷ்டி ஆட்சி முறையான அரசமைப்பாக மாற்றிக்கொண்டது. ஆரம்பத்தில் ஐந்து பிராந் தியங்களாக வகுக்கப்பட்டிருந்த நைஜீரியா தற்போது 21 பிராந்தியங்களாக வகுக்கப்பட்டு நிர்வகிக்கப்படுகிறது.

இந்தியாவின் தமிழ்நாடு பிராந்தியத்திலேயே முதன்முதலில் தனியான தமிழ்நாடு ஒன்றை உருவாக்கும் நோக்கத்தில் அரசியல் பிரசாரம் ஆரம்பிக்கப்பட்டது. இந்தியா பூராவிலும் சமஷ்டி ஆட்சிமுறை ஏற்படுத்தப்பட்டு அதிகாரங்கள் பகிர்ந்தளிக்கப்பட்டதையடுத்து 1962இல் தனிநாட்டு இராச்சியக் கோரிக்கை விடப்பட்டது. 1987இல் மிசோரம் பிரிவினைக் கிளர்ச்சியாளர்களுடன் இந்திய அரசு பேச்சு மேற்கொண்டு அப்பிராந்தியத்துக்கு அதிக அதிகாரங்கள் வழங்கி உடன்படிக்கை மேற்கொண்டது. இதனால் பிரிவினைக் கோரிக்கையைக் கிளர்ச்சியாளர்கள் கைவிட்டனர். இந்தியாவின் ஆந்திரப் பிரதேசத்திலும் கர்நாடக மாநிலத்திலும் பிரிவினைவாதப் பிரச்சினை மேலதிக அதிகாரங்களை அம்மாநிலங்களுக்கு வழங்கியதன்மூலம் தீர்த்து வைக்கப்பட்டது. கூர்கா இனப் போராளிகளுடன் செய்துகொண்ட உடன்படிக் கையின்படி வங்காளத்தில் பிரஜிலின் என்ற பெரியல் புதிய மாவட்ட சபை உருவாக்கப்பட்டமை இதற்கு ஓர் உதாரணமாகும்.

பிலிப்பைன்ஸ் நாட்டில் 'மன்தநாவோ' தீவில் முஸ்லிம் இனப் போராட்டத்துக்குத் தீர்வுகாணும் வகையில் இணைப்பாட்சிப் பிரதேசமொன்று உருவாக்கப்பட்டது. இதன்மூலம் அப்பிரிவினைவாதத்துக்கு முடிவு காணப்பட்டது.

உலகத்தின் பல்வேறு நாடுகளில் இனப்பிரச்சினைகள், வெவ்வேறு காரணங்களை அடிப்படையாகக்கொண்டு தோன்றியுள்ளன. அவற்றுக்கு அரசியல் நீதியிலான, அரசமைப்பு மூலமான தீர்வாக சமஷ்டிமுறை பிரயோசனமான பலனளிக்கும். அதற்கொரு காரணம் அதில் காணப்படும் நெகிழ்த்தன்மையாகும். அதாவது இது ஒரேயொரு வழியில் அமைந்த அணுகுமுறை, கொண்டதல்ல. ஆகவே, நாட்டின் நிலைமைக்குப் பொருத்தமான விதத்தில் எம்மால் விதிகளை உருவாக்கிக் கொள்ளமுடியும்.

ஸ்ரீலங்கா போன்ற நாடொன்று இனப்பிரச்சினைக்கான தீர்வு காணும் வேளையில் சமஷ்டி முறை போன்று வேறொரு வழிவகையும் பயன்படுத்தமுடியும். அதாவது அதிகாரப் பகிர்வின்மூலம் இதனை அடைய முடியும். அது மத்திய அரசின் மூலமாகவோ, மாநில அரசுமூலமாகவோ அதிகாரத்தை வேறுபட்ட இன மக்களிடையே பகிர்ந்தளிக்கும் நடைமுறையாகவோ அல்லது பெரும்பான்மை இனத்தவரால் சிறுபான்மை இனத்தவர் பாதிப்புக்குள்ளாக இடமளிக்காத விதத்தில் ஏதாவது ஓர் அடிப்படை நடைமுறைக்கு அமைய ஏற்படுத்தப்படும் ஒழுங்கமைப்பை உருவாக்குதலாகும். சமஷ்டி அமைப்பில் இரண்டாவது ஆலோசனைச் சபை உருவாக்கப்படுவது இந்த நோக்கத்திலேயேயாகும்.

இந்த அணுகுமுறையை மேலும் அபிவிருத்தி செய்யவேண்டியது ஸ்ரீலங்காவுக்கு அவசியமானதொன்றாக இருக்கும். இன்றுவரை மத்திய அரசின் அதிகாரங்களைப் பகிர்ந்தளிப்பது தொடர்பாகவே பெரும்பாலும் பேசப்பட்டு வந்தது. ஆனால், ஸ்ரீலங்காவில்

(8ஆம் பக்கம் பார்க்க)

# சின்னஞ்சிறு விளம்பரம்

## விற்பனைக்கு

56... தொடரிலக்கமுடைய LITE ACE 2C TOYATA எஞ்சின் பொருத்தப்பட்ட AC வளமுள்ள வான் மற்றும் 94 ஸ்ரீயைக் கொண்ட CD TWIN மோட்டர் சைக்கிளும் விற்பனைக்கு உண்டு. தொடர்பு: நல்ல சமாரியான் காரியாலயம், கோண்டாவில் கிழக்கு. T.P.: 021 - 222 - 2488, 021 - 222 - 3820. (12450)

புதிய, பழைய பாடல்கள் அடங்கிய ஓடியோ CD 200 விற்பனைக்கு உண்டு. தொடர்பு: கு.கிருபாகரன், இல.R.67, திருநெல்வேலிச் சந்தி. T.P.: 077 - 7153690. (12429)

மறுசீரமைக்கப்பட்ட நல்ல நிலையிலுள்ள 40ஸ்ரீ XXXX ELF ட்ரக் விற்பனைக்கு உள்ளது. தொடர்புக்கு: 0777 - 271479, 0777 - 271478. (12423)

BROILER சேவல், கல்பேட்ஸ் மொத்தமாகவும் சில்லறையாகவும் விற்பனைக்கு உண்டு. சுத்தம்செய்து தரப்படும். தொடர்பு:- சே.கிருஸ்ண குமார், விதானை வளவு, பொன்னாலை வீதி, மானிப்பாய் (பிப்பிலிச் சந்திக்கு முன்பாக). (12304)

புறொயிலர், கல்பேட்ஸ் சுகாதார முறைப்படி சுத்தம்செய்து வேண்டிய நிறைகளில் எவ்வேளையிலும் பெற்றுக்கொள்ளலாம். தொடர்பு:Y.A.சுரேஸ் (கிராமக் கோட்டுச் சந்தியிலிருந்து 150m உள்ளே), பருத்தித்துறை. (12219)

மானிப்பாய், மத்திய சந்தைக்கு முன் ஒழுங்கையில் 3 1/4 பரப்புக் காணி, வீடு, கிணற்றுடன் விற்பனைக்கு உண்டு. தொடர்பு: ஆ.சிவராஜா, கூழாவடி தபால் கந்தோருக்கு அருகில், 04ஆம் கட்டை, ஆனைக்கோட்டை. (11208)

## புத்தகங்கள்

அராலியூர் ந.சுந்தரம்பிள்ளை 29.12.2002 உதயனில் எழுதிய கட்டுரையை வாசித்துப் பார்த்தீர்களா? அவரது நூல்கள்: 1. யாழ்ப்பாணமா? கொழும்பா? 2. இலக்கியக் கட்டுரைகள், 3. 'வீடற்றவன்' நாவலின் விளக்கமும் விமர்சனமும், 4. எங்கள் நாடு, 5. இலக்கிய விமர்சனம். (12454)

## தேவை

ஆசிரியர் குடும்பத்திற்கு கொக்குவில், இணுவில், கோண்டாவில், தாவடி, உடுவில் ஆகிய இடங்களில் வீடு அல்லது அனெக்ஸ் தேவை. விள.இல.1739, மே/பா. உதயன், யாழ்ப்பாணம். (12424)

யாழ்ப்பாணம், பிரதான வீதியில் அல்லது கச்சேரி - நல்லூர் வீதியில் யாழ்.செயலகத்திற்கு சமீபமாக விசாலமான வீடுகள் வாடகைக்கு உடன் தேவை. 401, காங்கேசன்துறை வீதி எனும் முகவரியில் உடன் தொடர்பு கொள்ளவும். (12432)

## தவறிவிட்டது

நீர்வேலியைச் சேர்ந்த க.கோமளேஸ்வரியினுடைய தே.அ.அட்டை (இல. 466910635V), வி.அ.அட்டை என்பன நீர்வேலிக்கும் கோப்பாய்க்கும் இடையில் தவறிவிட்டன. கண்டெடுத்தவர்கள் க.கோமளேஸ்வரி, நீர்வேலி வடக்கு, நீர்வேலி என்னும் முகவரிக்கு அனுப்பிவைக்கவும். (12458)

# கண்ணீர் அஞ்சலி

எமது சங்கச் செயலாளரும் வேலணை பிரதேச செயலகத்தில் அபிவிருத்தி இணைப்பாளராகக் கடமையாற்றுபவருமான தர்மலிங்கம் குலரஞ்சினி அவர்களின் அன்புத் தந்தையார்

## குமாரசாமி தர்மலிங்கம்

*(66/3, பழம் வீதி, கந்தர்மடம், யாழ்ப்பாணம்)*

அவர்களது மரணச் செய்தி அறிந்து அதிர்ச்சியும் வேதனையும் அடைகின்றோம். இவரது பிரிவால் துயருறும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்வதுடன், அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

(12469)

பழம் வீதி, கந்தர்மடம், யாழ்ப்பாணம். — யாழ்.மாவட்ட அபிவிருத்தி இணைப்பாளர்களின் சங்கம்.

# நியூட்டன் உயர்கல்வி நிறுவனம்

ஆரியகுளம் சந்தி அருகில் யாழ்நகர்.

**A/L 2003 PAPER CLASS**
பல்தேர்வு வினாக்கள் (M.C.Q.)
(500 வினாக்கள்)
A/L 2004 படவேலை
BY:K.கிரிதரன்
(B.A. (Hons) Geo.spl.)
ஆரம்பம்: 31. 12. 2002 காலை 10. 00 மணி

**A/L 2005**
கலைப்பிரிவு
எமது பட்டப்படிப்பு விரிவுரையாளர் குழுவுடன் ஆரம்பம்.
ஜனவரி – 5 காலை 8. 00 மணி

(12461)

# பாராட்டி வாழ்த்துகின்றோம்



கோண்டாவில் வடக்கைச் சேர்ந்த

## திரு. வைரமுத்து சந்திரசேகரம்

*(கிராமசேவை உத்தியோகத்தர், கந்தர்மடம்)*

அவர்கள் அகில இலங்கை சமாதான நீதவானாக 05.12.2002 இல் சத்தியப்பிரமாணம் எடுத்தமையையிட்டு அவரைப் பாராட்டி வாழ்த்துவதில் பெருமகிழ்ச்சி அடைகின்றோம்.

*பளவத்தை, சமரபாகு, வல்வெட்டித்துறை.* (12453) க.புலேந்திரன் குடும்பத்தினர்.

# பத்தாம் ஆண்டு நினைவஞ்சலி



மலர்வு 27 - 07 - 1951

உதிர்வு 20 - 12 - 1992

## திருமதி பிறைசூடி இராசேஸ்வரி

*(வவா)*

திதி: 30.12.2002

பத்து ஆண்டுகள் ஆயிடினும் ஆறவில்லை எங்கள் துயரம்
எத்தனை உறவுகள் எமக்கிங்கு இருப்பினும்
நித்தமும் அம்மா என்றழைக்க இவ்வுலகில் நீங்களில்லை
நெஞ்சம் மறக்குமா எங்கள் இதயத் தெய்வத்தின் இழப்பினை
அம்மா உங்கள் நினைவுகள் எம் நெஞ்சைவிட்டு என்றும் அகலாது.

*உங்கள் ஆத்மா சாந்திபெற நல்லூரானைப் பிரார்த்திக்கின்றோம்.*
*ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!*

*62, செட்டித்தெரு, நல்லூர்.* (12452) கணவர், பிள்ளைகள், சகோதரி, மருமகள், பேர்த்தி.

# 31 ஆம் நாள் நினைவஞ்சலி



செல்வி

## தவராசா நிஷோபிஜா

அன்பு முகம் எங்கே மறைந்து போச்சு?
ஆசை விழி ஒளி இழந்து போச்சு!
இன்ப மழலை மொழி எங்கே கேட்போம்?
ஏன் அம்மா எம்மைவிட்டுப் பிரிந்து சென்றாய்?

அன்புத் தந்தை - மு.தவராசா
தாய் - த.மரியலீலா
அண்ணன்மார் - த.துஷ்யந்தன், த.நிஷாந்தன், த.கிருஷாந்தன், த.றியாந்தன்
தம்பிமார் - த.திலிப்ஸ்காந்த், த.றொபிநிக்காந்த், தினேஸ்காந்த் குடும்பத்தினர்.

*சரஸ்வதி வித்தியாலய வீதி, சேமன் ஒழுங்கை, கரவெட்டி வடக்கு, கரவெட்டி.*

தகவல்: த.துஷ்யந்தன் (மூத்த அண்ணன்).

(12457)

# கண்ணீர் அஞ்சலி

செல்வன் பிறேமதாசனின் அன்புச் சகோதரன்

## கணேசமூர்த்தி சிவகுலதாஸ்

அவர்கள் 27.12.2002 அன்று பிரான்ஸில் இயற்கை எய்தியமையையிட்டு அன்னாரின் குடும்பத்திற்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு, அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

*கரவெட்டி கிழக்கு, கரவெட்டி.* (12465) கரவையூர் நண்பர்கள்.

# கண்ணீர் அஞ்சலி

ஸ்ரீராம்ஸ் ரெக்ஸ்ரைல்ஸ் உரிமையாளர் திரு.சி.சிவகுமாரன் அவர்களின் அன்புத் தாயார்



## திருமதி கனகமணி சிவஞானம்

அவர்கள் கனடாவில் காலமான செய்தி அறிந்து நாம் கவலையடைவதுடன் கண்ணீர் அஞ்சலியைக் காணிக்கையாக்கி அன்னாரின் ஆத்ம சாந்திக்காக இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

*இருபாலை, யாழ்ப்பாணம்.* (12460) - ஸ்ரீராம்ஸ் ரெக்ஸ்ரைல்ஸ்

# மரண அறிவித்தல்கள்

## திருமதி கனகமணி சிவஞானம்

கோப்பாய் தெற்கு, இருபாலையைப் பிறப்பிடமாகவும் நல்லூரை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி கனகமணி சிவஞானம் (28.12.2002) சனிக்கிழமை கனடாவில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற சிவக்கொழுந்து சிவஞானம் (பங்காளர், சின்னத்துரை & பிறதர்ஸ்) அவர்களின் அன்பு மனைவியும் காலஞ்சென்றவர்களான அருணாசலம் (குட்டியப்பா) தம்பதியினரின் அன்பு மகளும் காலஞ்சென்றவர்களான சிவக்கொழுந்து தம்பதியினரின் அன்பு மருமகளும் காலஞ்சென்ற உலகநாதன் (வேல் ரேட் சென்ரர்) மற்றும் திருமதி பரமேஸ்வரி சோதிநாதன் (இருபாலை) ஆகியோரின் அன்புச் சகோதரியும் திருமதி சிவகுமாரி யோகநாதன் (தென்ஆபிரிக்கா), சிவகுமாரன் (ஸ்ரீராம்ஸ் ரெக்ஸ்ரைல்ஸ், இருபாலை), திருமதி சிவமலர் நவரட்ணம் (கனடா), சிவகாந்தன் (கனிஸ்கோ), திருமதி சிவசௌந்தரி மகேந்திரன் (கனடா) ஆகியோரின் அன்புத் தாயாரும் டாக்டர் யோகநாதன் (தென் ஆபிரிக்கா), நளினி சிவகுமாரன் (கொழும்பு), நவரட்ணம் (பொறியியலாளர், கனடா), மகேந்திரன் (கணக்காளர், கனடா), சயனுதா சிவகாந்தன் (கொழும்பு) ஆகியோரின் அன்பு மாமியாரும் சிவயோகன் (சிங்கப்பூர்), சிவாஜினி (நியூஸிலாந்து), சிவசங்கர் (அமெரிக்கா), வித்தியா (அமெரிக்கா), ஆர்த்திகா, அபினாஷ் (கொழும்பு), சரண்யா, நிவிஷிதா, நிரோசன், மயூரி (கனடா), அர்ச்சதா, ரிஷ்விதா, சிஷ்விதா (கொழும்பு) ஆகியோரின் பாசமிகு பேர்த்தியும் லக்ஷிதா, சைத்தன்யா, அமிர்த்தா, அபர்ணா ஆகியோரின் பூட்டியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (31.12.2002) செவ்வாய்க்கிழமை கனடாவில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*31/8, சுலைமான் ரெறஸ், கொழும்பு-5. 01-594500 / 503138*
*திருமதி சிவகௌரி நவரட்ணம் Scarborough Canada 001-416-2871853*
(12459)

தகவல்: சி.சிவகுமாரன், சி.சிவகாந்தன் (மகன்மார்) *393/48, கோயில் வீதி, நல்லூர்.*

## நாகநாதர் சுப்பிரமணியம்

கல்வியங்காடு, ஞானபாஸ்கர வீதியைப் பிறப்பிடமாகவும் கொக்குவில் கிழக்கு, சாயிதுர்க்கா அம்மன் கோவிலடியை வசிப்பிடமாகவும் கொண்ட நாகநாதர் சுப்பிரமணியம் 28.12.2002 சனிக்கிழமை இரவு காலமானார்.

அன்னார் பரமேஸ்வரியின் அன்புக் கணவரும் நாகேஸ்வரி, பாலசிங்கம், இரத்தினசிங்கம், குணபாலசிங்கம் மற்றும் காலஞ்சென்ற தனபாலசிங்கம், விஜயகுலசிங்கம் ஆகியோரின் அன்புத் தந்தையும் தனலக்ஷுமியின் அன்புச் சகோதரரும் சிவலிங்கம் (கிளிநொச்சி), சாவித்திரி, சாந்தி, புஷ்பராணி, இதயராணி ஆகியோரது அன்பு மாமனாரும் சிவபரன், ஜெயகலா, நிசாந்தன், ரமேஷ், பிரதாபன், சதீஸ், நிரோசன், தனுசியா, தர்சன், தஜீன், தபேசன், தர்சனா, தர்சாயிணி, தனுஜன், சுயாத்தா, சங்கர் ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (30.12.2002) திங்கட்கிழமை நண்பகல் 12.00 மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக கொக்குவில் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*சாயிதுர்க்கையம்மன் கோவிலடி, கொக்குவில் கிழக்கு, கொக்குவில்.* (12455)

தகவல்: பாலசிங்கம், இரத்தினசிங்கம், குணபாலசிங்கம் (மகன்மார்).

# கலைஞானி சேகரித்த பொருள்களை காப்பகம் அமைத்து பேணவேண்டும்!

## அவரது சிரார்த்த தின நிகழ்வில் வேண்டுகோள்

யாழ்ப்பாணம்,டிசெ.30

மாமனிதர் கலைஞானி இறக்கும் வரையும் சேர்த்து வைத்த வரலாற்றுச் சின்னங்களையும் அரும்பொருள்களையும் காப்பகம் ஒன்றை அமைத்துப் பேணுவதற்கு எமது சமுதாயம் விரைவில் நடவடிக்கை எடுக்கவேண்டும்.

- இவ்வாறு கேட்டுக்கொண்டார் செஞ்சொற்செல்வர் ஆறு.திருமுருகன்.

மாமனிதர் கலைஞானியின் முதலாவது சிரார்த்ததின நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றுகையிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

சர்வதேச தமிழீழ மாணவர் பேரவையின் அலுவலகத்தில் பேரவைத் தலைவர் எஸ்.கஜேந்திரன் தலைமையில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற இந்த நிகழ்வில் உரையாற்றுகையில் அவர் மேலும் தெரிவித்ததாவது:-

'வரலாற்றுக் களஞ்சியமாக விளங்கியவர் அமரர் கலைஞானி. அவரது இறுதிச் சடங்குக்கு வருகை தந்தவர்கள் மிகவும் சொற்பமானவர்களே. ஆனால், அதைவிட அதிகமானவர்கள் அவரின் முதலாவது சிரார்த்த தினத்துக்கு வருகை தந்துள்ளதை எண்ணி மகிழ்ச்சி அடைகின்றேன். இனிவரும் காலங்களில் இதைவிட அதிகமானவர்கள் வருவார்கள் என எண்ணுகிறேன். பாரதியாரைப்போல இவரின் பெருமையையும் காலம் செல்லச் செல்லத்தான் மக்கள் அறிந்து கொள்வார்கள். பாரதியாரின் இறுதிச் சடங்குக்கு வெறும் 12 பேர் மட்டுமே சென்றார்களாம். ஆனால், இன்று அவரின் பெருமையை, வரலாறை அகிலமெங்கும் பேசுகிறது. அதுபோலவே கலைஞானியின் நாமம் என்றும் நிலைத்திருக்கும்' என்றார்.

யாழ்.பல்கலைக்கழக தமிழ்த் துறைத் தலைவர் பேராசிரியர் அ. சண்முகதாஸ் அங்கு உரையாற்றும் போது தெரிவித்ததாவது:-

'ஒரு சமுதாயம் தனது பாரம்பரியப் பொருள்கள், சின்னங்கள், அரும்பொருள்கள் என்பவற்றைப் பேண வேண்டும் என்பதற்கு வழிகாட்டி அமரர் கலைஞானி என்றால் அது மிகையல்ல. அந்த அளவுக்கு அவர் சேகரித்த, பேணிய பொருள்கள் ஏராளம். அவற்றைத் தனது எதிர்காலச் சந்ததிக்கு கையளித்துவிட்டு அவர் மறைந்துவிட்டார்.

ஒரு தாய்க்கோழி தனது குஞ்சுகளைத் தன் இறக்கைக்குள் வைத்துப் பாதுகாப்பதுபோல கலைஞானியும் தான் சேகரித்தவற்றைத் தன்னுடனேயே வைத்துப் பாதுகாத்து வந்தார். தான் வரிந்து கொண்ட இலட்சியத்தில் இருந்து சற்றும் பிறழாது வாழ்ந்து தான் பேணியவற்றை தனது சந்ததிக்கு விட்டுச் சென்றுள்ளார்' என்றார் அவர்.

யாழ்.பல்கலைக்கழக உயர் பட்டப் படிப்புகள் பீடாதிபதி பேராசிரியர் சி. க.சிற்றம்பலம் தனதுரையில் கூறியதாவது:-

'அரும்பொருள்களைப் பேணுவதற்கு எமது தாயகத்தின் தலைநகரான திருகோணமலையில் தேசிய 'அரும்பொருளகம்' ஒன்றை நிறுவ வேண்டும். அதன் பிராந்திய நிலையங்களை யாழ்ப்பாணத்திலும் மட்டக்களப்பிலும் நிறுவலாம். இதன்மூலமே அரும்பொருள்களைப் பேணிப் பாதுகாக்கமுடியும்' என்றார்.

இந்த நிகழ்வில் விடுதலைப் புலிகளின் மகளிர் அரசியல்துறைப் பிரமுகர்கள், சர்வதேச தமிழீழ மாணவர் பேரவை உறுப்பினர்கள், பல்கலைக்கழக மாணவர்கள் மற்றும் அபிமானிகள் கலந்துகொண்டனர்.

(ஒ-10)

### மாணவரின் மன ஒழுக்கத்தைப் பேணும் வகையில்

# மதங்களின் ஊடான கல்வியை கட்டியெழுப்புவது அவசியம்!

## பிரதிக் கல்விப் பணிப்பாளர் வலியுறுத்து

தற்கால மணவர்களின் மன ஒழுக்கத்தைப் பேணும் வகையில் சமய மரபுகள் சரியாக பேணப்படவேண்டும். ஆகவே மதங்களின் ஊடான கல்வியை மேலும் கட்டியெழுப்புவது அவசியமாகும்.

- இவ்வாறு கூறினார் கல்வி அமைச்சின் பிரதிக் கல்விப் பணிப்பாளர் கலாநிதி க.தணிகாசலம்பிள்ளை.

கோப்பாய் கிறிஸ்தவ கல்லூரியின் 150ஆவது ஆண்டு நிறைவு விழாவின் முதல் நாள் நிகழ்வில் சிறப்பு விருந்தினராக கலந்து கொண்டு உரைநிகழ்த்தியபோதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

பாடசாலை அதிபர் ந.சிவகடாட்சம் தலைமையில் இடம்பெற்ற இந்த நிகழ்வில் அவர் தொடர்ந்து உரையாற்றுகையில் தெரிவித்ததாவது:-

முன்னைய கால மாணவர்கள் மதங்களின் ஊடான கல்வி மூலம் மன அமைதி, பெரியோர்களை மதிக்கும் பண்பு போன்றவற்றைக் கற்று வந்தார்கள். இன்று அந்த நிலை மாறியுள்ளது.

இன்றைய மாணவர்கள் காலையில் இருந்து மாலைவரையும் படிப்பு, படிப்பு என்று ஓடியாடி அலைகின்றார்கள்.

முன்னைய கால மாணவர்கள் பாடசாலையில் படித்து விட்டு மாலையில் பயன்தரத்தக்க பொழுதுபோக்குகளில் ஈடுபட்டனர். அதன் ஊடாக சமய, கலாசாரத்தையும் அவர்கள் கற்றுப்பேணி வந்தனர்.

அதன் மூலம் உடல் உறுதியினையும், மன அமைதியினையும், கலாசாரப் பண்புகளையும் வளர்த்து வந்துள்ளனர்.

இப்படிப்பட்ட நிலை மீண்டும் உருவாக சம்பந்தப்பட்ட சகல தரப்பினரும் நடவடிக்கை எடுக்கவேண்டியுள்ளது - என்றார்.

நல்லூர் பரியாக்கோப்பு தேவாலய வண.பிதா தோமஸ்ஜோர்ஜ் அவர்கள் தனது ஆசியுரையில் கூறியதாவது:-

தொடர்போரினால் கல்வியே பெரும் பாதிப்புக்குள்ளாகியுள்ளது. இன்று கல்வி புதிதாக மீண்டும் புனரமைக்கப்பட்டு வருகின்றது.

இதேவேளை, யாழ். பொது நூலகம் குறித்து நாம் சிந்திக்கவேண்டும். அழிந்த நூலகத்துக்கு பல கட்டடங்களையும் அமைக்கலாம். ஆனால், அதனூடாக எதனைத் தரப்போகின்றோம்? எரிந்துபோன புத்தகங்களை மீண்டும் எப்படிப் பெறுவது? இதுகுறித்தே முதலில் நாம் சிந்திக்கவேண்டும்.

இன்றைய மாணவ சமூகம் தொலைக்காட்சிக்கு அடிமையாகி அதில் சிக்கிச் சீர்கெட்டுக்கொண்டு போகிறது. இதுவும் சீர்செய்யப்பட வேண்டும் - என்றார் அவர்.

இந்த நிகழ்வில் பொறியியலாளர் க.ஸ்ரீஸ்கந்தராஜா, ந.யோகராசா, விழாச் சபைச் செயலாளர் எஸ்.கே. தங்கவடிவேல் ஆகியோரும் உரை நிகழ்த்தினர். பாடசாலையில் புதிதாக நிறுவப்பட்ட நூலகத்தை இந்து கலாசார அமைச்சர் தி.மகேஸ்வரன் திறந்துவைத்தார். இறுதியில் 'புதியதோர் உலகம் செய்வோம்' கவியரங்கும் இடம்பெற்றது.

(ஒ-180)

# ஆறு கொத்தணி பஸ் நிறுவனங்கள் ஜனவரி 15ஆம் திகதி கையேற்பு

கொழும்பு,டிசெ.30

ஆறு கொத்தணி பஸ் நிறுவனங்களின் பொறுப்பை பிரிட்டிஷ் நிறுவனமான ஐ.பி.ஐ.எஸ். எதிர்வரும் ஜனவரி 15ஆம் திகதி கையேற்கவிருக்கின்றது. இதற்கென அந்நிறுவனத்தின் பிரதிநிதிகள் குழுவொன்று ஜனவரி 6ஆம் திகதி இலங்கை வரும் என்று தெரிவிக்கப்படுகிறது.

இதற்கிடையே, எஞ்சிய ஏழு கொத்தணி பஸ் நிறுவனங்களின் 39 சதவீதப் பங்குகள் ஜனவரி 6ஆம் திகதி பங்குச் சந்தையில் விற்கப்படவிருக்கின்றன. இந்நிறுவனங்களைக் கொள்வனவு செய்ய ஏற்கனவே மூன்று வெளிநாட்டு நிறுவனங்கள் முன்வந்திருக்கின்றன எனத் தெரிகின்றது.

(ஒ)

## நாவற்குழியில் சட்டவிரோத செயற்பாடுகள்

நாவற்குழிச் சந்தியை அண்டிய பகுதிகளில் தற்போது சட்டவிரோத கசிப்பு விற்பனையும், சூதாட்டமும் இடம்பெறுவதாக அப்பகுதி மக்களால் தெரிவிக்கப்படுகின்றது.

இரவுபகலாக இந்த சட்டவிரோதச் செயற்பாடுகள் நடைபெறுவதனால் இச்செயலில் ஈடுபடுபவர்கள் மீது சம்பந்தப்பட்டோர் தகுந்த நடவடிக்கை எடுக்கவேண்டும் என இப்பகுதி மக்களால் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

(ஒ-75)

# சமஷ்டி அரசமைப்பு...

(7ஆம் பக்கத் தொடர்ச்சி)

மாகாணங்களுக்கான அதிகாரங்களில் மேலும் விரிவான பகிர்வு மேற்கொள்ள வேண்டி வரக்கூடும். அதாவது ஒரு மாகாணத்தில் வசிக்கும் பெரும்பான்மை இனமக்கள் அதே மாகாணத்தில் வாழும் சிறுபான்மையினத்தவரின் உரிமைகளை மறுக்க இயலாத விதத்திலான நடைமுறையை உருவாக்குதலாகும். வடக்கு - கிழக்கு மாகாணங்களில் வாழும் சிங்கள மற்றும் முஸ்லிம் இனத்தவர்களதும், தோட்டப்புறத் தமிழ்மக்களதும் பாதுகாப்பை உறுதிப்படுத்திக் கொள்வதற்கு இவ்வகையான அதிகாரப் பகிர்வு முறை அவசியமாகிறது.

சமஷ்டி அரசு முறையில் பாதுகாப்பளிக்கும் வகையான அதிகாரமொன்றும் உருவாக்கப்பட்டுள்ளது. அதுவே அரசமைப்பாகும். இந்த அரசமைப்பு சகல பிரிவுகளைச் சேர்ந்த அதிகாரிகளும் குறிப்பிடப்பட்ட விதிகளுக்குட்பட்டே கடமையாற்றவேண்டுமென வரையறை வகுக்கிறது. அரசமைப்பில் குறிப்பிடப்பட்டுள்ள பலதரப்பட்ட அடிப்படை எதிர்பார்ப்புக்களைச் சகல அதிகாரிகளும் கடைப்பிடிக்க வேண்டியவர்களாகின்றனர். பெரும்பாலும் ஜனநாயகம், அடிப்படை உரிமைகள், ஊடகச் சுதந்திரம் மற்றும் நீதியின் மேலாதிக்கம் ஆகிய அடிப்படைத் தர்மங்கள் அதில் உள்ளடக்கப்பட்டுள்ளன. அரசுக்கும் விடுதலைப் புலிகள் அமைப்புக்கும் இடையே சமஷ்டி அரசமைப்பு தொடர்பான இணக்கப்பாடு ஏற்படுமாயின் மேற்கூறிய அடிப்படைத் தர்மங்களுக்கமையவே இரு பகுதியினரும் செயலாற்றவேண்டியிருக்கும். இதன்மூலம் மேலும் யுத்தத்தில் ஈடுபடவோ, யுத்தவாத ஏகாதிபத்தியத்தைக் கடைக்கொள்ளவோ இந்நாட்டுக்கோ அல்லது இந்நாட்டில் வாழும் ஒரு பிரிவினருக்கோ வாய்ப்பு ஏற்படும் நிலைமை உருவாகாது. ★

## ஆஞ்சநேயர் ஆலய இசையரங்கு

வலிகாமம்தெற்கு,டிசெ.30

மருதனார்மடம் ஸ்ரீசுந்தர ஆஞ்சநேயர் ஆலயத்தில் நடைபெற்று வரும் இலட்சார்ச்சனையையொட்டி இன்று திங்கட்கிழமை மாலை நடைபெறவுள்ள இசை நிகழ்ச்சியில் சாகித்திய கானஅமிர்த வித்தகர் சோ.உமாரமண சிவாச்சாரியாரின் சாஸ்திரிய கர்நாடக சங்கீத இசை இடம்பெறும்.

இந்நிகழ்வில் எஸ்.ஜெயராமன் - வயலின், கே.கண்ணதாசன் - மிருதங்கம் ஆகியோர் பங்கேற்பர்.(ஒ-152)

# கல்விச்சாலைக் காட்சிகள்



மல்லாகம் விசாலாட்சி வித்தியாசாலையில் மேலைத்தேய வாத்தியக் குழு அண்மையில் ஆரம்பிக்கப்பட்டது.

இந் நிகழ்வில் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்ட தெல்லிப்பழைக் கல்விக் கோட்ட உதவிக்கல்விப் பணிப்பாளர் கா.சந்திரபாலன், பாடசாலை அதிபர் க.மகேஸ்வரன் ஆகியோர் மல்லாகம் பழம் பிள்ளையார் ஆலயத்திலிருந்து வாத்தியக் குழுவினரால் பாடசாலைக்கு அழைத்துவரப்படுகின்றனர்.

*(வலி.வடக்குச் செய்தியாளர்)*




அச்சுவேலி தெற்கு கஜமுகன் பாலர் பாடசாலையின் வெள்ளி விழாவும் - பாடசாலை ஆசிரியை மகேஸ்வரி பொன்னையாவின் சேவை நலன் பாராட்டு விழாவும் அண்மையில் நடைபெற்றன.

விழாவில் ஆசிரியை செல்வி மகேஸ்வரி பொன்னையாவுக்கு வலி.கிழக்கு பிரதேச சபையின் செயலாளர் எஸ்.குகதாசன் விருது வழங்கிக் கௌரவிப்பதைப் படத்தில் காணலாம். சனசமூக நிலைய அபிவிருத்தி அதிகாரி திருமதி.த.பாஸ்கரனும் மேடையில் அமர்ந்திருக்கின்றார். *(படம் : அச்சுவேலி செய்தியாளர்)*



காரைநகர் கலாநிதி ஆ.தியாகராசா மத்திய மகா வித்தியாலய உயர்தர வகுப்பு மாணவி ஆ.சியாமளாவின் 3ஆம் ஆண்டு நினைவு தினத்தையொட்டி வித்தியாலயத்தின் 2000ஆம் ஆண்டு உயர்தர கலை, வர்த்தக வகுப்பு மாணவர்களினால் வறிய மாணவர்களுக்கு பாடசாலை உபகரணங்கள் அன்பளிப்புச் செய்யப்பட்டன. பாடசாலை உபகரணங்களை மாணவர் ஒருவருக்கு வித்தியாலய வர்த்தக ஆசிரியர் எஸ்.உருத்திரசிங்கம் வழங்குவதைப் படத்தில் காணலாம்.

*(படம் : காரைநகர் செய்தியாளர்)*



ஆனைப்பந்தி மெதடிஸ்த மிஷன் தமிழ் கலவன் பாடசாலையில் சிறுவர் பூங்கா புனரமைக்கப்பட்டது. *(படம் குருநகர் செய்தியாளர்)*

# மரண அறிவித்தல்கள்

## வேலுப்பிள்ளை செல்லையா

*(ஓய்வுபெற்ற ஊழியர், புகையிரதப் பகுதி)*

மட்டுவில் தெற்கைப் பிறப்பிடமாகவும் மீசாலை வடக்கை (யா/ வீரசிங்கம் மகாவித்தியாலய பின்புறம்) தற்போதைய வதிவிடமாகவும் கொண்ட வேலுப்பிள்ளை செல்லையா அவர்கள் (ஓய்வுபெற்ற ஊழியர், புகையிரதப் பகுதி) நேற்று (29.12.2002) ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற நாகம்மாவின் அன்புக் கணவரும் சோமசுந்தரம், செல்வசுந்தரம், காலஞ்சென்ற நல்லைநாயகி மற்றும் தர்மேஸ்வரன், காலஞ்சென்ற பரமேஸ்வரி மற்றும் நகுலேஸ்வரி ஆகியோரின் அன்புத் தகப்பனாரும் தவமணிதேவி, நவமணி, தில்லையம்பலம் பத்மாவதி, தர்மலிங்கம் ஆகியோரின் மாமனாரும் காலஞ்சென்ற சின்னத்தம்பி, காலஞ்சென்ற பொன்னம்பலம் மற்றும் தியாகராஜா, பரமநாதன் ஆகியோரின் சகோதரரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (30.12.2002) திங்கட்கிழமை பிற்பகல் 2மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக வேம்பிராய் இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*நிரந்தர முகவரி:*
*சங்கத்தார்வயல்,*
*இயக்கச்சி.*

(12476)

தகவல்:
ச.தர்மலிங்கம்
(மருமகன்)

## கந்தப்பு கந்தையா

*(முன்னாள் காசாளர், சினிமாஸ் லிமிட்டெட், கொழும்பு)*

வண்ணார்பண்ணை, முருகமூர்த்தி வீதியைப் பிறப்பிடமாகக் கொண்ட கந்தப்பு கந்தையா நேற்று (29.12.2002) ஞாயிற்றுக்கிழமை காலமாகி விட்டார்.

அன்னார் காலஞ்சென்ற அன்னபூரணத்தின் அன்புக் கணவரும் தேவதாஸின் பாசமிகு தந்தையும் தயாவதியின் அன்பு மாமனாரும் காலஞ்சென்றவர்களான நாகம்மா, மீனாட்சி, கனகம்மா, சிவபாக்கியம் ஆகியோரின் சகோதரரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (30.12.2002) திங்கட்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று, காலை 10 மணியளவில் பூதவுடல் தகனக்கிரியைக்காக கோம்பையன் மணல் இந்துமயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளும்படி கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

*முருகமூர்த்தி வீதி,*
*வண்ணார்பண்ணை.*

(12475)

தகவல்:
க.தேவதாஸ்
(மகன்)

## திருமதி விநாயகமூர்த்தி தங்கம்மா

சாவகச்சேரியைப் பிறப்பிடமாகவும் நீர்வேலியை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி விநாயகமூர்த்தி தங்கம்மா நேற்று (29.12.2002) ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

*நீர்வேலி வடக்கு,*
*நீர்வேலி.*

(12477)

தகவல்:
வி.பாலகிருஷ்ணன்.
(மகன்)

## வீதி விபத்துகளில் மூவர் படுகாயம்!

வெவ்வேறு இடங்களில் நேற்று இடம்பெற்ற மூன்று வீதிவிபத்துக்களில் மூவர் படுகாயமடைந்தனர்.

மானிப்பாயில் ஓட்டோவும், சைக்கிளும் விபத்துக்குள்ளானதில் சைக்கிளில் சென்ற ஆனைக்கோட்டையைச் சேர்ந்த பொன்னுத்துரை பரராசசிங்கம் (வயது 56) என்பவரும் -

இளவாலையில் இடம்பெற்ற மற்றொரு வீதி விபத்தில் இளவாலை, போயிட்டியைச் சேர்ந்த யோசப் அந்தோனிப்பிள்ளை (வயது 54) என்பவரும் படுகாயமடைந்தனர்.

இதேவேளை, நல்லூரில் ஓடிக்கொண்டிருந்த மோட்டார் சைக்கிளுக்குப் பின்னால் இருந்து தவறி வழ்ந்து வல்வெட்டி சமரபாகுவை சேர்ந்த அனபழகன் இராசமலர் (வயது 45) என்பவர் தலையில் படுகாயமடைந்தார்.

படுகாயமடைந்த மூவரும் யாழ். போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். (ஒ-15)

## இலவச பாடநூல் விநியோகம்

தென்மராட்சி கல்வி வலயத்தைச் சேர்ந்த பாடசாலைகளுக்கு இலவச பாடநூல்கள் இன்று திங்கட்கிழமையும் நாளை செவ்வாய்க்கிழமையும் 10 மணி தொடக்கம் சாவகச்சேரி இந்துக கல்லூரியில் கையளிக்கப்படவுள்ளது.

கைதடி, மட்டுவில், சாவகச்சேரி நகர், சாவகச்சேரி வடநகர் ஆகிய பகுதிகளைச் சேர்ந்த பாடசாலைகளுக்கு இன்றும் ஏனைய பாடசாலைகளுக்கு நாளையும் பாடநூல்கள் வழங்கப்படுமென சாவகச்சேரி கோடடக்கல்வி அலுவலர் நா.சத்தியநாதன் அறிவித்துள்ளார். (ஒ-117)

## திட்டமிடல் குறித்த பயிற்சிப் பட்டறை

மேம்பாட்டு உபகுழுக்களின் உறுபபினர்களுக்கான செயற்பாடுகள் திட்டமிடுவது தொடர்பான கருத்தறிதல், திட்டமிடல் குறித்த பயிற்சிப் பட்டறை இன்று காலை 9.30 மணிக்கு யாழ். கல்வித்திணைக்களத்தில் நடைபெறவுள்ளது.

பேராசிரியர் அ.சண்முகதாஸ் தலைமையில் நடைபெறவுள்ள இந்தப் பட்டறையானது பிற்பகல் 4 மணிக்கு இடம்பெறும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஒ-12)

# பாடசாலைச் சேவை வான்களுக்கு ஒரே நிறம்

## கல்வி அமைச்சு ஆலோசனை

கொழும்பு,டிசெ.30

பாடசாலை மாணவர்களை ஏற்றிச்செல்லும் அரசாங்க, தனியார் வாகனங்களுக்கு ஒரே நிறம் பூசுவது அல்லது 'ஒரே அடையாளம் இடுவது குறித்து கல்வி அமைச்சு கவனம் செலுத்தி வருகிறது.

நாடு முழுவதிலும் பாடசாலைப் பிள்ளைகளின் சேவையில் ஈடுபட்டிருக்கும் வாகனங்களின் தொகை இப்பொழுது 20 ஆயிரத்துக்கும் அதிகமானதாகும்.

பாடசாலைச் சேவையில் ஈடுபடும் வாகனங்கள் விபத்துக்குள்ளாவதைக் குறைப்பது, அந்த வாகனங்களை இலகுவில் அடையாளம் காணுதல், மாணவர்களின் பாதுகாப்பை உறுதிப்படுத்துதல் போன்றவற்றுக்கு ஒரே நிறமோ அல்லது அடையாளமோ அவசியம் என அமைச்சர் கருணாசேன கொடித்துவக்கு கருதுகிறார். நிறத்தைப் பொறுத்தவரை மஞ்சள் நிறம் சிறந்ததென்று அமைச்சர் ஒரு யோசனையை முன்வைத்தார். (ஒ)

## 31ஆம் நாள் நினைவஞ்சலி

தோற்றம்
1936
-
10
-
21



மறைவு
2002
-
11
-
30

### அமரர் சதாசிவம் வீரசிங்கம்

*அன்போடு பேசி ஆதரவாய் பழகி*
*பண்போடு வாழ்ந்து மறைந்த அப்பாவே!*
*உங்களோடு வாழ்ந்த நாள்கள் எங்கள்*
*உள்ளத்தில் நீங்காது நிலைத்திருக்கும்.*

*அரசடி ஒழுங்கை,*
*இருபாலை.*

(12474)


- குடும்பத்தினர்.


# சுடர் ஒளி

31-12-2002
இதழில்

விலை
14/-

வாசிக்கும் நெஞ்சங்களை
யோசிக்கவைக்கும் ஒரே பத்திரிகை




2003 வர்ணக் கலண்டர்

நிபந்தனை இல்லாத பேச்சுக்கு
நிபந்தனை விதித்த படையினர்

முஸ்லிம் மக்களின் அரசியல்
அபிலாஷைகளை குழிதோண்டிப்
புதைக்கும் கட்சிப் பூசல்

சீரழிந்துபோகும் திட்டங்களும்
பேரழிந்துபோகும் பட்டங்களும்
- தேரடி.

கடை நடத்துவது எப்படி?
- நகைச்சுவை.

மற்றும் இணையத்தளங்களில் இருந்து,
பித்தன் பதில்கள், இலவச மருத்துவ
ஆலோசனை, விளையாட்டு, சினிமா,
இளஞ்சுடர் உட்பட பல்வேறு அம்சங்கள்.

(C/257453)

## மலிவு விலையில் கலர் தொலைக்காட்சி

புதிய Toshiba Kitt 20" கலர் T.Vகள்

★ 2 System Colour
★ AV IN மற்றும் Out
★ Automatic Power Supply
★ Dual Speaker
★ ABC Control
★ Filter Glass

ரூபா 13,500/= மட்டும். கையிருப்பு உள்ளவரை மட்டுமே!

**நஷனல் வீடியோ சென்ரர்**
182, கே.கே.எஸ். றோட்,
(குளப்பிட்டி சேர்ச் அண்மையில்)
கொக்குவில். Phone - 0777710785

(12468)


## மரண அறிவித்தல்

### திருமதி இராமையா திருமலர்

புன்னாலைக்கட்டுவன் வடக்கைப் பிறப்பிடமாகவும், தொண்டமனாறு, ஆவரங்கால், 10ஆம் கட்டையை வசிப்பிடமாகவும் கொண்ட இராமையா திருமலர் 27.12.2002 வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னார் நாதஸ்வர வித்துவான் V.A.இராமையர் அவர்களின் பாசமிகு மனைவியும் காலஞ்சென்ற தவில் வித்துவான் சூடாமணி தம்பதியினரின் மூத்த மகளும் தங்கவேல், லோகநாதன், சக்திவேல் (சுவிஸ்), வில்வநர்தன் (சுவிஸ்), தர்ஷின் (கஜன்) ஆகியோரின் அன்புத் தாயாரும் அமுதநாயகி, மாலதி, சரஸாங்கி (சுவிஸ்), சாந்தி (சுவிஸ்) ஆகியோரின் அன்புமாமியாரும் சத்தியபாமா, திருமதி இராஜேஸ்வரி விஜயமூர்த்தி, பாலா (ஹொலண்ட்), கண்ணன், விக்கி ஆகியோரின் சகோதரியும் பவதாரிணி, பவஷர்மிலி ஆகியோரின் பெரியப்பாவும் குருபரன், கீர்த்தனா, அனுவின், வேணுகாந்தன், அபிஷன், ஹாகித்யன், மகிழினி, பிரவீன், மதுஷன், விபுஷன், சுவர்ணா, செல்வி, தெட்சணா, துளசி, ரேவதி, குகன், மேகலா, சிந்து ஆகியோரின் அன்புப் பேர்த்தியாரும் கோவிந்தராஜன் (நாதஸ்வரம்) அவர்களின் சித்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (30.12.2002) திங்கட்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்றுப் பிற்பகல் 2 மணிக்கு பூதவுடல் தகனக் கிரியைகளுக்காக ஆவரங்கால் கருதடி இந்துமயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*10ஆம் கட்டை,*
*ஆவரங்கால்.*

(12467)

தகவல்:
பிள்ளைகள்.

## விபத்தில் சிக்கியவர் மீது தாக்குதல்!

கொடிகாமம்,டிசெ.30

மோட்டார்சைக்கிளில் வந்த இளைஞரும் வீதியில் சென்ற நபரும் மோதிக்கொண்ட விபத்தில் இளைஞர் காயம் எதுவும் இன்றித் தப்பினார். ஆனால், அப்பகுதியில் நின்றவர்கள் வழிமறித்து இளைஞரைத் தாக்கியதில் அவருக்கு நெற்றியில் காயம் ஏற்பட்டது. இச்சம்பவம் கொடிகாமத்தில் கடந்த வெள்ளிக்கிழமை இடம் பெற்றது.

நாவற்காடு, வரணியை வசிப்பிடமாகக் கொண்ட சிவராசா சுதர்சன் (வயது 20) என்ற இளைஞனே நெற்றியில் காயமடைந்தவராவார். (ஒ-74)

## கொடுப்பனவுகளுக்கு படிவம் நிரப்பும் பணி

குருநகர்,டிசெ.30

ஏ-9 பாதை திறக்கப்பட்ட பின்னர் வன்னியில் இருந்து குருநகர் ஜே/68 கிராம சேவையாளர் பிரிவில் குடியமர்ந்துள்ளவர்களுக்கு 15 ஆயிரம் ரூபா கொடுப்பனவு வழங்குவதற்கான படிவங்கள் பூர்த்தி செய்யும் பணி நாளை செவ்வாய்க்கிழமை காலை 9மணி தொடக்கம் றெக்கிளமேசன் சனசமூக நிலையத்தில் நடைபெறும் என இப்பகுதிக்கான கிராம உத்தியோகத்தர் செ.யூலன் தெரிவித்துள்ளார். (ஒ-51)

## பகுதி நேர விரிவுரையாளர் பதவி வெற்றிடம்

திறந்த பல்கலைக்கழக யாழ். பிராந்திய நிலையத்தில் சிறுவணிக முகாமைத்துவம், எந்திரவியல் டிப்ளோமா, சட்டமாணி ஆகிய கற்கை நெறிகளைப் போதிப்பதற்கான பகுதி நேர விரிவுரையாளர் பதவிகளுக்கு விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

மேற்படி பதவிகளுக்கு விண்ணப்பிக்க விரும்புவோர் திறந்த பல்கலைக்கழக யாழ்.பிராந்திய நிலையத்தில் விண்ணப்ப படிவங்களைப் பெறலாமெனவும் -

பூர்த்தியாக்கப்பட்ட விண்ணப்பப் படிவங்களை யாழ்.பிராந்திய நிலையத்தில் ஒப்படைக்குமாறும் - யாழ். பிராந்திய நிலைய இயக்குநர் ச.ஆ. ஞானேந்திரன் தெரிவித்துள்ளார். (ஒ-69)

## மரண அறிவித்தல்கள்

### திருமதி V.S. கணபதிப்பிள்ளை பத்மாவதி

(மானிப்பாய்)

மானிப்பாய், கனகசபை றோட்டைச் சேர்ந்த திருமதி V.S.கணபதிப்பிள்ளை பத்மாவதி (பவளம்) அவர்கள் 28.12.2002 சனிக்கிழமை இரவு காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற பிரபல வர்த்தகர் V.S. கணபதிப்பிள்ளையின் அன்பு மனைவியும் காலஞ்சென்றவர்களான சுதுமலையைச் சேர்ந்த சின்னத்தம்பி - சின்னம்மா தம்பதிகளின் அன்பு மகளும் காலஞ்சென்றவர்களான மானிப்பாயைச் சேர்ந்த சின்னத்தம்பி - முத்துப்பிள்ளை தம்பதிகளின் அன்பு மருமகளும் காலஞ்சென்ற பரமேஸ்வரன், பத்மராணி மற்றும் இந்திராணியின் பாசமிகு சகோதரியும் பாலரூபி, பாலரோகினி, பாலறஞ்சினி, கண்ணகை ஆகியோரின் பாசமிகு தாயாரும் நா.கணேசு (G.S.சுதுமலை), S.திருவாச்சிஸ்வரன் (V.S.K.மானிப்பாய்), சுப்பிரமணியம்(ஓய்வுபெற்ற படவரைஞர்), Dr.குலேஸ்வரகுமார் (மிருக வைத்தியர், ஹற்றன்) ஆகியோரின் மாமியாரும் தேவகி (நோர்வே), பகீரதி, கமலதாசன், சாந்தினி, திலகவதி, கீருபன், சொரூபன், வினோதினி, சுகன்ஜா, சாந்தரூபி, காயத்திரி, கவுசிகன் ஆகியோரின் பேர்த்தியும் பிரவிந்தனின் பூட்டியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் அவரது கனகசபை வீதியில் உள்ள இல்லத்தில் இன்று (30.12.2002) திங்கட்கிழமை காலை 9மணிக்கு (பழைய நேரம்) நடைபெற்றுப் பூதவுடல் தகனக்கிரியைக்காக மானிப்பாய் பிப்பிலி மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளும்படி கேட்டுக்கொள்கின்றோம்.

*கனகசபை வீதி,*
*மானிப்பாய்.*

(12451)

தகவல்:
பிள்ளை[illegible]ள்,
மருமக[illegible]

### திருமதி சண்முகம் பூமணி

காரைக்காட்டு லேன், வண்ணார்பண்ணையைச் சேர்ந்த திருமதி சண்முகம் பூமணி அவர்கள் நேற்று (29.12.2002) ஞாயிற்றுக்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற சண்முகத்தின் அன்பு மனைவியும் லோகநாதன் (கனடா), சிவா (சீவா திருத்தகம், நாச்சிமார் கோயிலடி), பிறேமா, சற்குணராசா (லண்டன்), பிரேமரஞ்சினி (கனடா), சண்முகராசா (கீர்த்தனா ரயர் வேக்ஸ், யாழ்.), சித்திரா (கனடா), ஸ்ரீகந்தராசா (கனடா), ஸ்ரீசங்கர் (ஜேர்மனி) ஆகியோரின் பாசமிகு தாயாரும் காலஞ்சென்றவர்களான நவரத்தினம், துரைராசா, பரமேஸ்வரி மற்றும் கந்தசாமி, சரஸ்வதி (இந்தியா) ஆகியோரின் அன்புச் சகோதரியும் ஆ.பத்மநாதன், ந.நாகராசாவின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் அவரது இல்லத்தில் இன்று (30.12.2002) திங்கட்கிழமை பிற்பகல் 3 மணிக்கு நடைபெற்றுப் பூதவுடல் கோம்பையன் மணல் இந்து மயானத்தில் தகனக்கிரியைக்காக எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*29, காரைக்காட்டு லேன்,*
*வண்ணார்பண்ணை,*
*யாழ்ப்பாணம்.*

(12466)

தகவல்:
ச.சிவா, ச.சண்முகராசா
(மகன்மார்),
இ.சத்தியலிங்கம்
(மருமகன்)

## சனிக்கிழமை அதிர்ஷ்டம்

உத்தியோகபூர்வ முடிவுகள்

செல்லுபடியாகும் டிக்கட் தொடர் இல. 3291035 இருந்து 3308830 வரை
சீட்டிழுப்பு இல. 1362
திகதி 28.12.2002

**வெற்றி எண்கள்**
**02 17 20 45 50**

போனஸ் எண் **03**

ஜக்பொட் பரிசு
**ரூபா.3,026,450/-** வெல்லப்பட்டது.

| பொருந்திய எண்கள் | வெற்றி பெற்றோர் | பரிசுத்தொகை | தொகை |
|---|---|---|---|
| 5 | 01 | 3,026,450/- | 3,026,450/- |
| 4 எண்களுடன் போனஸ் எண் | 02 | 100,000/- | 200,000/- |
| 4 | 110 | 10,000/- | 1,100,000/- |
| 3 | 5,591 | 500/- | 2,795,500/- |
| 2 | 94,026 | 20/- | 1,880,520/- |
| சீட்டிழுப்பில் ஆகக்குறைந்த 02ம் எண் (போனஸ் எண் தவிர்ந்து) | 115,186 | 10/- | 1,151,860/- |

வெல்லப்பட்ட மொத்த தொகை ரூபா.10,154,430/-

இந்த புதன்கிழமைக்கான ஜக்பொட்
**ரூபா. 1,500,000/-**

தொடர் இல. 2312215க்கு மேற்பட்ட ஊதா நிற டிக்கட்டுகள் 2003 ஜனவரி 01ம் திகதி புதன்கிழமை செல்லுபடியாகும். வெற்றி பெறும் டிக்கட்டுகள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.

சனிக்கிழமை அதிர்ஷ்ட சீட்டிழுப்பில் பணப்பரிசு வெற்றி பெறாத டிக்கட்டுகளில் தங்கப்பரிசு வெற்றி பெறும் 5 டிக்கட்டுகளின் தொடர் இலக்கங்கள்

3307331-9-27
3299854-5-70
3295695-2-56
3292500-1-88
3304845-5-87

அபிவிருத்தி லொத்தர் சபை,
இல. 33, சென்ற் மைக்கேல் வீதி,
கொள்ளுப்பிட்டி, கொழும்பு 3.

PHOENIX O&M

## அபிவிருத்தி அதிர்ஷ்டம்

உத்தியோகபூர்வ முடிவுகள்

| | | | |
|---|---|---|---|
| சீட்டிழுப்பு வாரம் | 435 | டிக்கட்டின் நிறம் - சிவப்பு | |
| திகதி | 27.12.2002 | செல்லுபடியாகும் தொடர் இல. 5641247-5654481 | |

வெற்றி இலக்கங்கள் **18 30 31 42**

லக்கினம்
தனுசு



ஜக்பொட் பரிசு
ரூபா. 1,000,000/-
வெல்லப்படவில்லை

இந்த செவ்வாய்க்கிழமைக்கான ஜக்பொட் ரூபா **1,659,700/-**

| இணையும் இலக்கங்கள் | வெற்றியாளர் தொகை | பரிசுத் தொகை(ரூ.) | மொத்தப் பரிசுத் தொகை(ரூ.) |
|---|---|---|---|
| 1 இல | 295,472 | 10 | 2,954,720 |
| 2 இலக்கங்கள் | 27,136 | 20 | 542,720 |
| 1 இல + லக்கினம் | 26,837 | 30 | 805,110 |
| 2 இல + லக்கினம் | 2,460 | 100 | 246,000 |
| 3 இலக்கங்கள் | 712 | 500 | 356,000 |
| 3 இல + லக்கினம் | 77 | 5,000 | 385,000 |
| 4 இலக்கங்கள் | 03 | 100,000 | 300,000 |
| 4 இல + லக்கினம் | - | 1,000,000 | - |
| மொத்தம் | 352,697 | - | 5,589,550 |

மொத்தப் பரிசுத் தொகை
ரூபா. 5,589,550/-

தொடர் இல. 4659523க்கு மேற்பட்ட நீல நிற டிக்கட்டுகள் 2002 டிசம்பர் 31ம் திகதி செவ்வாய்க்கிழமை செல்லுபடியாகும். வெற்றி பெறும் டிக்கட்டுகள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.

அபிவிருத்தி அதிர்ஷ்ட சீட்டிழுப்பில் பணப்பரிசு வெற்றி பெறாத டிக்கட்டுகளில் பஜாஜ் முச்சக்கர வண்டி வெற்றி பெறும் 5 டிக்கட்டுகளின் தொடர் இலக்கங்கள்

5643959-8-23
5645026-1-31
5641856-9-30
5650180-4-78
5641780-5-16

அபிவிருத்தி லொத்தர் சபை
இல. 33, சென்ற் மைக்கேல் வீதி, கொள்ளுப்பிட்டி, கொழும்பு 3.

# 31ஆம் நாள் நினைவஞ்சலி

பிறப்பு 11 - 03 - 1927



இறப்பு 30 - 11 - 2002

## திருமதி இராசம்மா இரத்தினசபாபதி

*(கனகரத்தினம்)*


தரணியில் எம்மைப் பண்புடன் வாழவைத்த அம்மாவே!
தனிமையில் எம்மை வாடவைத்துச் சென்றது விந்தையே!
பிரியமுள்ள எங்கள் அன்புப் பாட்டியே - உங்கள்
பிரிவால் நாம் தவிக்கின்றோம் நித்தமே.

*கலட்டி ஒழுங்கை,*
*கோண்டாவில் மேற்கு,*
*கோண்டாவில்.* (12398)

உங்கள் பிரிவால் துயருறும்:
**கணவர், பிள்ளைகள்,**
**மருமக்கள், பேரப்பிள்ளைகள்.**

# முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

தோற்றம் 15 - 07 - 1962



மறைவு 10 - 01 - 2002

## அமரர் சின்னராசா பாஸ்கரன்

**திதி: 30.12.2002 திங்கட்கிழமை**

*ஓராண்டு ஆயிற்றோ உம்மை நாம் பிரிந்து*
*தீராத கவலையினால் தினமும் அழுகின்றோம்*
*மாறாத அன்பு முகத்தை மனதிலே காண்கின்றோம்*
*வேராக நீர் இருந்தீர்! இன்று வேதனைதான் மீதமையா!*
ஓம் சாந்தி! ஓம் சாந்தி!! ஓம் சாந்தி!!!

*"லிங்கவாசா"*
*பள்ளியவத்தை,*
*வல்வெட்டி.* (12158)

பிரிவால் துயருறும்:
**அப்பா, அம்மா, சகோதரர்கள்,**
**சகோதரிகள், பெரியப்பா, சித்தப்பா,**
**மருமக்கள், அன்ரிமார், உற்றார், உறவினர்கள்.**

# மரண அறிவித்தல்

## சரவணமுத்து திருச்செல்வம்

புங்குடுதீவு, 3ஆம் வட்டாரத்தைச் சேர்ந்த சரவணமுத்து திருச்செல்வம் அவர்கள் நேற்றுமுன்தினம் (28.12.2002) சனிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற சரவணமுத்து - பேரின்பம் தம்பதியினரின் அன்பு மகனும் காலஞ்சென்ற முத்துக்குமாரு மற்றும் செல்லம்மா தம்பதியினரின் அன்பு மருமகனும் சசிதேவியின் அன்புக் கணவரும் விஜிதா (ஜேர்மனி), லகுதரன் (கனடா), சாந்தி (கனடா) ஆகியோரின் அன்புத் தந்தையும் ரூபகாந்தனின் (ஜேர்மனி) அன்பு மாமனாரும் காலஞ்சென்ற பாலசுப்பிரமணியம் மற்றும் நவராசா (கனடா), விக்கினேஸ்வரன் (கனடா), சறோஜினிதேவி, இராசேஸ்வரி, யோகேஸ்வரி (கனடா) ஆகியோரின் அன்புச் சகோதரரும் ஏரம்பமூர்த்தி, சச்சிதானந்தம், சிவதாசபிள்ளை, தங்கவேல், கோடிலிங்கம், சிவாஜி, காஞ்சனா ஆகியோரின் அன்பு மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (30.12.2002) திங்கட்கிழமை மாலை 5 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக முனையிற்புலம் மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*சங்கத்தார்கேணி,*
*புங்குடுதீவு - 3.* (12447)

தகவல்:
தி.சசிதேவி
(மனைவி)

# பாடசாலைகளை புனரமைக்க நிதி ஒதுக்கீடு

தென்மராட்சி,டிசெ.30

பளைக் கல்விக் கோட்டத்தைச் சேர்ந்த இரு பாடசாலைகளைப் புனரமைப்பதற்கு 2 லட்சம் ரூபா ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

சேரன்பற்று சீ.சீ.த.க. பாடசாலையில் தற்காலிக வகுப்பறை அமைக்க ஒரு லட்சத்து 40 ஆயிரம் ரூபாவும் -

சேரன்பற்று கணேசா வித்தியாலய வகுப்பறை திருத்த வேலைக்கு 40 ஆயிரம் ரூபாவும் -

ஒதுக்கீடு செய்யப்பட்டு வேலைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டது. (ஒ-117)

# நோயாளர் ஏமாற்றம்

இணுவில்,டிசெ.30

கோண்டாவில் அரசினர் வைத்தியசாலைக்கு சிகிச்சை பெறச்சென்ற நோயாளிகள் சிகிச்சை பெறாமல் ஏமாற்றத்துடன் வீடு திரும்ப நேரிட்ட சம்பவம் கடந்த வியாழக்கிழமை இடம்பெற்றுள்ளது.

மேற்படி வைத்தியசாலையில் சேவையிலுள்ள வைத்திய அதிகாரி விடுமுறையில் சென்றிருந்த வேளையில் பதில் கடமைக்கு வேறு மருத்துவர்கள் இல்லாத காரணத்தினால் நோயாளிகளுக்கு இந்த நிலை ஏற்பட்டது.

பருவ மழையை அடுத்து கோண்டாவிலையும் அதனை அண்டிய ஏனைய பகுதிகளிலும் வைரஸ் காய்ச்சல் பரவுவதால் அநேகமான நோயாளிகள் மேற்படி நோயினால் பீடிக்கப்பட்டு கோண்டாவில் வைத்தியசாலையில் சிகிச்சை பெறுவது குறிப்பிடத்தக்கது. (ஒ-ரி)

# தென்மராட்சியில் பன்றித் தொல்லை

சுன்னாகம்,டிசெ.30

தென்மராட்சி வயல் பிரதேசத்தில் பன்றிகளின் தொல்லை அதிகரித்திருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது. இரவு வேளையில் கூட்டமாக வரும் பன்றிகள் வயல் வரம்புகளைச் சிதைத்தும் நெற்பயிர்களை மிதித்தும் சேதமாக்குவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

நெற்கதிர்கள் அரும்பும் இவ்வேளையில் பன்றிகளின் தொல்லை அதிகரித்திருப்பதால் விவசாயிகள் கவலையடைந்துள்ளனர்.

இதேவேளை -

பன்றிகளிடமிருந்து பயிர்களைப் பாதுகாப்பதற்காக சில பிரதேசங்களில் விவசாயிகள் ஒன்று சேர்ந்து காவற்குடில்களை அமைத்து வருகின்றனர். (ஒ-27)

# பணிப்பயிற்சிகளுக்கு விண்ணப்பிக்கலாம்

நவாலி,டிசெ.30

இலங்கை தொழிற்பயிற்சி அதிகார சபை, சண்டிலிப்பாய் பிரதேச செயலரூடாக நடத்தப்படவிருக்கும் மின் இணைப்பு, தச்சு வேலை, மேசன் வேலை ஆகிய பணிப்பயிற்சி நெறிகளுக்கு தகுதியானவர்களிடமிருந்து விண்ணப்பங்களைக் கோரியுள்ளது.

விண்ணப்பதாரர் 8ஆம் வகுப்பில் சித்தியடைந்திருப்பதுடன் 18 வயதிற்கும் 35வயதிற்கும் இடைப்பட்டவராகவும் இருத்தல்வேண்டும். பயிற்சி வகுப்புகள் 6மாத காலம் நடத்தப்படும். பயிற்சிக் காலத்தின்போது ஊக்குவிப்புப் பணமாக மாதம் 450 ரூபா வழங்கப்படும்.

இதற்கான விண்ணப்பங்களை எதிர்வரும் ஜனவரி மாதம் 10ஆம் திகதிக்கு முன்பாக 'இலங்கை தொழிற்பயிற்சி அதிகார சபை, தொழிற் பயிற்சி நிலையம், சண்டிலிப்பாய்' என்னும் முகவரிக்கு அனுப்பிவைக்குமாறு பயிற்சிப் போதனாசிரியர் வே.ஸ்ரீகுகன் கேட்டுள்ளார். (ஒ-100)

# பதவி வெற்றிடம்

**பச்சிலைப்பள்ளி பல நோக்குக் கூட்டுறவுச் சங்கம் (வ-து)**

**பளை.**

**பொது முகாமையாளர் பதவி 101/6**

**மேற்குறிப்பிட்ட பதவிக்கு தகைமையுள்ளவர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. விண்ணப்பப்படிவத்தையும், மேலதிக விவரங்களையும் ரூபா 10/- செலுத்தி சங்க அலுவலக கடமை நேரத்தில் பெற்றுக்கொள்ளலாம்.**

**1) தகைமைகள:**

(அ) கூட்டுறவுப் பணியாளரின் 9ஆவது சம்பளத்திட்டத்தில் முகாமைத்துவ/மேற்பார்வை மட்டத்திலான பதவியில் 3 வருடத்துக்கு குறையாத அனுபவம் அல்லது கூட்டுறவுப் பணியாளரின் 10ஆவது சம்பளத்திட்டத்தில் முகாமை/மேற்பார்வை மட்டத்திலான பதவியில் 6 வருடத்திற்கு குறையாத அனுபவம்.

அல்லது

(ஆ) அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகமொன்றின் பட்டத்துடன் அல்லது அதற்கிணையான பட்டத்துடன் அங்கீகரிக்கப்பட்ட வர்த்தக/தொழில்நுட்ப நிறுவனம் ஒன்றில் முகாமை மட்டத்திலான பதவியில் 4 வருடத்திற்கு குறையாத அனுபவம்.

அல்லது

(இ) கூட்டுறவுப் பணியாளர் தராதரப்பத்திரம் (உயர்தரம்)/ க.பொ.த. (உயர்தரம்) பரீட்சையில் 3 பாடங்களிலான சித்தியுடன் அங்கீகரிக்கப்பட்ட வர்த்தக/தொழில்நுட்ப நிறுவனமொன்றில் முகாமை மட்டத்திலான பதவியில் 6 வருடத்திற்குக் குறையாத அனுபவம்.

**2) வயதெல்லை:**

18—45வரை (கூட்டுறவுச் சங்கத்தில் பணிபுரிபவர்களுக்கு வயதெல்லை கணிக்கப்படமாட்டாது.

**3) சம்பள அளவுத் திட்டம்:** *(31/99இல. சுற்றறிக்கைக்கு அமைவாக)*

5250 - 7750
120X10 - 130X10

**4) பிணை:**

கூட்டுறவு வேலையாளர் ஆணைக்குழுப் பிரமாணத்திற்கமைவாகவும், நெறியாளர் குழுவின் தீர்மானத்திற்கமையவும் கோரப்படும் பிணை செலுத்தப்படவேண்டும்.

*குறிப்பு:-*

*பூர்த்திசெய்யப்பட்ட விண்ணப்பப் படிவங்கள் 18.01.2003ஆம் திகதியன்று அல்லது அதற்கு முன்பதாக கிடைக்கக்கூடியதாக பின்வரும் முகவரிக்கு பதிவுத்தபால்மூலமோ, நேரடியாகவோ அனுப்பிவைத்தல் வேண்டும். கடித உறையில் இடதுபுற மேல்மூலையில் "**பொது முகாமையாளர் பதவி விண்ணப்பம்**" எனக் குறிப்பிடவும். தற்போது கூட்டுறவுச் சேவையிலுள்ளோர் தமது விண்ணப்பங்களை சம்பந்தப்பட்ட சங்கத்தினூடாக அனுப்பிவைத்தல்வேண்டும்.*

தலைவர்
*பச்சிலைப்பள்ளி ப.நோ.கூ.சங்கம்.*
*பளை.*

**28.12.2002** (C/25748)

# ஓராண்டு நினைவஞ்சலி

தோற்றம் 11 - 04 - 1937



மறைவு 10 - 01 - 2002

## திருமதி செல்வராசா அன்னம்மா


(அன்னப்பிள்ளை)

திதி: 30.12.2002

*நீங்கள் மறைந்து ஓராண்டாகிவிட்டது*
*உங்கள் அன்பு முகத்தை இனி எப்போது காண்போமோ?*
*ஓராண்டென்ன எத்தனை ஆண்டுகள் கழிந்தாலும்*
*உங்கள் பாச நினைவுகள் எம்மை விட்டு நீங்காது!*
உங்கள் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.

*சந்நிதி றோட்,*
*உடுப்பிட்டி.* (12416)

கணவர், மக்கள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்.



# கருணை இல்லம்

## உரும்பிராய்

உரும்பிராயில் அமைந்துள்ள கருணை இல்லம் 09.12.2002 இல் இருந்து இயங்குகிறது.

பெற்றோரை இழந்த - பராமரிப்பற்ற பெண்பிள்ளைகள் (6 வயதுக்கும் 12 வயதுக்கும் இடைப்பட்டவர்கள்) குறித்த இல்லத்தில் சேரக்கூடிய வாய்ப்பு உண்டு. உணவு, உடை, இருப்பிடம், கல்வி முதலான வசதிகள் இலவசமாகச் செய்து கொடுக்கப்படும்.

சேர விரும்புவோர் கருணை இல்லத்தில் விண்ணப்பப் படிவங்களைப் பெற்றுக்கொள்ளலாம்.

பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பங்கள் 10.01.2003 வெள்ளி வரை குறித்த இல்லத்தில் ஏற்றுக்கொள்ளப்படும்.

*உரும்பிராய்.*
*30.12.2002.* (C/25752)

நிர்வாகிகள்,
கருணை இல்லம்.

# மரண அறிவித்தல்கள்

## திருமதி பராசக்தி சுப்பிரமணியம்

கல்வயல், சாவகச்சேரியைப் பிறப்பிடமாகவும், அரசடி வீதி, யாழ்ப்பாணத்தை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி பராசக்தி சுப்பிரமணியம் நேற்று (29.12.2002) ஞாயிற்றுக்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் மட்டுவில் சபாபதி சுப்பிரமணியத்தின் அன்பு மனைவியும், பரமேஸ்வரன் (ஆசிரியர், மட்டுவில் மகாவித்தியாலயம்), வசந்தன் (சுவிஸ்), திருமாலினி (கனடா), கமலநாதன் (லண்டன்) ஆகியோரின் அன்புத் தாயாரும் சறோஜாராணி (சாவகச்சேரி இந்து மகளிர்கல்லூரி ஆசிரியர்), ரூபமதி (சுவிஸ்), உதயகுமார் (பொறியியலாளர் - கனடா), மேனகா (லண்டன்) ஆகியோரின் மாமியாரும் ஆவார்.

அன்னாரது இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*126, அரசடி வீதி*
*(இந்து மகளிர் கல்லூரி முன்பாக),*
*யாழ்ப்பாணம்.*
***T.P - 021-222 5530*** (12490)

தகவல்:
சு.பரமேஸ்வரன்
*(ஆசிரியர் - மகன்)*

## திருமதி மேரி யோசேப்பின் நீக்கலஸ்

நாரந்தனை மத்தியைப் பிறப்பிடமாகவும் இல.51, கோவில் வீதி, யாழ்ப்பாணத்தை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி மேரி யோசேப்பின் நீக்கலஸ் 25.12.2002 புதன்கிழமை காலமானார்.

இவர் சவரிமுத்து நீக்கலஸின் (முன்னாள் நிர்வாக சபை உறுப்பினர் புனித பேதுரு - பாவிலு ஆலயம், நாரந்தனை) பாசமிகு மனைவியும் ஜோதிராஜன் (லண்டன்), புவிராஜன் (ஈரான்), துரைராஜன் (ஆஸ்திரேலியா), ராஜினி (லண்டன்), யோகினி (பிரான்ஸ்), பிரேமினி (லண்டன்) ஆகியோரின் அன்புத் தாயாரும் காலஞ்சென்ற நவரட்ணம் (இளைப்பாறிய நில அளவை அதிகாரி) மற்றும் பீற்றப்போல் (இளைப்பாறிய விமானப்படை உத்தியோகத்தர் - கனடா), ராணி, விஜயரட்ணம் (இளைப்பாறிய பாடசாலை அதிபர் - பிரான்ஸ்) ஆகியோரின் அன்புச் சகோதரியும் மேரி மொன்றீசா (தேவி - இளைப்பாறிய ஆசிரியை - லண்டன்), ரனுஷ் (ஈரான்), ரதி (இளைப்பாறிய ஆசிரியை - ஆஸ்திரேலியா), கிறேசியன் (லண்டன்), சார்ள்ஸ் (பிரான்ஸ்), சுரேன் (லண்டன்) ஆகியோரின் அன்பு மாமியும் றொஜர், சிந்துஜா, ஷைகான், ரெனி, லூட்ஸ், ஆன், ஸ்ரபனி, சந்திரின், பியர், ஏஞ்சலின், மகலி ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் மரணச்சடங்கு நாளை (31.12.2002) செவ்வாய் காலை 10.00 மணிக்கு யாழ்.புனிதயுவானியார் ஆலயத்தில் திருப்பலிப்பூசை ஒப்புக்கொடுக்கப்பட்ட பின் பூதவுடல் நாரந்தனை சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றர், உறவினர், நண்பர்கள் ஏற்றுக் கொள்ளவும்.

*இல.51 கோவில் வீதி,*
*யாழ்ப்பாணம்.* (12485)

தகவல்:
S.A.நீக்கலஸ்
*(கணவர்)*


### விற்பனைக்கு

SHARP இன புறஜெக்ரர் (XV-325P. 1-5X) விற்பனைக்கு உண்டு.
*தொடர்பு :*
சுதர்சன் வீடியோ,
ஸ்ரேசன் வீதி,
கோண்டாவில். (12487)

### அறிவொளி

நல்லூர்
இணைந்த கணிதம்
திரு. ந.ரவீந்திரன் B.Sc.
A/L 2005
Tue., Thu. 3.00 p.m.
(12480)

### இந்து நாகரிகம்

A/L 2003 தென்மராட்சியின் முன்னணி ஆசிரியர்
ஐ.கமலநாதன்
வினா - விடை வகுப்பு
ஆரம்பம்:- 03.01.2003
வெள்ளி 3p.m.
A/L 2005
ஆரம்பம்:- 06.01.2003
அனுமதிகளை பதிவுசெய்யவும்
தரம் 6 முதல் A/L வரை வகுப்புகள் நடைபெறுகின்றன.
மதுபாரத்
இந்துமகளிர் ஒழுங்கை,
கந்தர்மடம்.
(12456)

### BITSMANS

கல்விநிறுவனம், மானிப்பாய்.
A/L 2005 கலை, வர்த்தகம்
எமது SUPER GRADE ஆசிரிய குழு

| | |
|---|---|
| தமிழ்:- | N.பாலா |
| அளவையியல்:- | R.P.சர்மா |
| புவியியல்:- | ஜெகன் |
| இந்துநாகரிகம்:- | N.பாலா |
| கிறிஸ்தவம்:- | வசந்தன் |
| நாட.அரங்கியலும்:- | ரமேஷ் |
| பொருளியல்:- | சண் |
| கணக்கீடு:- | கவா, ரயுஜன் |
| வணிகக் கல்வி:- | முரளி |

ஆரம்பம்
1.1.2003 புதன் காலை 9.00மணி
(12464)

### ராஜா யாழ்ப்பாணம்.

எம்.ஜி.ஆர்., ராதாசலூஜா நடித்த
இதயக்கனி
10.30, 2.30 மட்டும்
30 தொடக்கம் 31வரை
AIR FORCE - 1
இரவு 7 மணிக்கு மட்டும்
1.1.2003 முதல்
சுந்தரா ரவல்ஸ் (C-25437)

### நாகம்ஸ் சுன்னாகம்

அர்ஜுன், சிம்ரன், மும்தாஜ், ஆனந்தராஜ் நடித்த
ஏழுமலை
காட்சிகள்: 11.00, 3.00 (ரீலீஸ்)
விசேட காட்சிகள்:
*வெள்ளி, சனி, ஞாயிறு: 11.00, 3.00, 6.30 (பி.நே.)*
(12426)

### நிரஞ்சனாஸ் சங்கானை

சரத்குமார், நெப்போலியன், தேவயானி நடித்த
தென்காசிப்பட்டணம்
காட்சி நேரம்:11.00, 2.45, 6.00 (பி.நே.)
27-12-2002 முதல் வெள்ளி, சனி, ஞாயிறு
JACKION நடித்த SHAFT
இரவு 8.45 (புதிய நேரம்) மட்டும்.


# மரண அறிவித்தல்கள்

## வேலுப்பிள்ளை வல்லிபுரம்

*(ஓய்வுபெற்ற ஆசிரியர், மயிலிட்டி தெற்கு, தெல்லிப்பழை)*

மயிலிட்டி தெற்கைப் பிறப்பிடமாகவும், ஊரெழு மேற்கை தற்காலிக வசிப்பிடமாகவும் கொண்ட வேலுப்பிள்ளை வல்லிபுரம் நேற்று (29.12.2002) ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான வேலுப்பிள்ளை - சின்னாச்சிப்பிள்ளை தம்பதிகளின் புத்திரனும், பொன்னம்மாவின் அன்புக் கணவரும், வரதராஜா (ஓய்வுபெற்ற விரிவுரையாளர், தொழில்நுட்பக் கல்லூரி), காலஞ்சென்ற சிவபாலன் (ஆசிரியர்) மற்றும் இந்துமதி (கனடா), நிர்மலாதேவி (கனடா), ஈஸ்வரன் (சிவில் எஞ்சினியர், கனடா) ஆகியோரின் அன்புத் தந்தையும், பத்மாசனி (விரிவுரையாளர், விவசாயக் கல்லூரி, குண்டசாலை), நவரஞ்சிதமலர் (கனடா), சண்முகலிங்கம் (ஓய்வுபெற்ற நிர்வாக உத்தியோகத்தர் - கல்வித் திணைக்களம், வவுனியா - தற்போது கனடா), அரியகுணராசா (ஓய்வுபெற்ற தொழில்நுட்ப உத்தியோகத்தர், நீர்ப்பாசனத் திணைக்களம், வவுனிக்குளம் - தற்போது கனடா), பாக்கியலட்சுமி (கணனிப் பொறியியலாளர் - கனடா) ஆகியோரின் மாமனாருமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் ஊரெழு மேற்கு "மகரஜோதி" இல்லத்தில் இன்று (30.12.2002) திங்கட்கிழமை பி.ப. 1.30 மணிக்கு நடைபெற்று, பூதவுடல் பொக்கணை மயானத்தில் தகனஞ்செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

(12488)

தகவல்
வ.வரதராஜா (மகன்)

## வேலுப்பிள்ளை கந்தையா

*(ஓய்வுபெற்ற தபால் ஊழியர் M.S.O)*

37B, கோயில் வீதி, யாழ்ப்பாணத்தை வசிப்பிடமாகக் கொண்ட வேலுப்பிள்ளை கந்தையா 28.12.2002 சனிக்கிழமை காலமானார்.

அன்னார் கந்தையா இராசாத்தியின் அன்புக் கணவரும் உதயகுமாரி சிவகுமார் (RADIO TECHNICION), விஜயகுமாரி, சுகிர்தகுமாரி (முன்னாள் ஆசிரியை, யாழ்.புனித ஜோன் பொஸ்கோ வித்தியாலயம்), கிருஷ்ணகுமார் (யாழ் ICRC) ஆகியோரின் அன்புத் தகப்பனாரும் பேபிஸ் கனகம்மா, பார்வதி, சின்னத்தங்கச்சி, பாக்கியம் ஆகியோரின் சகோதரனும், ஞானேஸ்வரி (ஆசிரியை யாழ். சென்றோக் RC வித்தியாலயம்), கிறேசியன், சிவாகரன் (ரவி-லண்டன்) ஆகியோரின் அன்பு மாமனாரும் மோனேச், ரஞ்சித், ரஞ்சனா ஆகியோரின் அன்பு பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (30.12.2002) திங்கள் பி.ப. 2.30 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக கோம்பையன் மணல் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*(புதிய இலக்கம் 67/3)*
*37B, கோயில் வீதி,*
*யாழ்ப்பாணம்.* (12484)

தகவல்:
மனைவி,பிள்ளைகள்.

## கந்தையா பொன்னுத்துரை

*(பிரபல வர்த்தகர், சிட்டுக்குருவி லேகியம், யாழ்நகர்)*

யாழ்ப்பாணம், அன்னசத்திர ஒழுங்கையைப் பிறப்பிடமாகவும் 18, இராஜசிங்க வீதி, வெள்ளவத்தையை வசிப்பிடமாகவும் கொண்ட கந்தையா பொன்னுத்துரை (சிட்டுக்குருவி லேகியம்) அவர்கள் 28.12.2002 சனிக்கிழமை கொழும்பில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற கந்தையா (நாடடை) - பாக்கியம் தம்பதிகளின் சிரேஷ்ட புதல்வரும் காலஞ்சென்ற வேலுப்பிள்ளை - பொன்னம்மா தம்பதிகளின் மருமகனும் மங்கையர்க்கரசியின் அன்புக் கணவரும் மயில்வாகனத்தின் (London) அன்புச் சகோதரரும் பாலசுப்பிரமணியம் (Canada), தனபாலசந்திரன் (சோதி), காலஞ்சென்ற கனகசபாபதி மற்றும் பாலசரஸ்வதி, பாக்கியராசா, கமலாவதி (Canada), விமலாவதி, புஸ்பவதி (London), பத்மாவதி (London) ஆகியோரின் பாசமிகு தந்தையும் கணேஸ்வரி (Canada), பவளராணி, சரோஜா, துரைராஜா (ஓய்வுபெற்ற பிரதம பொறியியலாளர், R.D.D.), மஞ்சுளாதேவி, காலஞ்சென்றவர்களான செல்வராசா, விஜியரட்ணம் மற்றும் சிவநாதன் (London), கிருபானந்தா (London) ஆகியோரின் அன்பு மாமனாரும் கலாநிதி மங்களகுமாரி, ஜெயநாதன், ராஜ்குமார், பாலகுமாரி, செல்வநாதன், நகுலேஸ்வரன், தனேஸ்வரன், பாலகணேஷ், கோமதி சுரேஸ்குமார், சர்வேந்திரா, கேதீஸ்வரன், யசோதா, தர்சன், கலையரசி, சதீஸ், தட்சாயினி, விஜயமாலா, ஸ்ரீதரன், பிரதீபா, செல்வேந்திரா, நளாயினி, சுரேஸ்குமார், சுஜாந்தினி, சுகுமார், தர்மேந்திரா, நந்தகுமார், நந்தினி, ஜெகிலா, ஜெனேஸ் ஆகியோரின் அருமைப் பேரனும் வித்தியா, சிவரம்மியா, வைஷ்ணவி, ஐஸ்வரியா, ருக்ஷியா, விருக்ஷன்ஹரி, அஜலா ஆகியோரின ஆசைப் பூட்டனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (31.12.2002) செவ்வாய்க் கிழமை மாலை 2 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக கனத்தை மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*18, இராஜசிங்க வீதி,*
*கொழும்பு - 06*
*தொலைபேசி: 01 552924* (12483)

தகவல்:
கி.துரைராஜா
(மருமகன்)

## பொன்னையா நாகராசா (பத்தர்)

மட்டக்களப்பு, ஆரயம்பதியைப் பிறப்பிடமாகவும் யாழ். நாச்சிமார் கோவிலடியை வசிப்பிடமாகவும் கொண்ட பொன்னையா நாகராசா பத்தர் நேற்று (29.12.2002) ஞாயிற்றுக்கிழமை காலமானார்.


அன்னார் காலஞ்சென்றவர்களான பொன்னையா - சந்தானம் தம்பதிகளின் அன்பு மகனும் மகாலட்சுமியின் அன்புக் கணவரும் மோகனதாஸ் (ஜேர்மனி), பிரேமதாஸ் (ஜேர்மனி), சாந்தினி (கொழும்பு), ரஜனி, சந்திரகுமார், சுபாஜினி, யாமினி (ஜேர்மனி), தர்மேந்திரதாஸ் (மருந்து), சர்மிளா, கோகிலா ஆகியோரின் அன்புத் தந்தையும் யோகராணி, ஜசிந்தா, மோகனதன் (கொழும்பு புனித அந்தோனியார் மகாவித்தியாலய ஆசிரியர்), ராஜபாலன், சிவயோகராஜன் (யாழ்) ஆகியோரின் மாமனாரும் லீலாவதி, இராஜகோபால், இராசேந்திரம், காலஞ்சென்றவர்களான சபாரட்ணம், சற்குணானந்தன் ஆகியோரின் சகோதரரும் சகீஸ், பிரதீஸ், ஜஸ்மினா, இந்துஜா, அனோஜா, கஜானுஜா, கிஷோவர்மன், கபிலஷா, ரோஷினி, சிவானுஜன், மதுஷன் ஆகியோரின் பேரனும் பாலசுப்பிரமணியம், இராசானந்தம், கமலேஸ்வரி, காலஞ்சென்ற சிவயோகம் ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (30.12.2002) திங்கட்கிழமை பிற்பகல் 4 மணிக்கு அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக கோம்பையன்மணல் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*258/6, கே.கே.எஸ். வீதி,*
*நாச்சிமார் கோவிலடி,*
*யாழ்ப்பாணம்* (12479)

தகவல்:
மனைவி, மக்கள்,
மருமக்கள்.



# ஜனாதிபதி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஜனாதிபதி சந்திரிகா, நேற்றுமுன் தினம் இரவு இராணுவத் தளபதி லெப டினன்ட் ஜெனரல் லயனல் பலகல்ல, யாழ்.கட்டளைத் தளபதி மேஜர் ஜென ரல் சரத் பொன்சேகா ஆகிய இருவரை யும் அழைத்து உயர்பாதுகாப்பு வல யங்கள் தொடர்பான நிலைமையைக் கேட்டறிந்திருக்கிறார்.

உயர் பாதுகாப்பு வலயங்கள் தொடர்பாக மேஜர் ஜெனரல் சரத் பொன்சேகாவின் நிலைப்பாட்டை ஜனாதிபதி ஆதரித்திருக்கிறார் என அறியப்படுகிறது.

முன்னாள் வெளிவிவகார அமைச் சர் லக்ஷ்மன் கதிர்காமரும் ஜனாதி பதியை கடந்த வெள்ளியன்று சந் தித்து ஆலோசனை நடத்தியிருக்கி றார்.

இதற்கிடையே, சிங்கப்பூர் விஜ யத்தை மேற்கொண்டிருக்கும் பிரத மர் ரணில் விக்கிரமசிங்க, தனது அமைச்சர்களுடனும் பாதுகாப்பு அதி காரிகளுடனும் அவசர ஆலோசனை கள் நடத்தியிருக்கிறார்.

பாதுகாப்பு அமைச்சர் திலக் மாரப்பனவும் சிரேஷ்ட இராணுவ அதி காரிகளுடன் இது குறித்த கூட்டம் ஒன்றை நடத்தியிருக்கிறார்.

சிங்கப்பூரில் பிரதமர் ரணிலுடன் ஆலோசனை கலந்த அமைச்சர் மிலிந்த மொறகொட, நேற்றுமுன் தினம் நாடு திரும்பியதும் முன்னாள் அமைச்சர் கதிர்காமரைச் சந்தித்து நிலைமையை எடுத்து கூறியிருக்கி றார்.

(ஐ-9)

## மேலதிக...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கொழும்பு சட்ட வைத்திய அதிகா ரிக்கு அனுப்பப்பட்டன என்று தெரிய வந்தது.

அந்தப்பரிசோதனையின் முடிவு கள் வெளியாகிய பின்னரே சிறுமி யின் மரணம் தொடர்பான பூரண முடிவு களை வெளியிட முடியும் என்று ஆஸ் பத்திரி வட்டாரங்கள் தெரிவித்தன. எனினும், பிரஸ்தாப சிறுமி பாலியல் வல்லுறவு மற்றும் பாலியல் துன்புறுத் தல்களுக்கு உட்படுத்தப்பட்டதற்கான அடையாளங்கள் எவையும் சிறுமியின் சடலத்தில் காணப்படவில்லை என் றும் தெரிவிக்கப்பட்டது.

பூர்வாங்க பரிசோதனைகள் முடி வடைந்ததும் நேற்றுப் பிற்பகல் ஒரு மணியளவில் சிறுமியின் சடலம் உறவி னர்களிடம் கையளிக்கப்பட்டது.

பிரேதபரிசோதனை அறிக்கை கோப்பாய் பொலீஸாரிடமும் யாழ். மாவட்ட நீதிமன்ற நீதிவான் ஆர்.ரி. விக்னராஜாவிடமும் சட்ட வைத்திய அதிகாரி இன்று சமர்ப்பிப்பார் என்று தெரியவருகின்றது.

இதேவேளை -

இந்தச்சிறுமியின் மர்ம மரணம் தொடர்பாக சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்டுள்ள உரும்பிராய் சந்திரோதய வித்தியாலயத்தின் காவ லாளியான தில்லையம்பலம் ரமணன் என்ற இளைஞனை மருத்துவ சோத னைக்கு உட்படுத்தி அறிக்கை சமர்ப் பிக்கும்படி நீதிவான் விக்னராஜா நேற்று யாழ்போதனா வைத்தியசாலை சட்ட வைத்திய அதிகாரிக்கு உத்தர விட்டார். (ஐ-4)

## பாலா...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

புக்குழுத் தலைவருடன் லண்டனில் இருந்து தொலைபேசியில் பேசினார் என்றும் - உயர்பாதுகாப்புவலயம் மற்றும் புலிகளின் ஆயுதங்களை களைவது தொடர்பாக கருத்து வேறு பாடுகள் நிலவினாலும் சமாதான பேச்சு களுக்கு அது ஆபத்தை விளை விக் காது என்று உறுதி அளித்தார் என்றும் அப்பத்திரிகை செய்தி வெளியிட்டிருந் தது. அதையே அன்ரன் பாலசிங்கம் முற்றாக மறுத்திருந்தார். (ஐ)

## அட்டாளைச்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

சேனை, அக்கரைப்பற்று பகுதிகளில் அமைச்சர் ஹக்கீமின் வருகையை எதிர்த்து வீதிகளில் ரயர்கள் எரிக் கப்பட்டன வாகனங்கள் செல்லாதவாறு வீதிகளில் தடைகளும் ஏற்படுத்தப் பட்டிருந்தன.

இவற்றுக்கிடையே அமைச்சர் ஹக்கீமின் வருகையையொட்டி அட் டாளைச்சேனையில் இரு கோஷ்டியின ருக்கிடையே பெரும் மோதல் ஏற் பட்டது. மோதலில் மூவர் காயமடைந் தனர்; வேறுசிலர் தடிகளாலும் கற்களா லும் தாக்கப்பட்டனர். காயமடைந்த மூவரும் பாலமுனை மாவட்ட வைத் தியசாலையில் சேர்க்கப்பட்டு சிகிச்சை பெற்று வருகின்றனர்.

மோதலின்போது ஏ.எம்.எம். ஜமால் தீனின், காரின் முன்கண்ணாடி நொறுக் கப்பட்டது. அக்கரைப்பற்று பிரதேச செயலகத்தின் முன்னால் பொதுமக்கள் ரயர்களை எரித்ததுடன் பாரிய தடை களையும் ஏற்படுத்தினர்.

அவ்விடத்துக்கு விரைந்த பொலீ ஸார், ஆகாயத்தை நோக்கி துப்பாக்கி எச்சரிக்கை வேட்டுக்களைத் தீர்த்து கூட்டத்தினரைக் கலைத்தனர். ஆயி னும், மக்கள் நகராதிருந்து கோஷ மிட்டனர்.

நிலைமையை கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவருவதற்காக அம்பாறை, கல் முனை பொலீஸ் நிலையங்களின் பொலீஸார் அக்கரைப்பற்று - கல்முனை பிரதான வீதிகளில் குவிக்கப்பட்ட னர்.

அமைச்சர் ஹக்கீமின் கூட்டம் நடைபெறும் இடத்திலும் பொலீஸார் குவிக்கப்பட்டனர். (ஐ-9)

## ஒளிவிழா

யாழ்ப்பாணம்,டிசெ.30

இருபாலை கானான் தேவாலயத் தின் ஒளிவிழா நிகழ்வுகள் இன்று நிறைவடைகின்றன.

இன்றைய நிகழ்ச்சிகள் சபை போதகர் அல்பேட் ஜெபநாயகம் தலைமையில் பிற்பகல் 3.00 மணி முதல் நடைபெறும். (ஐ)

## மீள்குடியமர்வு ...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வாழ்வியல் கஷ்ரங்களை நீக்கிவிட் டுத்தான் மற்ற விடயங்களுக்கு செல்ல முடியும் - என்று பாலசிங்கம் உறுதி படக் கூறியிருக்கிறார்.

லண்டனிலிருந்து 'தமிழ்நெற்' இணையத் தளத்திற்கு வழங்கிய செவ் வியில் அன்ரன் பாலசிங்கம் மேலும் தெரிவித்திருப்பதாவது:-

மக்களின் ஆயிரக் கணக்கான வீடுகளை இராணுவம் ஆக்கிரமித்து வைத்திருக்கிறது. அவற்றை விட்டு விலக மறுக்கிறது. இது புரிந்துணர்வு உடன்படிக்கைக்கு முரணானது. அரசு முன்னர் அளித்த கடப்பாடுகள் உறுதி மொழிகளுக்கு மாறானது. இவை மட்டுமன்றி இராணுவம் விலக மறுப் பதானது பாதுகாப்பு வலயக் கெடுபிடி களை நீக்குதல், இயல்பு நிலையை ஏற்படுத்துதல் என்பன தொடர்பான உப குழுவையும் செயலிழக்கச் செய்கிறது.

'சிறான்' என்கின்ற அவசர மனிதா பிமானப் பணிகள் மற்றும் புனர்வாழ்வு நடவடிக்கைகளுக்குப் பொறுப்பான உபகுழுவின் செயற்பாட்டுக்கும் இராணுவத்தின் இந்த நிலைப்பாடு தடைக்கல்லாக அமைந்திருக்கிறது. ஆகவே, இடம்பெயர்ந்த மக்களின் மீள்குடியமர்வு, உயர் பாதுகாப்பு வல யக் கெடுபிடிகளை நீக்குதல், இயல்பு நிலையை ஏற்படுத்துதல் தொடர்பான விடயங்கள் தாய்லாந்தில் இடம்பெற வுள்ள பேச்சுக்களில் முக்கியமாக விவாதிக்கப்படும்.

மக்களின் இந்த வாழ்வியற் பிரச் சினை எப்பொழுதோ தீர்க்கப்பட்டிருக்க வேண்டும். ஆனால், இன்னும் தீர்க்கப் படாமல் இருக்கிறது. இனியும் தொடர்ந்து அப்படி இருக்கவிட முடி யாது.

சமாதான முயற்சிகள் சுமுகமாக நடந்து முன்னேற்றம் கண்டுள்ளன. அவசர மனிதாபிமான விடயங்களில் இரண்டு தரப்புகளும் இணக்கம் கண்ட விடயங்கள் இன்னும் நடை முறைப்படுத்தப்படாமல் இருக்கின் றன. ஆயிரக்கணக்கான தமிழ் மக்கள் தங்கள் சொந்த இடங்களில் போய்க் குடியமர முடியாமல் இருந்து கஷ்ரப் படும்போது அடிப்படை அரசியல் விட யங்கள் பற்றி பேசிக்கொண்டு இருக்க முடியாது. மக்களின் மீள்குடியமர்வும் புனர்வாழ்வும்தான் இன்றைய மிக முக் கியமான - சாத்திரமான - பிரச்சினை.

மக்கள் எதிர்நோக்கும் துன்பங் களை துடைக்கும் விடயத்தில் இராணு வம் கடும்போக்கைக் கடைப்பிடிக்கி றது. அதை யுத்தநிறுத்த கண் காணிப் புக் குழு ஆதரிக்கிறது. அது கவலைக் குரியதும் ஏற்றுக்கொள்ள முடியாத தும் ஆகும் - என்றும் தெரிவித்திருக் கிறார் பாலசிங்கம். (ஐ)

## உரும்பிராய்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கூடிய அப்பிரதேச மக்கள் மற்றும் மாணவர்கள் அங்கு மாலைவரை மறிய லில் ஈடுபட்டனர். இதனால் நேற்றுப் பகல் முழுவதும் உரும்பிராய் - மரு தனார்மடம் வீதியூடான போக்கு வரத்துகள் தடைப்பட்டிருந்தன. பொலீ ஸார் மற்றும் இராணுவத்தினரின் வாகனங்களும் குறிப்பிட்ட இடத்துக்கு வந்து திரும்பிச் சென்றதைக் காண முடிந்தது.

பாடசாலை வாயிலில் கறுப்புக் கொடிகளும் தோரணங்களும் கட்டப் பட்டிருந்தன. சோக கீதம் இசைக்க விடப்பட்டிருந்தது.

மறியற் போரில் ஈடுபட்டிருந்தோரில் முதியவர்கள் சிலர் ஒப்பாரி வைத்து அழுததையும் காணமுடிந்தது.

பாடசாலைக்கு உடனடியாக சுற்று மதில் அமைத்து நிரந்தர காவலா ளியை நியமித்து சிறுவர்களின் பாது காப்பை உறுதிப்படுத்தவேண்டும் என்று மறியற்போரில் ஈடுபட்டோர் வலியுறுத் தினர்.

அங்கு வருகைதந்த இந்து கலா சார அமைச்சர் மகேஸ்வரனிடமும் சிறு வர்களின் பாதுகாப்புக் குறித்து வலியு றுத்தப்பட்டது.

மறியலில் ஈடுபட்ட மாணவர்கள் வைத்திருந்த சுலோகங்களில் காணப் பட்ட வாசகங்களிற்சில:-

☆மாணவி துவாரகாவின் கொலை யின் இரகசியம் என்ன?

☆அன்பானவர்களே! எங்களைக் காப்பாற்றுங்கள்!

☆சக மாணவி துவாரகா இறப்பின் முடிவு என்ன?

☆சிறுவர்கள் என்றால் சிற்றெறும்பு களா?

☆நாட்டின் முதுகெலும்பை முறிப் பதா?

நேற்று மாலை 5.15மணியள வில் பிரஸ்தாப சிறுமியின் உடல் மயானத்துக்கு எடுத்துச்செல்லப்பட்ட பின்னர் மறியற்போராட்டம் கைவிடப் பட்டது. (ஐ-4)

## ஆலயங்களில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஆலயங்களில் தமிழ் மொழி மூலம் ஆசீர்வாதம் வழங்கும் முறையை அமுல்படுத்துவது பற்றி கலந்துரை யாடலில் வலியுறுத்தப்பட்டது. இதனை சிவாச்சாரியார்கள் ஏற்றுக்கொண்டனர். முக்கிய ஆலயங்களில் இந்த நடை முறையை உடனடியாக அமுலுக்கு கொண்டுவருவது என்றும் தீர்மானிக் கப்பட்டது.

படிப்படியாக ஏனைய ஆலயங்க ளுக்கும் இந்த நடைமுறை விஸ்தரிக் கப்படும். நேற்றைய கலந்துரையாட லில் எடுக்கப்பட்ட ஏனைய தீர்மானங் கள் வருமாறு:-

☆இந்து குருமார்களை இனங் காட்டும் வகையில் இந்து குருமார் களுக்குரிய அடையாள அட்டையை இந்து கலாசார அமைச்சினூடாகப் பெற் றுக்கொடுத்தல்.

☆இந்து கலாசார அமைச்சின் ஊடாக இந்து ஆலயங்களுக்கு வேண் டிய பூஜை பாத்திரங்கள் மற்றும் பூஜை உபகரணங்களைப் பெற்றுக்கொள்ளு தல்.

☆தற்போது புதிதாக அமைக்கப் பட்டுவரும் குருகுலத்தை பராமரிப்ப தற்கான நடவடிக்கைக் குழு ஒன்றை அமைத்தல்.

☆யாழ்.குடாநாட்டுக்கு வருகை தரும் அமைச்சர்கள் மற்றும் நாடாளு மன்ற உறுப்பினர்கள், வெளிநாட்டுப் பிரதிநிதிகள் நல்லை ஆதீன முதல் வரை சந்திப்பதற்கு ஏற்பாடு செய்தல்.

☆பிரதேச ரீதியாக இந்து சிவாச் சாரியார்களின் விபரங்களைத் திரட்டு தல்.

☆இந்து குருமார்கள் அ[illegible]ரும் பொதுவானதொரு உடையை அணி தல்.

☆இந்து கலாசார அமைச்சின் ஊடாக இந்து குருமார்களுக்கான ஓய்வூதியத்திட்டத்தை அறிமு[illegible] செய் தல். (ஐ-5)

*(மற்றொரு செய்தி 2ஆம் பக்கத்தில்)*


**இலங்கை வங்கி அறிவித்தல்**

**வருட இறுதிக் கணக்குகளை முடிப்பதற்கு வசதியாக**

நாளை (31.12.2002) செவ்வாய்க்கிழமை சகல இலங்கை வங்கிக்கிளைகளும் வாடிக்கையாளரின் கொடுக்கல் வாங்கல்களுக்காக காலை 9.00 மணிமுதல் 10.00 மணிவரை மட்டுமே திறந்திருக்கும் என்பதை அறியத்தருகின்றோம்.

பிரதான முகாமையாளர்
*மேற்றரக்கிளை,*
*யாழ்ப்பாணம்.*

பிரதேச முகாமையாளர்
யாழ்ப்பாணம்.

(C/25707)

**முக்கிய அறிவித்தல்**

இலங்கையின் முன்னணி இணைந்த கணித ஆசிரியர்

**திரு. குணசிங்கம்**

கலந்துகொள்ளும் இலவச கருத்தரங்கு இன்று 8 a.m. நடைபெறும்.

(C/25755)

**NEW SCIENCE CENTRE**

**CMA / aat**

*Dear Student,*

நீங்களும் ஒரு தொழில்சார் வல்லுநராக முடியுமா?
நிச்சயமாக முடியும்!

மிகக் குறைந்த தகைமையுடன் குறைந்த செலவில் நீங்களும் ஒரு தொழில்சார் வல்லுநராகி எதிர்கால வேலை வாய்ப்புக்களை இலகுவாகப் பெற்றுக்கொள்ள உங்களையும் aat கற்கை நெறியுடன் இணைத்துக்கொள்ளுங்கள்.

*aat*க்கான அடிப்படைத் தகைமை.

**G.C.E. O/L 5 Pass**

விரிவுரைகள் ஆரம்பம்-05-01-2003

*Note - aat பதிவுகளின் இறுதித்தினம் 08-01-2003*

**CMA PROFESSIONAL-1, 2003 MARCH EXAM** இற்கு [illegible] 05-01-2003 ஆரம்பமாகின்றன.

SCREEN PRINTING பயிற்சி நெறிக்கான விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும்.

*தொடர்புகள்:*

**CAREER.COM INSTITUTE**
NO.79, MAIN STREET, JAFFNA.

*அலுவலக நேரம்:- திங்கள், புதன், வெள்ளி, சனி, ஞாயிறு* **10 a.m. - 2 p.m.**

(12435)


**மரண அறிவித்தல்**

**அப்பாக்குட்டி முருகேசு (அ.மு)**

**(முன்னாள் பிரபல வர்த்தகர், பொரளை - முருகேசு)**

புங்குடுதீவு கிழக்கு, 11ஆம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும் தற்போது 79/6, W.A.சில்வாமாவத்தை, வெள்ளவத்தையை வசிப்பிடமாகக் கொண்ட வருமான அப்பாக்குட்டி முருகேசு 29.12.2002 ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார், காலஞ்சென்ற அப்பாக்குட்டி - முத்துப்பிள்ளையின் அன்பு மகனும் சின்னத்தம்பி - முத்துப்பிள்ளையின் அன்பு மருமகனும் அன்னம்மாவின் அன்புக் கணவரும் பத்மசோதி (Berlin), அமிர்தரஞ்சிதம் (Canada), அமிர்தமலர் (Canada), இன்பவதனி, ரவீந்திரராஜா (A.M.T. Transport Service - Irupalai), தவேந்திரராஜா (Accountant, London), அமிர்தநாயகம் (Engineer - C.D.I. Engineer's pvt. Colombo), தனநாயகம் (A.M.T. Transports, Thulasi Trade Center - Colombo), கணேசலிங்கம் (U.S.A. Trading Company, Colombo), யசோதரா (Canada) ஆகியோரின் அன்புத் தந்தையும் காலஞ்சென்ற பாலசுப்பிரமணியம், தில்லைநாதன் (Canada), ராஜரட்ணம் (Canada), தர்மலிங்கம் (Tharsana Transport Service), யோகராஜா (Canada), உதயகுமாரி, ஜனனி, திருவேணி, நிர்மலா, தபோதினி ஆகியோரின் அன்பு மாமனாரும் காலஞ்சென்ற சோமசுந்தரம், சிவசரணம், சிவஞானம் (Canada), பார்வதி (Canada) ஆகியோரின் அன்புச் சகோதரரும் காலஞ்சென்ற நீ.மு.தியாகராஜா S.K.நடராஜா (Radio Ceylon), சோமாவதி, முத்தையா (Canada), Dr.சண்முகநாதன் (Colombo) ஆகியோரின் அன்பு மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் அவரது இல்லத்தில் நாளை (31.12.2002) செவ்வாய்க்கிழமை பிற்பகல் 1.30 மணிக்கு நடைபெற்று, பூதவுடல் 4.30 மணிக்கு கனத்தை இந்து மயானத்தில் தகனஞ்செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளும்படி கேட்டுக்கொள்ளப்படுகின்றார்கள்.

*79/6. W.A. சில்வாமாவத்தை,*
*வெள்ளவத்தை,*
*கொழும்பு - 6.*
*T.P. 587570, 505814.*

(12492)

தகவல்:
- மனைவி, பிள்ளைகள்.
அ.மு.ரவீந்திரராஜா (மகன்)
(A.M.T.)


கபிலா ✪ கபிலா ✪ கபிலா ✪ கபிலா ✪ கபிலா ✪ கபிலா ✪ கபிலா ✪ கபிலா ✪ கபிலா

இலவசம்! இலவசம்!! இலவசம்!!!

**மாணவர்களுக்குரிய.........**

கறுப்பு, வெள்ளை சப்பாத்து 'D.S.I.' ஒன்றிற்கு 'D.S.I.' றபர் சிலிப்பர் ஒன்று இலவசம். நீங்களும் பெற்றுக்கொள்ள...... முந்துங்கள்!!!

BATA | D.S.I.

**கபிலா காலணியகம்**

**KABILA SHOE PALACE**

24, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

☞ இச்சலுகை, புதுவருடப் பண்டிகைக்கு மாத்திரமே!

(12471)


(இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேட்) நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதி, 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 30.12.2002இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.